கல்கி

KALKI 25.6.89 ரூ. 2.



சத்துணவுடன் முட்டை:

அருமையான திட்டம்தான் ஆனாலும் கஷ்டம்தான்!

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது: பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

RK SWAMY/FSL/3112/TAM

இந்த இளைஞர் கேட்கிறார்....

"குட்டிக்கரணம் போட்டாலாவது வேலை கிடைக்குமா...?"



* தேவதாஸ்

"கோவையில் ரயில்வேயில் வேலை பார்த்து வந்த என் அப்பா அந்தோணி முத்துவுக்குத் திடீரென்று கண் பார்வை சரியில்லை என்று சொல்லி வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். அந்த 1978 இல் எங்கள் குடும்பத்தின் அச்சு முறிந்து போயிற்று. எங்கள் வீட்டில் மொத்தம் எட்டு நபர்கள். ஆண்கள் மூன்று பேர். பெண்கள் ஐந்து பேர். எல்லாமே அப்பாவின் முதல் தேதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ரகம். அப்பாவின் பென்சன் பணம்தான் எங்களுடைய அரை வயிற்றினை நிரப்பிக் கொண்டு வருகிறது. இந் நிலையில், என்னால் எஸ்.எஸ்.எல்.சி.க்கு மேல் ஓர் அடி எடுத்து வைக்க முடியவில்லை.

"ஆனால், குடும்பம் மொத்தமும் என் முகத்தையே பார்க்க ஆரம்பித்து விட்டது.



கல்யாணத்துக்கு இரண்டு தங்கைகள் நிற்கிறார்கள் ஒருபுறம். இன்னொரு புறம் சாப்பாட்டுப் பிரச்னை. நானும் பல இடங்களில் முட்டி மோதிப் பார்த்து விட்டேன். ஓர் இடத்திலும் வேலை கிடைக்கவில்லை. எத்தனையோ பேர் உயர் படிப்பு படித்து விட்டு நிறைய 'சாதனை' சர்டிபிகேட்டுகளைச் சுமந்து கொண்டு அலைகின்ற இந்தக் காலத்தில் நான் ஒரு சாதாரண எஸ்.எஸ்.எல்.சி.! யார் வேலை தருவார்கள்? அப்படியும் அலைந்து திரிந்து தினக் கூலி வேலை ஒன்றைத் தேடிக் கொண்டேன். கிடைத்த சம்பளம் என் பஸ் செலவுக்கே போதவில்லை! விட்டு விட்டேன்.

"என்னை விட அதிகம் படித்த சிலர் "இந்தக் காலத்தில் நீ குட்டிக் கரணம் போட்டாலும் உன்னால் ஒன்றும் சாதிக்க முடியாதுப்பா'' என்றார்கள். நான் யோசித்துப் பார்த்தேன். காலங் காலமாய் அந்தப் பழமொழியைச் சொல்லி வருகின்றார்களே! நாம் ஏன் குட்டிக் கரணம் போட்டே ஓர் உலக சாதனையை ஏற்படுத்தக் கூடாது? குட்டிக் கரணமும் ஒரு விளையாட்டு தானே?

"கடுமையான பயிற்சிக்குப் பின் என் எண்ணம் நிறைவேறியது. தற்போது என்னால் தொடர்ந்து நான்கு மணி நேரம் குட்டிக் கரணம் போட முடியும். அது மட்டுமல்ல தொடர்ந்து எட்டு மணி நேரம் பக்கவாட்டில் நடக்கவும் முடியும் (**side walking**)'' என்று பெருமிதத்தோடு கூறினார் தேவதாஸ்.

"இந்தப் பயிற்சியின் போது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் எப்படி?'' — என்று கேட்டோம்.

"இரவு 2.30 மணியிலிருந்து காலை 5.30 மணி வரை தினமும் பயிற்சி செய்தேன். அப்போதுதானே ஜன நடமாட்டம் இல்லாமல் இருக்கும்! அப்படியிருந்தும் ஒருநாள் திடீரென்று ஒரு காக்கிச் சட்டைக்காரர் வந்து என்னைத் தாக்கி விட்டார். அவர் செக்யூரிட்டி ஆள். நான் எவ்வளவோ அவரிடம் சொல்லிப் பார்த்தேன். ஆனால் நான் சொன்ன காரணம் அவருக்கு நம்

பிக்கையூட்டவில்லை. லத்தியைக் காட்டி மிரட்டினார். அதன் பின்பு நண்பர் ஒருவரைத் துணைக்கு வைத்துக் கொண்டு பயிற்சி செய்தேன்.

"ஆரம்ப காலத்தில் பயிற்சியின் போது லேசாகத் தலைவலி மட்டும் இருந்தது. இப்போது எந்த உபாதையும் இல்லை. இந்தக் குட்டிக் கரணத்தையே சாதனையாக்கி, கின்னஸ்ஸில் இடம்பெற வேண்டும் என்ற ஆவல்தான் இருக்கிறது.

"முழுப் பயிற்சியையும் பெற்றவுடன் லையன்ஸ் கிளப்பை அணுகினேன். அவர்கள் என் திறமையை அறிந்து பாராட்டினார்கள். அவர்களே வைஷ்ணவா கல்லூரி வளாகத்தில் 'குட்டிக்கரணச் சாதனையை' நடத்திக் காட்ட ஏற்பாடு செய்து தந்தார்கள். அங்கு நான் எதிர்பார்த்ததை விட நிறைய பாராட்டுக்கள் கிடைத்தன. என் ஆர்வம் இன்னும் அதிகமாயிற்று.

"அதன் பின்பு நான் வேறு பலர் ஆதரவில் பல இடங்களில் இதே சாதனையைப் புரிந்திருக்கிறேன்."

"குட்டிக்கரணம் போடுவதெல்லாம் போற்றுவதற்குரிய சாதனையாகி விடுமா? அதனால் யாருக்கு என்ன லாபம்?" என்று தேவதாஸைக் கேட்டால், "ஏன்! இரண்டு சக்கரத்தில் கார் ஓட்டுவதில் ஒருவர் உலக சாதனை புரிந்தார் என்று டி.வி.யில் பார்த்தோமே... அதனால் மட்டும் என்ன லாபம்?" என்று திருப்பிக் கேட்கிறார். "கல்வியில் எனக்குத் தகுதி குறைவுதான். ஆனால் உலக சாதனை புரிந்த விளையாட்டு வீரன் என்பதற்காவது எனக்கு எந்த நிறுவனமாவது வேலை வாய்ப்பு அளிக்காமலா போய் விடும்? வேலை கிடைத்தால் பிறவிப் பயன் பெற்றது போலல்லவா?"

நம்பிக்கையோடு காத்திருக்கின்றார் தேவதாஸ்.

சந்திப்பு: **பாரதிபாலன்.**

படங்கள்: **ஸ்ரீஹரி.**

கல்கி 2.7.89 — மாணவர் சிறப்பிதழ்

சிரிக்க, ரசிக்க, சிந்திக்க வைக்கும்.

சந்திப்பு:
வறுமையின் பிடியில் தத்துவம் பயின்ற மாணவர்.

உண்மைக் கதை:
"கஞ்சாவின் தளைகளிலிருந்து மீண்டு வந்தேன்"

உரையாடல்:
கிராமப்புறக் கல்லூரி; நகர்ப்புறக் கல்லூரி —
நிறைகுறைகள் என்னென்ன...?

மற்றும்

- மாணவ மாணவியர் உறவு
- நினைவில் நிற்கும் கல்லூரிச் சிறப்பு
- துணுக்குகள்
- செய்திகள்
- சிறப்புச் சிறுகதைகள்.



குங்குமப் பூ

தினசரி உணவில் குங்குமப் பூ சில இதழ்கள் சேர்த்து உண்டு வர கண் பார்வைக் குறை பாடுகள் வராமல் தடுக்கலாம். குங்குமப்பூ பல நோய்களைக் குணப்படுத்தக் கூடியது.



ஆதாரம்: மூலிகை மணி



எங்களிடம்

1. குங்குமப்பூ கோதுமை ஹல்வா
2. குங்குமப்பூ ஜாங்கிரி
3. குங்குமப்பூ லட்டு
4. குங்குமப்பூ பாதாம் ஹல்வா
5. குங்குமப்பூ பேடா

கிடைக்கும்

கல்யாண வைபவங்களுக்கு: சீர்முறுக்கு, சீர்முள்ளு தேன்குழல், தேன்குழல், சீர் அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்து தரப்படும்.


தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24-2-வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு
சென்னை - 600 020
போன்: 412557.



* ரங்கநாதன்: விரல் நுனியில் புள்ளி விவரங்கள்.


* நெருக்கடியான சிறுப்பாலம்.



மன்னார்குடி:

நெற்களஞ்சியத்தின் இதயப்பகுதி!

தமிழகமெங்கும் குடிநீர்ப் பற்றாக் குறை தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் வேளையில், மன்னார்குடியில் போய் இறங்கியதுமே, ''இங்கே குடிதண்ணீர் தாராளமாகக் கிடைக்கிறது சார்'' என்ற செய்தி காதில் விழுந்தது. பம்ப் அடித்து வலித்துப் போன தோள்களுடன் போய்ச் சேர்ந்திருந்த எங்களுக்கு இச்செய்தி ஒருபுறம் பொறாமையைக் கிளப்பினாலும் மறுபுறம் சந்தோஷமே ஏற்பட்டது. இந்த நல்ல நிலைமைக்கு நகரசபைத் தலைவர் சிவா ராஜமாணிக்கமும் ஒரு காரணகர்த்தா என்று சொல்லிக் கொண்டார்கள். அவ்வப்போது அவர் குடிநீர் சப்ளை செய்யும் ஆழ்குழாய்க் கிணறுகளை ஒரு ரவுண்ட் அடித்து, செக் அப் செய்வாராம்; மக்களுடன் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்வாராம். மன்னார்குடியின் முப்பது சதவிகிதப் பகுதியில் பாதாளச் சாக்கடையும் இயங்கி வருகிறதாம். நகர



* கோவிலும் கருடஸ்தம்பமும்.

* ஹரித்ரா நதி — நடுவே அழகிய கோவில்.



சபை லாரிகள் குப்பைகளைச் சுறுசுறுப்பாகவே அகற்றுவதாகவும், எங்களுக்குச் செய்தி சொன்னார்கள், ஊர் மக்கள் சிலர்.

இந்தச் செய்திகளெல்லாம் கொடுத்த உற்சாக மிதப்பில் டவுன் ஹோட்டல் ஒன்றில் ரூம் எடுத்துக் குளித்துச் சாப்பிடச் சென்றோம். தோசையைச் சட்டினியில் நனைத்து வாயில் போட்டால் நரநரவென்று பல்லைப் பதம் பார்த்தது. 'தெருப் புழுதி மண்ணெல்லாம் சட்டினியில்தான் போலும். இது மன்னார்குடி சார்' என்று விட்டடித்துப் பார்த்தார் புகைப்படக்காரர்.

''ஐயா! இந்த மன்னார்குடிக்குப் பெயர் வந்த காரணத்தைக் கண்டுபிடித்து விடுவோம்'' என்று அவரை இழுத்துக் கொண்டு கிளம்பினோம்.

'குடி' என்ற தெலுங்குச் சொல்லுக்குக் 'கோயில்' என்று பொருளாம். இவ்வூர் கோயிலில் எழுந்தருளிய பெருமாள் 'ராஜ மன்னார்.' எனவே, இதன் பெயர் ராஜ மன்னார்குடி என்று வழங்கியதாம். தற்போது சுருங்கி, மன்னார்குடியாகிவிட, பெருமாளுக்கும் ராஜகோபாலஸ்வாமி என்று 'கூப்பீடு' பெயர் நிலைத்து விட்டதாம்.

1072 — இல் முதலாம் குலோத்துங்க சோழன் அமைத்த கருவறையில் பெருமாள் பிரதிஷ்டை செய்யப்பட்டார். நாயக மன்னர்கள் காலத்திலும் அதற்குப் பிறகும் கோவில் பெரிதாக வளர்ந்தது. கோவிலைச் சுற்றி வந்தபோது, 'மன்னார்குடி மதிலழகு, திருவாரூர் தேரழகு' என்ற வழக்கு ஏன் வந்ததென்பது தெளிவாகப் புரிந்தது.

'64 கோயில்கள் 64 குளங்கள்' — இது தான் மன்னை' என்றார் நண்பர் ஒருவர். ஆனால் தற்போது பெரும்பாலான குளங்கள் தூர்ந்து போய்ப் பாழாகிவிட்டன. பல கோயில்களும் இடிந்து, சிதைந்து போய் விட்டன. ராஜகோபாலசுவாமி மட்டும் பிள்ளை வரம் வேண்டி வரும் தம்பதிகளுக்கு அருள் காட்டிக் கொண்டிருக்கிறார். குழந்






* பரிதாபமாகக் காட்சியளிக்கும் ஸ்டேஷன்.

* ராமானுஜ தீட்சிதர்: முப்பதிலிருந்து முந்நூறு வரை.



* கே. ஆர்.: அர்த்தமுள்ள வாக்குறுதிகள்.





* நடனம்: நிருபரின் பார்வையில்......



* லயன் சந்தானம்: ''மன்னை முன்னேற வில்லை...''

தைக் கண்ணன் விக்கிரகத்தைத் தம்பதிகள் கையில் கொடுத்து அவர்களை வேண்டிக் கொள்ளச் சொல்லும் சடங்கு இங்கே நடை பெறுகிறது. பக்தியோடு, நம்பிக்கைச் சுடர் விடும் கண்களுடன் தம்பதிகள் இதனைச் செய்வதைப் பார்க்க உருக்கமாய் இருக் கிறது.

கோயிலில் ஏழு கால பூஜை கிளிப்தமாய் நடக்கிறது. ராமானுஜ தீட்சிதர் முப்பது வரு டங்களாகச் சிரத்தையுடன் செய்து வருகிறார். அப்போதெல்லாம் மாதம் முப்பது ரூபாய் சம்பளம். இப்போது முந்நூறு! ராமானுஜ தீட்சிதரின் அப்பா சீனிவாச தீட்சிதர் பதினாலு ஆண்டுகளுக்கு முன் தமது எழுப தாவது வயதில் கோயிலுக்குள்ளேயே, செங் கமலத் தாயார் சன்னதியில் திருடர்களால் கொலை செய்யப்பட்டார். திருட்டுப் போன தாயாரின் நகைகள் எல்லாம் மீட்கப்பட்டு விட்டனவாம்.

கோயிலை விட்டு வெளியே வரும்போது, கோயில் தலைமை எழுத்தர் மகாலிங்கம் தென்பட்டார். தமிழ்நாடு முழுவதுமுள்ள திருக்கோயில் பணியாளர் யூனியனின் துணைப் பொதுச் செயலாளர். ''கிட்டத் தட்ட ஒரு லட்சம் ஊழியர்கள் இருக்கி றோம். சம்பளம் மிகக் குறைவு. பதவி உயர் வெல்லாம் குதிரைக் கொம்பு! எங்களை அரசுப் பணியாளர்களாக்க வேண்டி நீண்ட நாட்களாகப் போராடி வருகிறோம். எங்கள் கோரிக்கையை நீங்கள் எடுத்துச் சொல்லக் கூடாதா?'' என்றார். இதோ சொல்லி விட் டோம்!

கிழக்கு சோமால சமுத்திர வீதியில், கோயிலுக்கு எதிரில் 54 அடி உயரமுள்ள ஒற்றைக்கல் கருடஸ்தம்பம் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. கம்பத்தின் உச்சியில் கருடாழ்வாருக்கு ஓர் அழகிய சிறு கோயில். இது திருமங்கையாழ்வார் ஸ்தாபித்த ஸ்தம் பம் என்றார்கள்.

64 குளங்களுள் இன்றும் ததும்பிக் கொண்டிருப்பது ஹரித்ரா நதி என அழைக் கப்படும் தெப்பக்குளம். 23 ஏக்கர் பரப் பளவு! நடுவே சின்னதாக வேணுகோபால சுவாமி கோயில். கோபிலர் கோப்பிரளயர் என்ற இரு முனிவர்களுக்கும் பரந்தாமன் இத்தலத்தில் காட்சியளித்து, ஹரித்திரா நதி யில் கோபிகைகளுடன் ஜலக்கிரீடை செய்து அருளினாராம். கோபிகைகள் பூசியிருந்த மஞ்சள் (ஹரித்ரா) நறுமணப் பூச்சுக்கள் குளத்தில் படிந்தபடியால் ஹரித்ரா நதி என்று இதற்குப் பெயர் வந்தது எனக் கூறி னார்கள்.

செவிகொள்ளாத தலவரலாறுகளைத் தாங்கிக் கொண்டு மன்னையை ஒரு ரவுண்ட் அடிக்கக் கிளம்பினால், பழைய ரயில்வே ஸ்டேஷன் எங்களைத் தற்காலத்துக்குத் தடா லென்று இழுத்துப் போட்டது. ஸ்டேஷ னில் இருந்து கட்டை, ஓடு, செங்கல் என்று வசதிப்படி சாமான்களை உருவிக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்கள் மாண்புமிகு பொது மக்கள். மன்னைக்கு ரயில் போக்கு



* மகாலிங்கம்: ''எங்களையும் கவனியுங்கள்.''



* மன்னையில் கராட்டே வகுப்பும் உண்டு — பயிற்சி யாளர் ராஜகோபாலுடன் மாணவர்கள்.

NAVAJEEVAN SOCIAL WELFARE CENTRE

UNIT OF NBRC

Po- TIRUMALAHILLS VIA TIRUPATI : 517504

நவஜீவன் நற்பணி மன்றம் - திருமலை திருப்பதி ஸ்ரீ வெங்கடேச கோடி நாம எழுத்து வேள்வி இரண்டாம் பகுதி எஸ். வி. கே. 2 தேர்ந்தெடுக்கப் பட்ட ஆஸ்தீகர்களின் விவரம்.

ஸ்ரீகாஞ்சி சங்கராச்சாரியர் ஸ்வாமிகளின் விசேஷ அனுக்ரஹத்துடன் திருப்பதி - திருமலையில் 1989 மார்ச்சு முதல் தேதியில் இருந்து ஜுன் 9-ம் தேதி வரை 100 நாட்கள் நடைபெற்ற ஸ்ரீவெங்கடேச கோடி நாம எழுத்து வேள்வியின் இரண்டாம் பகுதியிலும் ஆயிரக்கணக்கான ஆஸ்திக அன்பர்கள் பக்தி சிரத்தையுடன் கலந்துக் கொண்டார்கள். எல்லா ஆஸ்திகர்களின் சார்பாகவும் விசேஷ பிராத்தனை பூஜை செய்வித்து ஸ்ரீஏழுமலையானின் உண்டியில் காணிக்கையும் சமர்ப்பித்து மஹா பிரசாதம் அனுப்பி வைக்கப்பட்டது. தவிரவும் ஜுன் 9-ம் தேதி உயர் மட்ட அதிகாரிகள் மற்றும் பக்தர்களின் முன்னிலையில் ஸன்னிதானம் அருகில் நவஜீவன் அலுவலகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 ஆஸ்தீகர்களுக்கு அவர்களின் இருப்பிடத்திலிருந்து இலவசப்புனித பயணமாக திருப்பதி வந்து செல்ல பஸ்-ரயில் சார்ஜை கணக்கிட்டு எம்.ஒ. மூலம் அனுப்பிவைக்கப்பட்டதுடன் பூஜைக்குரிய ஒரு வெள்ளி காசும் பிரசாதமும் ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் இந்த பக்தி வேள்வியில் கலந்து கொண்ட திருமணம் ஆகாதா பெண்களில் இருந்து 9 கன்னிப் பெண்களையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தங்கத்தில் திருமாங்கல்யம் வழங்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 100 ஆஸ்தீகர்கள் மற்றும் 9 கன்னிப் பெண்களின் பெயர்கள் கீழ் வருமாறு.

திருமாங்கல்யதானம்:-

1. Miss. Radha - Kadalagudi 2. Miss. P. Ansavalli - Manapparai. 3. Miss. R.P. Lalitha - Bombay 4. Miss. N.K. Jayalakshmi - Vellore. 5. Miss. RevathiKanan - Bombay. 6. Miss. T.V. Parimala - Madras. 7. Miss. S. Siyamala - Salem. 8. Miss. S. Rajeshwari - Madras. 9. Miss. Latha - Salem.

திருப்பதி புனிதப்பயணம்

1. S. V. Gowri. Coimbatore-45; 2. R. Ravindran, Madras-42; 3. Parvathi Natarajan, Madras-40; 4. Rajalakshmi Krishna Iyer, Mysore-24; 5. G. Sudarsan, Madras-78; 6. V. Ponnammal, Chittambalam; Chingleput; 7. K.V.S. Manian. Trichy-23; 8. Sarojini Devi, Madras-19; 9. K. Sathyavathi, Madras- 81; 10. N.M. Dakshinamurthy, Neyveli-3; 11. V. Krishnapriya, Madras-42; 12. Gnanavelu, Cuddalore-2; 13. C.V. Srinivasan, Nellore-3; 14. S. Eswarnayagi, Pollachi-1; 15. Gomathy Ramamurthy. Singapore 2880; 16. P.L. Chidambaram, Madras-19; 17. K. Narayanan, Hyderabad-34; 18. R. Murali, Bangalore-31; 19. Umadevi, Baroda; 20. N. Ragav, Madras-59; 21. Vasantharaja, H. Menon, Bombay-43; 22. Padmaseni Ammal, Salem-5; 23. H.M. Gangadaran, Thungabadra Dam. Hospet; 24. R. Bhuvaneswari, Keevalur, Thanjavur; 25. Chandrasekara Doha, Quatar, 26. C. Kalaiselvi, Bangalore- 39; 27. Chitra Valarmathi, Bhiwani, Haryana, 28. S.R. Usharani, Madras- 49; 29. M. Srinivasan, Kumbakonam-1; 30. Palanikumar, Cochin-35; 31. Usharani, Bangalore-37; 32. T.S. Ramachandran, Bombay-77; 33. K. Velliammal, Theni; Madurai; 34. Lalitha Subramanian, Ottankadu, Thanjavur; 35. Geetha Vijayakumar, Karishathan, Sankarankoil; 36. Vasantha Vaidyalingam, Bangalore-32; 37. S. Jayashree; Bhilai-6; 38. S. Geetha, Tirupati, 39. Radhika Janardhan, Pune-1; 40. R. Amirtha, Bombay-22; 41. Rajalakshmi, Kottayam-2; 42. V. Parimalam, Salem-14; 43. K. R. Subramanian, Bombay-19; 44. S.V. Lalithambal, Madras-61; 45. N. Perumal, Madras-35; 46. R. Rajashree,Calcutta-45; 47. Rajagopalalyengar, Nangavaram, Trichy, 48. S. Shailaja, Bangalore-55; 49. Jayalakshmi, Madras-17; 50. S. Swarnam, Alwaye, Kerala; 51. S. Aruna, Ariyalur; 52. V. Palagiappan, Madras-33; 53. V. Visalakshmi, Coonoor-2; 54. Chinnapillai, Kattuputhur; 55. R. Ganapathy, Madras-14; 56. Rukmani Krishnan, Salem-5; 57. T. Valliammal, Nagercoil; 58. Jayagowri Shankar, Koilpatti, 59. V.K. Raman; Madras-90; 60. S. Sudha, Bombay-19; 61. Sarjoja, Madras-17; 62. R. Ramamurthy, Lalgudi; 63. A. Sudha, Trichy-2; 64. S. Vedanayagi, Thanjavur-6; 65. M.A. Ramakrishnan, Tenkasi - Kadaikaal; 66. S. Venkatesakumar, Tirunelveli-2; 67. Umayal, Nagercoil-1; 68. Sathyabama, Pudukottai-1; 69. L. Bharathi, Pazhavanthangal, Madras- 114; 70. N.A. Krishnan, Ariyalur; 71. Meenakshisundaram, Madurai-10; 72. K.V. Ranganathan, Bombay-92; 73. N.D. Selvi, Veppathur; 74. N. Usha, Madras-41; 75. Bindumani, Bombay-93; 76. R. Parameswaran, Vashi, Bombay; 77. P. Narayanan, Madras-33; 78. K. Srinivasan, Delhi-16; 79. S. Balasubramanan, Chidambaram (Vallampadugai). 80. K. Dhanalakshmi, Coimbatore-43; 81. R. Lakshmi, Tatabad, Coimbatore-12; 82. Lakshmikanth, Thulagamuthur, Avinashi, 83. T.N. Varadarajan, Coimbatore-38; 84. Latha Muruganandan, Madras-40; 85. K.S. Kalpana, Delhi-3; 86. S. N. Ushadevi, Madurai-9; 87. Chitra Srinivasan, Pune-1; 88. Lakshmi Ayyappan, Borvile Bombay; 89. T.S. Sheela, Madras-101; 90. K.S. Sangeetha, Trichy-8; 91. Shrikanth P. Ghanaker-2; 92. C. Anusuya, Madras-102; 93. S. Amarvalli, Madras-39; 94. K.N. Venugopal, Kaki Mangalam; 95. G. Murthy, Penong, Malaysia; 96. Gayathri, Madras-93; 97. Vijaya Narasimhan, Nairobi, East Africa; 98. A. Senthamizhselvi, Madras-33; 99. Ranganayaki Padmanabhan, Coimbatore-38; 100. S. Rohini, Coimbatore-9.

"OM NAMO VENKATESAYA"



* மகளிர் அமைப்பு உறுப்பினர்கள்.

வரத்து நிறுத்தப்பட்ட பிறகு, ஸ்டேஷனைச் சுற்றிப் புதர் மண்டிவிட்டது. சமூக விரோதிகளுக்குக் கொண்டாட்டம்தான். ஏதோ, தண்டவாளங்களையாவது விட்டு வைத்துள்ளார்களே என்று ஆறுதல் அடைய வேண்டியதுதான்!

ஆமாம்! இந்த ஊர் போலீஸ் என்ன செய்கிறதாம்...? "மன்னை போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டரைச் சுற்றிக் குற்றவாளிகள் உட்கார்ந்திருக்கும் காட்சியைக் காணலாம் சார்!" என்றார் பத்திரிகை நிருபரும் நகரப் பிரமுகருமான து.ப.நடனம். "இடப் பற்றாக்குறைதான் காரணம்; லாக் அப் வசதிகள் இல்லை... போலீஸ் எண்ணிக்கையும் போதாது" என்று கூறும் நடனம் ஒரு ஜாதி சங்கத்தின் உறுப்பினர். இவ்வூர்க் கோயில் பிரம்மோத்ஸவத்தின் போது ஜாதிகளுக்குள் பலப் பரீட்சை நடக்குமாம்! எந்த ஜாதிக்காரன் எவ்வளவு ரூபாய்க்கு வாண வேடிக்கை நடத்தினான் என்று ஏகப் போட்டி!

இப்படி இருக்கையில் ஊர் முன்னேற வில்லை என்று சிலர் புலம்பி என்ன புண்ணியம்?! "கடந்த 120 வருடங்களாகவே இந்த ஊர் முன்னேறலை சார்" என்று குறைப் பட்டுக் கொண்டார் லயன் சந்தானம். "இத்தனைக்கும் இது தஞ்சை மாவட்டத்தின் மத்திய பகுதி. தலைநகராக இருக்க வேண்டிய இடம்... புதுசா வர்றது டீக்கடைகளும் டிபன் கடைகளும்தான்!"

புதுசாகச் செய்யாவிட்டால் போகட்டும். இருக்கிற வளத்தைக் கொண்டே முன்னேற முடியாதோ? ஏற்கெனவே உள்ள ரயில் பாதையைச் சரக்குப் போக்குவரத்துக்காவது பயன்படுத்தி லாரிகளையே நம்பியுள்ள (வருடத்துக்குச் சுமார் மூன்று லட்சம் டன்) நெல் போக்குவரத்தை நெருக்கடியின்றித் தொடரலாம்.

முத்துப்பேட்டை, திருவாரூர் பகுதிகளை மன்னையுடன் இணைக்கும் குறுகிய பாலத்தை அகலப்படுத்தித் தருவதாகவும் கோயிலைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் நடத்துவதாகவும் அர்த்தமுள்ள வாக்குறுதிகளைத் தந்துள்ள மன்னை தொகுதி தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர் கே. ராமச்சந்திரன் விவசாயத்துடன் தொடர்புடைய ஓரிரு தொழில்களை இந்த வட்டாரத்தில் தொடங்குவது பற்றியும் யோசித்துச் செயல்படலாம்.

'**பெ**ண்கள் கல்லூரி ஒன்று மன்னையில் வரவேண்டும்— இருக்கிற ஒரே கோ—எட். அரசுக் கல்லூரியில் மாணவர்கள் அடிக்கடி ஸ்டிரைக் செய்வதால் பெண்களுக்கும் படிப்பு கெடுகிறது' என்று பல தாய்மார்கள் சொன்னார்கள். "முதலில் பெண்கள் மேல் நிலைப்பள்ளி வரட்டும் 'ஐயா!'" என்றார் நண்பர் விஸ்வநாதன்.

இருப்பினும் மன்னை பெண்கள் ஜமாய்க்கிறார்கள். மன்னை மங்கையர் மன்றம், ஏழைக் குழந்தைகளுக்குப் படிக்க உதவி, ஏழைகள் திருமணத்துக்கு உதவி, போன்றவற்றைச் செய்து வருகிறது. இம்மன்றப் பணிகளை மன்னை அரசுக் கல்லூரி மாணவர் ஒருவர் ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளார் என்றால் பாருங்கள்! சொந்தக் கட்டடம் என்ற இலக்கை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது மன்றம்.


காவிரிப் பிரச்னை என்ன, தமிழகத்துக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டும், ஜில்லா முழுமைக்கும் எந்தப் பயிருக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டும் என்று விரல் நுனியில் புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு அள்ளி வீசினார் மிராசுதார் ரங்கநாதன். தஞ்சையில் உற்பத்தியாகும் எட்டு லட்சம் டன் நெல்லில் மூன்றரை லட்சம் டன் மன்னையின் பங்காம்! காவிரி நீர் இல்லாவிட்டால் விவசாயிகள் தவிர ஆறு லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றார். பகீரென்றிருந்தது.

வடுவூர் நாராயணன் செயலாளராக உள்ள இலக்கிய வட்டம் ஒன்று மன்னையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. பிரபல எழுத்தாளர்கள், கலைஞர்கள், மாதமிருமுறை கூட்டங்களில் பேச அழைக்கப்படுகிறார்கள். உறுப்பினர்கள் மட்டுமே அவர்களிடம் கேள்வி கேட்கலாமாம். கலைஞர் இங்கு பேசியதை (ஆட்சியில் இல்லாத போது) புத்தகமாக வெளியிட்டுள்ளார்கள்.

மன்னையில் யாரைக் கேட்டாலும் பெருமையாகச் சொல்வது மன்னை நாராயணசாமியைப் பற்றித்தான். இந்த முன்னாள் அமைச்சர் தமது பதவிக் காலத்தில் கல்லூரி, உரக் கலவைத் தொழிற்சாலை என்று சில புதிய வசதிகள் உருவாக வழி வகுத்தார். 'இப்போதும் தி.மு.கழக ஆட்சி தான் நடக்கிறது. மன்னை மனம் வைத்தால் கலைஞர் உதவுவார்' என்கின்றனர் மன்னார்குடி வாசிகள்.

— **ப்ரியன்**

படங்கள்: **ஸ்ரீஹரி**



மீண்டும் ராமராவ் ஒரு காதில் குண்டலம் அணிய ஆரம்பித்துள்ளார்-
எச்சரிக்கை!
நக்ஸலைட்டுகள் 30 நாட்களில் சரணடைய வேண்டும்!
தமிழ் நாட்டில் தினமும் கொள்ளைகள் நடப்பது சகஜமாகிவிட்டது
காவல் நிலையம்
தமிழக போலீஸின் மானம் மரியாதை
கொர்
ஜனதா தளம் உதய சூரியனைப் பொதுச் சின்னமாக ஏற்றுள்ள
உதயசூரியனுக்கு வாக்களிப்



கல்கி

1989 ஜூன் 25
மலர் 47 இதழ் 47
சுக்ல ஆனி 11



பல்லவன் மனப்பான்மை!

எத்தனையோ தடவை எடுத்துச் சொல்லியாகி விட்டது. ஜோக்குகள் போட்டாகிவிட்டது. எமதர்மராஜன் எருமைக்கடா வாகனத்தைத் துறந்துவிட்டுப் பல்லவன் பஸ்ஸைத் தனது வாகனமாக்கிக் கொண்டதாகக் கூடக் கார்ட்டூன் பிரசுரித்துப் பார்த்தாகி விட்டது. ஆனாலும் பல்லவன் மனப்பான்மை மாறவேயில்லை!

மணலியிலிருந்து புறப்பட்ட பஸ், கால்வாயில் கவிழ, இருபத்தைந்து பேர் அநியாயத்துக்கு உயிர் துறந்தார்கள். டிரைவர் டிஸ்மிஸ், மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதி உதவி, அமைச்சர்களின் ஆஸ்பத்திரி விஸிட், விபத்துக்கான காரணங்களை ஆராய ஒரு குழு என்று வழக்கமான செய்திகள் தொடர்கின்றன.

பல்லவன் வேகமாகப் போவதைத் தவிர்க்க பஸ்களில் "கவர்னர்" பொருத்தலாம். இந்தச் சுலபமான வழியைக் கூடப் பின்பற்ற முடியாமல் பல்லவனுடைய போக்கே பல்லவனைத் தடுக்கிறது! 'வீ' பஸ்கள் வேகமாகச் செல்ல நிர்வாகமே தூண்டுகிறது. ஊக்க போனஸ் வழங்குகிறது. 'வீ' பஸ்களின் வேகத்தைப் பார்த்து, சாதா பஸ் டிரைவர்களும் போட்டியில் இறங்குகிறார்கள். குறைந்தபட்ச 'ஸ்டாப்'களை உடைய பஸ், புயல் வேகத்தில் பறக்கத் தேவையேயில்லை. நாற்பது கி. மீ.க்குப் பதில் ஐம்பது கி. மீ. வேகத்தில் போனால், சென்னை போன்ற நகரின் போக்குவரத்து நெரிசலில், அதிகபட்சம் இரண்டு அல்லது மூன்று நிமிஷம் முன்னதாகப் போய்ச் சேரலாம். இதற்காக விபத்தை எதிர்கொண்டழைத்து, மேலுலகத்துக்கு முப்பது வருஷம் முன்னதாகப் போய்ச் சேர வேண்டுமா என்பதைச் சிந்திப்பது நல்லது.

'ஓவர்லோட்' ஆகி, மக்கள் தொத்தித் தொங்கிக் கொண்டிருக்கும் பஸ், ஒரு பக்கமாகச் சாய்ந்தபடி சாலையில் செல்வதைப் பார்ப்பவர்கள் கதிகலங்காமல் இருக்கவே முடியாது. தானியங்கு முறையில் மூடிக் கொள்ளும் கதவைப் பொருத்த அப்படியொன்றும் செலவாகி விடாது. ஆனால்தான் என்ன? கூடுதல் கட்டணம் வசூலிக்கப் போகிறார்களே! தொழிலகம் பள்ளி, கல்லூரி, காரியாலயம் இவை தொடங்கும் நேரத்தை எட்டு, எட்டரை, ஒன்பது, பத்து என்று மாற்றி அமைத்தால் ஓவர் லோடைப் பெருமளவில் தவிர்க்கலாம். எல்லோரும் நேரத்தோடு வேலைக்குப் போய்ச் சேரவும் செய்யலாம். ஆனால் 'கலெக்ஷ'னுக்கு நடத்துனருக்குத் தரப்படும் ஊக்க போனஸ், ஓவர் லோடை அதிகரிக்கவே செய்கிறது.

பஸ்களின் பராமரிப்பு அதிமுக்கியமானது. ஒவ்வொரு 'டிரிப்' முடிந்ததும் ஓட்டுனர், 'லாக் புக்'கில் தாம் பஸ்ஸில் ஏதும் குறை கண்டிருந்தால் அதை எழுத வேண்டும். மெக்கானிக் அதை உடனே கவனித்துத் திருத்திவிட்டு ரிப்போர்ட் எழுத வேண்டும். இவ்வாறு செய்தால், காரணமின்றி ஓட்டுனர் குறை எழுதவும் முடியாது; உள்ள குறை நிவர்த்திக்கப் படாமலும் இராது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பஸ்ஸும் புறப்படுமுன் ஒரு சோதனை ஓட்டத்துக்கு உள்ளாக வேண்டும். டயர், பாட்டரி, பிரேக் போன்ற முக்கியமான அம்சங்கள் விசேஷமாய்க் கவனிக்கப்பட வேண்டும்.

'எல்' போர்டு எழுதிய பஸ்ஸில் ஓட்டுனர்களுக்குப் பயிற்சி அளித்தால் மட்டும் போதாது. சாலை விதிகள், பஸ்களுக்கான பிரத்தியேக விதிமுறைகள், சைகைகள் காட்டுதல், பஸ்களில் ஏற்படக் கூடிய திடீர்க் கோளாறுகள் முதலியன பற்றிப் போதிக்கப்பட வேண்டும். பஸ் நிறுத்தத்தில் ஒரு பஸ்ஸும் ஓரமாக நிறுத்தப்படுவதில்லை. நடுச்சாலைதான்! பின்னால் வரும் பஸ், இதனை முந்த வசதியாக, முக்கால் சாலையை அடைத்துக் கொண்டு நிற்கும்! நிலைக் கண்ணாடி பொருத்தியிருப்பது அழகு பார்த்துக் கொள்ள அல்ல என்பதைக் கூடப் புரிந்து கொள்ளாமல், பஸ், திடீரென்று வலப்புறமாக 'லேன்' மாறிச் சீறிப் பாயும்!

ஓட்டுனருக்கு நரம்பியல், கண் பார்வை உள்ளடங்கிய மருத்துவச் சோதனை தவிர, மனோதத்துவ ரீதியான பயிற்சியும் தேவை. பஸ்ஸில் உயரமான ஆசனத்தில் உட்கார்ந்து மற்ற வாகனங்களைத் தாழ்ந்த நிலையில் பார்க்கும்போதே சிலருக்கு உயர்வு மனப்பான்மை வந்து விடுகிறது!

இத்தகைய பல்லவன் மனப்பான்மைகள் மாறாத வரை, விபத்தில் தொடங்கித் தலையங்கத்தில் முடிவடையும் தொடர்கதை மீண்டும் எழுதப் பெறும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

அமைச்சர் பேட்டி

அருமையான



ஜூன் மூன்றாம் தேதி முதல், தமிழக அரசு, சத்துணவுடன் முட்டையும் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. சத்துணவு அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசனைச் சந்தித்து இந்தத் திட்டம் பற்றிப் பல கேள்விகளைத் தொடுத்தோம்:

நிருபர்: சத்துணவுடன் கூட முட்டையும் சேர்த்து வழங்கும் திட்டம் உருவானது எப்படி?

அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன்: சத்துணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உணவு, புள்ளிவிவரப்படி, சத்தான உணவாய் இருந்தாலும், உண்மையில் அதில் போதுமான அளவு ஊட்டச் சத்து இருக்கவில்லை. தி.மு.கழகம், 'உண்மையான' சத்துணவு வழங்குவதைத் தேர்தலின் போது வாக்குறுதியாய்க் கொடுத்தது. எனவேதான் இயற்கையில் கிடைக்கும் முழுமையான சத்துணவான முட்டையையும் உணவோடு வழங்குவது என்று முடிவாயிற்று. இதற்கு விரிவான திட்டம் தீட்டப் பட்டது. திட்டத்துக்கு இன்னும் முழுமையான வடிவம் கொடுத்தபின் தான் அமல்படுத்துவதாய் இருந்தது. ஆனாலும், கலைஞரின் பிறந்த நாளான ஜூன் மூன்றாம் நாள் அதை ஆரம்பித்தால் சிறப்பாய் இருக்கும் என்பதால், ஜூன் மூன்றாம் தேதியே அமலாக்கப்பட்டது.

நிருபர்: முட்டை வழங்கும் திட்டத்துக்குச் செலவு எவ்வளவு ஆகும்?

அமைச்சர்: சத்துணவுத் திட்டத்துக்

அமைப்பாளர்களுடன் சந்திப்பு

...ஆனாலும் கஷ்டம்தான்!

சத்துணவுக் கூட அமைப்பாளர்கள் சிலரைச் சந்தித்தபோது, இந்த முட்டை வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்துகையில் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள்:

- முட்டை வாங்கும்போது, ஒவ்வொரு முட்டையையும் நல்ல முட்டையா என்று பார்த்து வாங்குவது என்பது சிரமமான காரியம். முட்டை சப்ளை செய்பவர்கள் மொத்தமாய் சப்ளை செய்யும் போது, ஒரு சில கெட்டுப் போன முட்டைகளைக் கலந்து கொடுத்துவிட வாய்ப்பிருக்கிறது. இவ்வாறு வந்து சேருபவை ஓரிரண்டு கெட்டுப் போன முட்டைகளானாலும் அவற்றுக்கு நாங்கள்தான் கைக்காசு போட்டு ஈடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அன்று இரண்டு குழந்தைகளுக்கு முட்டை கிடைக்காது.
- முட்டை வழங்கும் தினத்துக்கு முந்தைய தினம் பள்ளிக் கூடத்துக்கு வந்தவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில்தான் முட்டை சப்ளை செய்யப்படும். எனவே, முந்தையநாள் வராமல், முட்டை வினியோகிக்கும் நாளில் அதிகப்படி குழந்தைகள் வந்து விட்டால், பிரச்னை. சாப்பாடு போல அட்ஜஸ்ட் செய்து சமாளிக்க முடியாது; இதற்கும் அமைப்பாளர் கைவிட்டுத்தான் செலவழிக்க வேண்டும். குழந்தைகள் வராமல், முட்டை மிகுந்துபோய் விடும் பட்சத்தில் அவற்றைப் பத்திரமாய் உடையாமல் வைத்திருந்து, கணக்குக் காட்டுவது கஷ்டமான விஷயம்.

திட்டம்தான்!

கான வழக்கமான செலவைத் தவிர, முட்டை வழங்குவதனால், அரசாங்கத்துக்கு, ஆண்டுக்குப் பத்து கோடி ரூபாய் கூடுதலாய்ச் செலவாகும்.

நிருபர்: இந்தக் கூடுதல் செலவை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்?

அமைச்சர்: பட்ஜெட்டில் இதற்கு அதிகப்படியாய் ஒதுக்குவதன் மூலமாகத்தான். 'பட்ஜெட்டில் வருவாய் பெருக என்ன திட்டம்?' என்பீர்கள். அரசாங்கத்திற்கு எவ்வித பயனும் இல்லாமல், வீண் செலவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த பத்து வாரியங்களை ஒழித்தோமே! அத்தனை பணம் மிச்சம் தானே! அது மக்களின் வரிப் பணம் தானே! அதை, முட்டை வழங்குவது போன்ற பயனுள்ள சமுதாயத் திட்டங்களுக்குச் செலவிட்டால் என்ன?

நிருபர்: எந்த முறையில், முட்டை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தப் போகிறீர்கள்?

அமைச்சர்: சத்துணவு மையங்களில் காய்கறி முதலியவை வாங்குவது போல, முட்டையை வாங்கிக் கொள்ள அனுமதியளித்திருக்கிறோம். அமைப்பாளர்கள், குறிப்பிட்ட தினங்களில், முட்டைகளை வாங்கி, அவற்றை அவித்து, குழந்தைகளுக்கும், மாணவ, மாணவிகளுக்கும் வழங்குவார்கள். முட்டை வழங்கும் தினங்கள் மாநிலம் முழுவதும் ஒரே நாளாக இல்லாமல், பஞ்சாயத்து யூனியனுக்கு, யூனியன் வித்தியாசப்படும்படி வரையறுத்துக் கொள்ள உத்தரவிட்டிருக்கிறோம். இதனால் மாநிலம் முழுவதும், ஒரு சில தினங்களில் மட்டும், தேவை அபரிமிதமாகவும், மற்ற தினங்களில் தேவை குறைவாகவும் இருப்பதைத் தவிர்க்கலாம். மேலும், பஞ்சாயத்து யூனியன் அளவில், சத்துணவு மையங்களுக்கு முட்டை சப்ளை செய்யும் பணியை டெண்டர் விடுவது எதிர்காலத் திட்டம். அதற்கான முன் பணிகள் ஆரம்பமாகிவிட்டன.

நிருபர்: ஒரு முட்டைக்கு ஐம்பது காசு என்பது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது? சென்னையிலேயே அறுபது காசு முதல் எழுபத்தைந்து காசுவரை விலை வேறு படுகிறதே. அப்படி இருக்கும் போது, மாநிலம் முழுவதும் ஒரே விலை நிர்ணயிப்பது எப்படி சரியாகும்?

அமைச்சர்: முட்டை விலை, சில மாவட்டங்களில், ஐம்பது காசுக்கும் குறைவாய் உள்ளதே. ஐம்பது பைசா என்பது தோராயமானதுதான். அதிக விலையுள்ள பகுதிகளில், அதிகப்படியாய்ச் செலவு செய்ய அனுமதி உண்டு. இதுபோல விலை நிர்ணயம் செய்யாவிட்டால், அது முறைகேடுகளுக்கு வழிவகுக்குமில்லையா?

நிருபர்: தமிழ் நாட்டில், போதுமான அளவுக்கு முட்டை கிடைக்கிறதா?

- ஒவ்வொரு மையத்திலும் ஓரிரு முட்டை சாப்பிடாத குழந்தைகள் இருப்பார்கள். அவர்களுக்கு முட்டைக்குப் பதிலாக வேறு ஏதேனும் வழங்க வழியில்லை. சத்துணவு சாப்பிடும் 85 லட்சம் குழந்தைகளில் முட்டை சாப்பிடுபவர்கள் 82.5 லட்சம் என்கிறது புள்ளிவிவரம்.

- கடந்த ஜூன் மூன்றாம் தேதி முட்டை வழங்கும் போது ஒரு குழந்தை வராமல் போய்விட்டது. மறுநாள் குழந்தையின் பெற்றோர், "நேற்று என் குழந்தைக்குத் தந்திருக்க வேண்டிய முட்டையை இன்றைக்கு கொடு எனச் சண்டை பிடித்தார். நான் கைக்காசு செலவழித்துப் பிரச்னையைச் சமாளிக்க வேண்டியதாகிவிட்டது!

- முட்டையை வேக வைத்து, உரித்துத் தருகிறோம். இதற்கு அதிகப்படி எரிபொருள் வாங்க நிதி வசதி ஏதும் இன்னும் செய்து தரப்படவில்லை. வெந்த முட்டைகளை உரித்துத் தருவதற்கும் ஏற்கெனவே உள்ள ஆயாக்களைத் தான் நாங்கள் எதிர்பார்க்க வேண்டும். அவர்களுக்கு இது ஒரு கூடுதல் வேலைதான்.

— மௌஷ்மி.



அமைச்சர்: தமிழ்நாடு முழுவதற்குமாய், ஒரு தடவைக்கு 82 லட்சம் முட்டைகள் இத்திட்டத்துக்குத் தேவைப் படுகின்றன. தமிழ்நாட்டின் முட்டை உற்பத்தி கணிச மானது என்பதால், பிரச்னை ஏதுமில்லை (நாமக்கல் பகுதியில் மட்டும் நாளொன் றுக்கு 45 லட்சம் முட்டைகள் உற்பத்தியாவ தாய் ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது). தற் போது, தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் (டாப்கோ) சென்னை, மதுரை, கோவை போன்ற பெருநகரங்களில் உள்ள சத்துணவு மையங்களின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. பஞ்சாயத்து யூனியன் அளவில், கோழிப் பண்ணைகளை ஆரம் பித்து, முட்டை உற்பத்தி செய்து, சத்துணவு மையங்களுக்கு வழங்குவதற்காகப் புதிய கோழிப் பண்ணைகள் ஆரம்பிக்க முன் வருவோரைச் சிறப்புத் திட்டங்கள் மூலம் ஊக்குவிக்கப் போகிறோம். இதனால் கிரா மப்புறங்களில் வேலை வாய்ப்புகள் பெரு கக் கூடும்.

நிருபர்: மாதத்துக்கு இரண்டு நாள் முட்டை வழங்குவது, போதுமான சத்தை அளிக்குமா?

அமைச்சர்: இது ஓர் ஆரம்பமே. விரை விலேயே, வாரம் ஒரு நாள் முட்டை வழங்கு வதைச் செயல்படுத்தும் எண்ணம் அரசாங் கத்துக்கு உள்ளது.

நிருபர்: முட்டை வழங்குவதால், சத் துணவு மையங்களில் பணிபுரியும் அமைப் பாளர்கள், மற்றும் ஆயாக்களுக்கு வேலைப் பளு அதிகரிக்குமே! இதை ஈடுகட்டும் வகை யில் அதிகப்படி ஊதியம் தரப்படுமா?

அமைச்சர்: முட்டை வழங்குவதற்கென, அதிகப்படி ஊதியம் வழங்குவது என்பது சாத்தியமற்றது என்றாலும், சமீபத்தில் தமிழக அரசு அறிவித்துள்ள ஊதிய உயர்வு, சத்துணவு அமைப்பாளர்கள் ஆயாக்கள் ஆகியோருக்கும் உண்டே! அமைப்பாளர்கள் ரூபாய் நூறு வரையும், ஆயாக்கள் சுமார் இருபத்தைந்து ரூபாய் வரையும் அதிகப் படியாய்ப் பெறும்படி சம்பளவிகிதம் மாற்றியமைக்கப்பட்டுள்ள தே! இதுபோதாதா?

நிருபர்: சத்துணவுத் திட்டம் நல்லதுதான்; ஆனால் அதனைச் செயல் படுத்துவதில்தான் குறைபாடுகள்; முறைகேடுகள் உள்ளன என தி. மு. க. கடுமையாய் விமர்சித்தது. இப் போது தி.மு.க. ஆளுங் கட்சியாகிவிட்ட நிலையில், முறைகேடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க என்ன நடவடிக்கை இது வரை எடுக்கப்பட்டது? எதிர்காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

அமைச்சர்: நிர்வாக அளவில் இருந்த பெரிய குறைபாடு — சமூக நலத்துறை, கல்வித்துறை, வனத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள், பிற்பட் டோர் நலத்துறை என்று பல்வேறு அரசுத் துறைகளும், அமைப்புகளும் இதிலே சம் மந்தப் பட்டிருப்பதும், இவற்றுக்குள்ளே





ஜூன் 14 முதல் நாகர்கோவிலில் இருந்து வெளிவருகிறது

மாலை மலர்

முற்றிலும் மாறுபட்ட மாலை பத்திரிகை

சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம்
பாண்டிச்சேரியில் வெற்றிக்கொடி நாட்டிய
நடுநிலை நாளிதழின் 7 வது பதிப்பு.

மாலை மலர்
9, போலீஸ் ஸ்டேசன் ரோடு
நாகர்கோவில் - 629 001
போன் : 5869, 7269.

MAALAI MALAR
No.1 — Evening Tamil Daily
9, Police Station Road,
Nagercoil - 629 001
Phone : 5869, 7269

Adwise/1618/89

Simultaneously published from Madras, Madurai, Tiruchi, Coimbatore, Salem, Nagercoil and Pondicherry.

நல்லவிதமான ஒத்துழைப்பு இல்லாமல் இருப்பதும்தான். இதைச் சீர்செய்யும் வகையில், சத்துணவுத் திட்டத்தை சமூக நலத் துறை, உள்ளாட்சித்துறை ஆகிய இரண்டு துறைகளின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவிருக்கிறோம். மேலும் உள்ளூர் எம்.எல்.ஏ., பஞ்சாயத்து அளவில் உள்ள யூனியன் தலைவர், பி.டி.ஓ. — இவர்கள் தவிர, உள்ளூர்ப் பிரதிநிதிகள் இருவரும் கொண்ட கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட விருக்கின்றன.

சத்துணவு சாப்பிடுபவர்களுக்குத் தான் இலவசச் சீருடை, இலவச காலணி என்று இப்போது அரசின் ஆணை இருப்பதால், சீருடை, காலணிக்காகப் பல மாணவர்கள் சத்துணவு சாப்பிடுவோர் பட்டியலில் பெயர் கொடுத்து விடுகிறார்கள். ஆனால் சத்துணவு சாப்பிடுவதில்லை. பொய் செலவுக் கணக்கு எழுத இது வழி செய்கிறது. தவறு செய்ய வழி செய்து விட்டு, தவறு செய்யும் போது, 'ஏன் தப்பு செய்கிறாய்', என்று கேட்பதைவிட, தவறு செய்யும் வழிகளைத் தடை செய்வது தானே சிறந்தது? எனவே, சீருடை, காலணி, சத்துணவு மூன்றுக்கும் தனித்தனியே பயன் பெறுவோர் பட்டியல் தயாரிக்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

இவை தவிர, அவ்வப்போது திடீர் சோதனைகள், தவறு செய்வோர் மீது தக்க நடவடிக்கை ஆகியனவும் உண்டு.

பேட்டி — **எஸ். சந்திரமௌலி.**

அட்டை வண்ணப்படம் மற்றும்
படங்கள் — **யோகா.**

குமரி அனந்தன் கேட்கிறார்:

"கலைஞர் பெயரால்தான் வழங்க வேண்டுமா?"



"முட்டையும் பாலும் கொடுக்க வேண்டும் என்று சட்டசபையில் நான் பேசினேன். அதற்குக் காரணம்: முட்டையில் கலப்படம் செய்ய முடியாது!

"ஆனால், பதினைந்து நாட்களுக்கு ஒரு முட்டை கொடுத்தால் குழந்தைகளுக்கு முட்டையால் என்ன பயன் கிடைக்க வேண்டுமோ, அது கிடைக்காது. எனவே, ஒரு குழந்தைக்கு, ஒரு கோழியின் முட்டை என்ற அளவில் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும்.


"ஒரு ஏரியாவில் 200 குழந்தைகள் இருக்கின்றன என்றால், 250 அல்லது 300 கோழிகள் வளர்க்க வேண்டும். ஒரு கோழியை ஒரு குழந்தைக்கு என்று ஒதுக்கி விட வேண்டும். அந்த அளவுக்கு உற்பத்தி ஆக வேண்டும்இதனால் வேலை வாய்ப்பு அதிகரிக்கும்; பொருளாதார நோக்கில் பார்த்தால், சங்கிலித் தொடர் போல் பல நன்மைகளும் விளையும்.

"சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஒரு செய்தி போயிருக்கிறது. 'ஐம்பது பைசா வைத்து முட்டை வாங்க வேண்டும்' என்று. முட்டையின் விலை ஏறிவிட்டது. எழுபது பைசா ஆகிவிட்டது. மீதி இருபது பைசாவுக்கு யார் பொறுப்பு? மேலும் வாங்கும் முட்டையில் கெட்டுப் போனவை, சில இருக்கும். சில இடங்களில் முட்டையை இந்த விலைக்கு வாங்க முடியாததால் அரை முட்டை போட்டிருக்கிறார்கள்!

"அதனால், சத்துணவுத் திட்ட அரிசியும் பருப்பும் எப்படி சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் கொடுக்கிறதோ, அதே போல, முட்டை கொடுப்பதையும் அவர்களே எடுத்துக் கொள்ள வேண்டும்.

"மாவட்டங்களுக்குக் கூட தலைவர்களின் பெயர்களை வைக்கக் கூடாது" என்றார் கலைஞர். "தகுதி வாய்ந்த ஆட்கள் நிறைய இருப்பார்கள்; அந்த அளவுக்கு மாவட்டங்கள் இல்லை. எனவே என் காலத்தில் தலைவர்கள் பெயரால் நான் மாவட்டங்களுக்குப் பெயர் சூட்டவில்லை" என்றார். இப்போது தம் பெயராலேயே தமது பிறந்த நாளன்று கோழி முட்டை வழங்குகிறார்! கலைஞரே தலைவர்களென அங்கீகரித்த பலர் இருக்கையில் அவர் தம் பெயரால் இத்திட்டத்தை அறிவிப்பானேன்!

— சாருகேசி.




கதவை உடையுங்கள்!

குட்டைச் சிறுமூக்கால்
கூட்டின் உள்ஓடுகளைக்
கொரித்து உடைத்துத்தான்
விடுதலை வரும் என்று —
அந்தக் குருவிக்கு
யார் சொன்னது?

குமுறி விதம் விதமாய்க்
குவித்து வாய்மடித்துத்
திணறும் போதில்தான்
மொழி வரும் என்று —
அந்தக் குழந்தைக்கு
யார் சொன்னது?

மண்ணின் அழுத்தத்தை
மதிக்காமல் வெளிக்கிளம்பி
மெல்ல முளை விட்டு
மேலெழுந்து வா என்று —
அந்தச் சிறுவிதைக்கு
யார் சொன்னது?



விண்வீழ் சிறுதுளிகள்
வீணாகச் சிதறாமல்
மெல்லக் கைகோர்த்து
மேதினியில் நடைபயில —
அந்தச் சிறுநதிக்கு
யார் சொன்னது?

எண்ணப் பெருஞ்சுமையை
இறக்கிக் களைப்பாற
ஏடெடுத்துக் கிறுக்கிவிடு
எவ்வழியும் கவிபிறக்கும் — என்று
அந்த விரல்களுக்கு
யார் சொன்னது?

இறக்காத கதவுகளை
உடைத்து வெளிக்கிளம்பித்
தேசத்தைப் பார் என்றும்
தெம்போடு நட என்றும் —
இந்த மனிதனுக்கு
யார் சொல்வது?

சுப்ரபாலன்



விடியலை நோக்கி...

> இளைய தலைமுறையை... அவர்களின் எண்ணத்தைப் புரிந்து கொள்ளத் தெரியாத, நாலாந்தர அரசியல்வாதியை நம்பியா நம் எதிர்காலம் இருக்கிறது?

கும்பன் எக்ஸ்பிரஸ் புறப்பட யோசித்துக்கொண்டிருந்தது.

கலவையான குரல்களின் மோதலில் காற்றுக்கூட கலவரப்பட்டிருந்தது. பிளாட்பாரத்தின் அகலமான முதுகில் மனிதர்களின் முற்றுகை. வெளியூர் செல்ல வேண்டும் அல்லது யாரையோ வழியனுப்ப வேண்டும் என்கிற அக்கறை மனிதர்களை வேகவேகமாக இயக்கிக் கொண்டிருந்தது.

கும்பன் எக்ஸ்பிரஸின் வயிற்றுப் பகுதியில் — தனபாலும் எதிர் இருக்கையில் வாசுதேவ ராஜாவும் அமர்ந்திருந்தனர். தனது — எதிர்காலமே... இதோ எதிரில்... வண்டி நகர்ந்தவுடன் பர்த்தில் படுத்துப் பயணிக்கக் காத்துக்கொண்டிருக்கும் வாசுதேவ ராஜாவின் கைகளில்தான்; இவர் விரல் பட்டுத்தான் விடியப் போகிறது நம் வாழ்க்கை வானம் என்ற நினைவு தனபாலுக்குள் மண்டிக்கிடந்தது.

வாசுதேவ ராஜா—தனபாலுடைய அப்பாவின் சிலேட்டுப் பருவ சிநேகிதர். தனபால் பத்துநாட்களுக்கு முன்வரை இவரைப் பெயரளவில்தான் தெரிந்து வைத்திருந்தான். அரசியல் அவரது தொழில். அது அவருக்குச் சுற்றுப்புற மக்களிடம் ஒரு பிரபலத்தைப் பின்னிக்கொடுக்க... மனிதர் நாளொரு 'மைக்'கும் பொழுதொரு கூட்டமுமாய்ப் பெரிய ஆளாகியிருந்தார்!

வேலை வாய்ப்பு அலுவலகத்தின் கருணைப்பார்வை ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு தனபாலின் மேல்பட... கு.வ. வாரியத்தில் உதவி எழுத்தர் வேலைக்கு இண்டர்வியூ.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மகனுக்குக் கிடைத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள — தனபாலின் அப்பா, தமது அரசியல் நண்பரை, பழைய நட்பைச் சங்கிலியாக்கிக் கொண்டு பார்த்தார். அதன் பலன் இந்த ரயில் பயணம்.

''சர்க்கார்ல நமக்கு யாரைத் தெரியாது சம்முவம்? கவலைப்படாதே. நான் பார்த்துடறேன். எழிலகம் பார்த்திருக்கியா..... அதான்யா மெட்ராஸ்ல பீச்சுக்கு எதிர்த்தாப்பல நெட்டையா நிக்குமே சர்க்கார் கட்டடம். அது தமிழ் நாட்டுக்கு இதயம் மாதிரி... அதுல நாம சொன்னா எல்லாம் கேட்கும். என்கிட்ட சொல்லிட்டல்ல கவலையை வுடு.'' பத்து நாளைக்கு முன் வாசுதேவ ராஜா சொன்ன வார்த்தைகள்... தனபாலுக்குள் கனவு மாளிகையைக் கட்டியிருந்தன.

இப்போது தனபால் வாசுதேவ ராஜாவுக்கு முன் மரியாதையாய் அமர்ந்திருந்தான். இதுவரை இரண்டு மூன்றுமுறை சந்தித்தபோது வணக்கம் வைத்ததுடன் சரி. மற்றபடி அவருடன் பேசியதில்லை.

எப்படிப் பழகுவாரோ? என்ற பயப்

மானா. பாஸ்கரன்

பூச்சிகளின் படபடப்பு... அரசியல்வாதிகள் என்றால் இப்படித்தான் என்று அவன் மனசு வரைபடம் போட்டு வைத்திருந்ததும் ஒரு காரணம்.

''உன் பேரு என்ன சொன்னேடா?'' வாசுதேவ ராஜா கேட்டதும், தனபாலின் காதில் கெட்ட வார்த்தையைக் கேட்டதைப் போலிருந்தது. அவன் அப்பாகூட அவனை 'டா' போட்டு அழைத்ததில்லை. பொறுத்துக் கொண்டு,

''தனபால்'' என்றான்.

''பி.ஏ... மேத்ஸ் தானே நீ'' என்றார். தனபாலுக்குச் சிரிப்பும், எரிச்சலும் ஒரே சமயத்தில் வந்தது.

''பி.ஏ. எகனாமிக்ஸ்'' என்றான்.

''தனபாலு கீழே போய்ச் சிகரெட் வாங்கியா'' என்றார் ராஜா தமது நரை முடியைக் கோதிக்கொண்டே.

சரி சொல்லி எழுந்தவன் ''என்ன சிகரெட்'' என்றான்.

''பில்டர் வில்ஸ்... ஒரு பாக்கெட்'' என்றார்.

பையைத் தடவிக் கொண்டே, கீழிறங்கிச் சிகரெட் வாங்கிக் கொண்டு திரும்பினான். திரும்பறதுக்குள்ளே என்னென்ன செலவு வைக்கப்போறாரோ?செய்துதான் ஆகணும். அவர் முகம் கோணக்கூடாது. நமக்கு வேலை கிடைக்கணுமில்லையா... யோசனையோடு சிகரெட்டை அவரிடம் கொடுத்தான்.

''ஏம்பா சிகரெட் வாங்கினே சரி... நான் என்ன கட்டை விரலை உரசியா பத்த வைச்சுக்குவேன். இல்லை சிக்கி முக்கிக்கல்லு வைச்சருக்கேனா? போபப்பா தீப்பெட்டி வாங்கியா படிச்சவனுக்கு இதுகூடத் தெரியலையே...!''

தனபாலின் காதுவழியே கற்கள் பாய்ந்தன.

வாசுதேவ ராஜாவிற்கு எதிர்ப்பக்கம் அமர்ந்திருந்த தாவணிப்புறா தனபாலைப் பார்த்துக் 'களுக்'கெனச் சிரித்தது.

தீப்பெட்டி வாங்கிவந்து கொடுத்து விட்டு உட்கார்ந்து கொண்டான்.

ரயில் நகரத் தொடங்கியது...

வாசுதேவ ராஜா சிகரெட் பற்ற வைத்துக்கொண்டார். தனபால் ஜன்னல் வழி கண்களை வீசியிருந்தான். பெட்டி முழுதும் புகைப்படலம்... பவுடரைப் பறக்க விட்டது போல். சிகரெட் புகை தாங்காமல் ஒரு பெண்மணி இருமினாள். மூக்கை முந்தானையால் மூடிக் கொண்டாள்.

தனபாலுக்கும் இருமல் வந்தது. மூக்கைப் பிடித்துக் கொள்ளவேண்டும் போலிருந்தது. ஆனால் வாசுதேவ ராஜா தப்பாக ஏதாவது நினைத்துக்கொள்வாரே என்ற எண்ணம் தடை உத்தரவு பிறப்பிக்கப் பொறுத்துக்



கொண்டான்.

உடல் ஒத்துழையாமை இயக்கம் நடத்த... பொறுமைக்கூட்டம் உடைந்தது.

இருமினான். தொண்டையில் திரவம் திரண்டது. ஜன்னல் வழி துப்பினான்.

"என்ன தனபாலு காரித்துப்பறே...?" கேள்வி வா.தே. ராஜாவின் சிந்தனையை மொழிபெயர்த்தது.

"இல்லே சார் சிக...ரெட் புகை. இருமல் அதா...ன்" திக்கினான். வார்த்தைகள் நசுங்கி வெளிப்பட்டன.

"தியேட்டருல படம் பார்க்கிறப்ப சிகரெட் புகை வந்தா வெளியே வந்துடுவியாக்கும்...." அவரின் பேச்சில் கிண்டல் இருந்தது.

மீண்டும் அந்தத் தாவணிப்புறா ஓர் ஏளனப்பார்வையைத் தனபாலின் மீது எடுத்துவீசியது. தனபாலுக்குள் அது தன் மானக் குதிரையைப் பிடரி பறக்கக் கிளப்பி விட்டது.

உதடுகளைக் க டி த் து க் கொண்டு மௌனத்தைச் சாதகம் செய்தான்.

ஸ்டேஷனுக்கு வருவதற்குமுன் அவர் தண்ணி அடித்திருக்க வேண்டும். அவர் பேசும் போதெல்லாம் எழும்புகிற சல்ப் பேட்டர் நாற்றம் அதைச் சத்தியம் செய்தது.

தனபால் அவரைப் பார்க்க மனமின்றி—ஜன்னலின் வெளியே ஓடிய புள்ளிகளைப் பார்த்தான். வாசுதேவ ராஜா கனைத்தார். திரும்பிப் பார்த்தார்.

"இதை ஊதிக் கொடேன்" என்று கையிலிருந்த ஏர்—பில்லோவைக் கொடுத்தார்.

சிகரெட் ஊதமுடியுது. இதை ஊதிக்க முடியலையோ... நினைத்துக் கொண்டே... அதை வாங்கி ஊதிக் கொடுத்தான்.

ஏர்—பில்லோவைப் பெற்றுக்கொண்ட வாசுதேவ ராஜா மேலே பர்த்தில் ஏறி... பெட்ஷீட் விரித்துத் தலைக்குச் சுகமாய்த் தாங்கல் வைத்துக்கொண்டு படுத்தார்... கையைத் தூக்கி ஃபேனைத் தம் பக்கம் இழுத்து வைத்துக்கொண்டார்.

தனபாலுக்குக் கொஞ்சம் விடுதலை பெற்ற உணர்வு ஏற்பட்டது. ஆனால் அந்த சந்தோஷமும் சீக்கிரத்திலேயே கலைந்தது...

"ஏம்பா தனபாலு... உங்கப்பாரு எவ்ளோ பணம் கொடுத்தனுப்பியிருக்காரு" என்றார் ராஜா.

"நானூறு ரூபா" என்றான்.

"என்னடா நெனச்சிக்கிட்டீங்க உங்கப்பாரும், நீயும், மெட்ராஸ்ல எல்லாம் யானை விலை குதிரை விலை தெரியுமில்லே! டாக்ஸிலதான் சுத்தறாப்பல இருக்கும். மலையேறணும்னு ஆசைமட்டும் இருக்கு. கால் நோவுமேன்னு சொல்ற மாதிரியில்ல இருக்கு. ...சுண்டைக்காய்க் காசை எடுத்துக்கிட்டுக் கிளம்பிட்டே. உங்கப்பாருக்குத் தான் உலகம் தெரியாதுன்னா... படிச்சவன் உனக்குமா...." வாசுதேவ ராஜாவின் வார்த்தைகள் ஈட்டிகளாய் இறங்க... தனபாலுக்கு அழுகை அழுகையாய் வந்தது. கட்டுப்படுத்திக் கொண்டான்.

சைக்கிளிலிருந்து கீழே சரிந்தவன்...


Liril
THE FRESHNESS SOAP
கிளுகிளு பரவசக் களி:
லிரில் புத்துணர்வுக் குளி!
மனம் குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி
லிரில்
புத்துணர்வு சோப்

சுற்றுமுற்றும் பார்ப்பது மாதிரி... அந்த தாவணிப் பெண் கவனிக்கவில்லையே... என்று பார்த்துக்கொண்டான்.

நிமிடங்கள் தேய வாசுதேவ ராஜா தூங்கிப்போனார். தனபாலுக்குள் சுயகௌரவம் விழித்துக் கொண்டது. ஒரு நிமிடம் யோசித்தான்....

இளைய தலைமுறையை... அவர்களின் எண்ணத்தைப் புரிந்து கொள்ளத்தெரியாத, நாலாந்தர அரசியல் வாதியை நம்பியா நம் எதிர்காலம் இருக்கிறது?

மனித நேயம் என்றால் எந்த ஊர் தயாரிப்பு என்று கேட்கிற பேர்வழியா நமக்கு வெளிச்சம் காட்டப் போகிறார்? அடுத்தவர்களின் இல்லாமையை இயலாமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்கிற இவர்களைப் போன்றவர்களால்தான் தேசம் தேய்ந்து போகிறது. மனிதர்கள் இந்த மாதிரிப் பேர்வழிகளைத் தேடிப் போய்க் காலில் விழும் நிலைதான்... இதற்குக் காரணம்.

சிந்தனையின் பாதங்கள் இதயப்பரப்பில் நடந்து போக... பெட்டியை எடுத்து, திறந்து டைரியை எடுத்தான். டைரியின் வெற்றுப் பக்கம் ஒன்றைக் கிழித்து... பெட்டிமேல் வைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்தான்.

அன்பிற்குரிய, என்று ஆரம்பித்தவன், அன்பிற்குரிய என்பதை அடித்துவிட்டு, வெறுமனே எழுத ஆரம்பித்தான்.

வாசுதேவ ராஜா அவர்களுக்கு....

எனக்கான வேலையை நானே தேடிக் கொள்வது என்று முடிவு செய்துவிட்டேன். மனித பரிணாமத்தின் முதல் நிலையிலேயே இருக்கிற ஒருவரால் எனது விடியல் நிகழ வேண்டாம் என்று கருதுகிறேன். அந்த விபத்தைத் தவிர்க்க என்னையே நான் நம்பத்தொடங்கிவிட்டேன்.

ஆனால்.... ஒரு விதத்தில் உங்களுக்கு நான் நன்றி சொல்லவேண்டும். 'தன் கையே தனக்குதவி' என்பதை எனக்குப் புரிய வைத்தமைக்காக.

தங்கள் சிபாரிசை விரும்பாத,
எஸ். தனபால்

கடிதத்தைக் காயப்படாமல் மடித்து, வாசுதேவ ராஜாவின் தலையணைக்கு அடியில் வைத்துவிட்டு... வெளியே பார்த்தான். ரயில் குதிரை எலக்ட்ரிக் சேணம் பூட்டிக் கொள்ள விழுப்புரத்தில் நின்றிருந்தது...

பெட்டியை எடுத்துக் கொண்டு — கீழிறங்கி அவன் கால்களால் அவன் நடக்க ஆரம்பித்தான்.

அருள்வாக்கு



லஞ்சத்தைச் சோழ சாஸனத்தில் "கையூட்டு" என்று சொல்லியிருக்கிறது. ரூபாயிலே கை கொஞ்சம் டிரிக் பண்ணி டிராமா ஆடுவதை, விளையாடுவதைக் "கை ஆடல்" "கையாடல்" என்கிறோம். கையில் ஊட்டி விடுகிற மாதிரி ரஹஸ்யமாகப் பணத்தை வைத்து லஞ்சம் கொடுப்பதைக் "கை ஊட்டு" என்று அக்காலத்தில் சொல்லி வந்திருக்கிறார்கள். வாயில் சாதத்தை ஊட்டும் போது அது என்ன சாதம், அதற்குள்ளே என்ன 'தொட்டுக் கொள்ள' ஒளித்து வைத்திருக்கிறது என்பது எதுவும் வெளியில் தெரியாது. தட்டிலோ, கையிலோ போட்டு அதை ஒருவர் வாயிலே போட்டுக் கொள்ளும்போது பல பேருக்குத் தெரிவது போல இல்லாமல், யாருக்கும் தெரியாமல் ஊட்டி விட்டுப் போய் விடலாம். இதே போல யாருக்கும் தெரியாமல், எந்தக் கணக்கு வழக்கிலும் வராமல் பணத்தைக் கையிலே ஊட்டுகிற மாதிரி அமுக்கிவிட்டுப் போவது கையூட்டு! சாதத்தை வாய் முழுங்குகிற மாதிரி பணத்தைக் கை விழுங்கிவிடும்.

கையாடல் கூடாது என்பதற்காக ஸெக்யூரிட்டி கேட்பது போலத்தான், கையூட்டுப் பெறும் வாய்ப்பைக் குறைப்பதற்காகவே ஊர் ஸபைக் காரனாகிறவனுக்கு ஏதோ கொஞ்சம் பூஸ்திதி, வீடு என்றெல்லாம் இருக்க வேண்டுமென்று விதி செய்திருப்பது. ஆகவே இது ஸரியானால் அதுவும் ஸரிதான். இங்கே ஸமத்வம் அல்ல நடத்திக் காட்ட வேண்டிய விஷயம் — தூய்மையான நிர்வாகமே விஷயம். சபைக்காரன் பொதுப் பண நிர்வாகத்திலே தப்பு செய்துவிட்டானென்றால் அதனால் ஏற்படும் நஷ்டத்துக்கு அவனுடைய ஸொத்திலிருந்து 'அட்டாச்' செய்துவிட வேண்டும் என்பதாக வைத்து, இதற்கு ஸெக்யூரிட்டி மாதிரிதான் ஸொத்துத் தகுதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இங்கே தனி ஆளின் கௌரவ அகௌரவங்களைக் குறித்த ஸமத்வ வாதத்துக்கு இடமில்லை. ஓர் ஊரின், ஒரு ஜன சமூகத்தின் ஸொத்து நியாயமாகப் பரிபாலிக்கப்பட வேண்டும் என்ற தர்ம நியாயமான தத்துவம் தான் இங்கே கவனித்துப் பேணப்பட வேண்டிய விஷயம் என்பதைக் கருத்தில் கொண்டு அப்படியே செய்திருக்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



‘கல்கி’ கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை - ஏழை மாணவர்களுக்கு உதவி ரூ. 25,000/-

அறிவிற்சிறந்த ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ, மாணவிகளுக்குச் சென்ற இரு ஆண்டுகளாக கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை உதவி வருகிறது. இவ்வாறு உதவி பெற்றவர்களில் சிலர் உடல் ஊனமுற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சென்ற ஆண்டை விட இந்தக் கல்வி ஆண்டுக்கு (89 – 90) ரூ. 5000/– அதிகரித்து மொத்தம் ரூ. 25,000 உதவித் தொகை வழங்க அறங்காவலர்கள் தீர்மானித்துள்ளனர். இத்தொகை பின்வருமாறு விநியோகிக்கப்படும்.

பட்ட மேற்படிப்பை அல்லது ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிற மாணவர்கள் இருவருக்குத் தலா ரூ. 1500 வீதம் ரூ. 3000.

இசை அல்லது நாட்டியம் பயிலும் இருவருக்குத் தலா ரூ. 1000/– வீதம் ரூ. 2000/–.

பத்து கல்லூரி மாணவர்களுக்குத் தலா ரூ. 1000/– வீதம் ரூ. 10,000.

இருபது பள்ளி மாணவர்களுக்குத் தலா ரூ. 500 வீதம் ரூ. 10,000.

இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிக்கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. அவையாவன: தேசியக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி, திருச்சி; ஈ. ஆர். உயர்நிலைப் பள்ளி, திருச்சி; நகராட்சி மேல் நிலைப் பள்ளி, மயிலாடுதுறை.

இவை போக மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற, தமிழகமெங்கும் உள்ள கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

உதவித் தொகைகளைப் பெற மாணவ, மாணவிகள் படிப்பில் சிறந்தவர்களாகவும் அதே சமயம் கல்வியைப் பெற்றோர் உதவியுடன் மட்டும் தொடர முடியாத நிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த இரண்டையும் உறுதிப் படுத்தக் கல்லூரி அல்லது பள்ளி முதல்வரின் சான்றிதழுடன் விண்ணப்பிக்க வேண்டும். சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் நகலை, முதல்வரின் கையொப்பத்துடன் இணைப்பது அவசியம். சென்ற ஆண்டு விண்ணப்பித்தவர்கள் கல்வியைத் தொடர மீண்டும் விண்ணப்பிப்பதில் தடையில்லை. ஆனால் தகுதியின் அடிப்படையில்தான் அவர்களும் பிறருடன் போட்டியிட நேரும்.

வருகின்ற விண்ணப்பங்களை ஆராய்ந்து உதவித் தொகைகளைப் பெறத் தகுதியுள்ள மாணவர்களை அறங்காவலர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசித் தேதி:

ஜூலை 31, 1989.

கல்கி கிருஷ்ணமூர்த்தி ஞாபகார்த்த அறக்கட்டளைக்கு நன்கொடைகளும் வரவேற்கப்படுகின்றன. நன்கொடைகளை டிராஃப்ட் அல்லது எம். ஓ. அல்லது செக் மூலம் **KALKI KRISHNAMURTHY MEMORIAL TRUST** என்ற பெயருக்கு அனுப்பலாம்.

விலாசம்: நெ. 1, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034.

சென்ற இரு ஆண்டுகளில் இந்த அறக்கட்டளைக்கு மூலதன நிதியாகப் பல்வேறு அன்பர்கள் இட்டதட்ட இரண்டு லட்சம் ரூபாய் வரை வழங்கியிருக்கிறார்கள். கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு, வருமான வரி இலாகா அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன. நன்கொடைகளுக்குச் சென்ற ஆண்டு போல் இந்த ஆண்டும் வருமான வரி விலக்கு அளிக்கக் கோரிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

கி. ராஜேந்திரன்.
(ஆசிரியர், கல்கி)
நிர்வாக அறங்காவலர்.

திருத்தம்

சகுந்தலாதான் வந்திருந்தாள்.

'ஹோ'வென்ற இரைச்சலும், சிரிப்பும் அவள் அடையாளங்கள்தான்.

வாசல் நடையில் செருப்பை உதறிவிட்டு உள்ளே நுழைந்ததுமே யூகித்து விட்டேன். ஜானகியும் உறுதிப்படுத்தினாள். ஆபீஸ் 'பேக்'கை வாங்கிக் கொண்டவள் மெல்ல முணுமுணுத்தாள்.

"சக்கு வந்திருக்கா. பத்து நாள் தங்கப் போகிறாளாம்."

அதற்குள் சக்குவின் பெண்ணே ஓடி வந்து விட்டது. 'மாமா' என்று காலைக் கட்டிக் கொண்டது.

"என்னடி. அம்மாவோட வந்தியா..?"

"ம்.. அப்பா வரலே.. லீவு கிடைக்கலே." என்றது.

உள்ளே போனேன். அம்மா முகம் எங்கும் பிரகாசமாய்ச் சக்குவின் எதிரில் அமர்ந்திருந்தாள்.

".. வாங்கம்மா பெரிய மனுஷி! எப்படி இருக்கீங்க.." என்றேன்.

"... ஏதோ இருக்கேன்.." என்றாள் தோரணையாய். "நீங்கதான் பெரிய மனுஷங்க... அங்க வரவே மாட்டீங்க... அட.. அதான் போவட்டும்... அம்மாவையாவது அனுப்பலாம்.. அதுவும் கிடையாது."

"...வந்தா கூட்டிக்கிட்டுப் போயேன். யார் வேணாம்னாங்க?"

"ஏம்மா, நீ வரமாட்டியா?"

"அவன் கிடக்கான். நீ ஏண்டி அவன் கிட்டே பேசறே," என்றாள் அம்மா பொதுவாய்.

போக மாட்டாள். ஒவ்வொரு வருகையிலும் தவறாமல் சக்கு அழைப்பாள். போன வருஷமும் அழைத்தாள். பத்து நாட்களாவது இருந்துவிட்டு வருகிறேன் என்று போன அம்மா, மூன்றாவது நாளே திரும்பி விட்டாள்.

"ஏம்மா.. என்ன ஆச்சு?" என்றேன்.

"என்னவோடா.. என்னால் முடியலே.. பாவம் அவளுக்கு ஏன் சிரமம்னு வந்திட்டேன்."

பின்னால் ஜானகிதான் சொன்னாள்.

".. சாமர்த்தியக்காரிதான். அம்மாவை வச்சு பயங்கரமா வேலை வாங்கிட்டாளாம். அவங்க பாட்டுக்கு ஜாலியா வெளியே போயிட்டாங்களாம். அம்மாவால் முடியலே, கிளம்பி வந்திட்டா."

"வேறே மாதிரி சொன்னாளே.." என்று இழுத்தேன்.

"பெண்ணை விட்டுக் கொடுப்பாளா?"

மறுபடியும் இப்போது சக்குவின் வருகை. இந்த விஜயத்தில் என்னென்ன நிகழப் போகிறதோ....!

சொன்னபடி நகை தயாராகி விட்டது. போனஸாக வந்த பணம். உடன் கையிருப்பு கொஞ்சம் சேர்த்து நாலு பவுனில் சங்கிலி செய்ய ஆர்டர் கொடுத்திருந்தேன். செய்யக் கொடுப்பதற்கு முன்பே ஜானகியிடம் பேசி விட்டேன்.

"ஜானு.. உனக்கு ஆட்சேபணை இல்லியே..."

"என்னங்க இது... அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம்.. நான் இன்னைக்குக் காலையிலேயே சொல்லிட்டேன். எதுக்குமன்னாங்க..உங்க பையன் ஆசையாப் போடறார்... போட்டுக்குங்கன்னேன்."

நிஜமாகவே நெகிழ்ந்தேன்.

"தேங்க்ஸ்மா.. உனக்குச் செய்யலேன்னு வருத்தப் படுவியோன்னு.."

"சேச்சே.. அதான் போன தடவை எனக்குப் பிடிச்சது வாங்கிக்கிட்டேனே.." என்றாள்.

பரவசமாய் அவளை என்னுடன் இறுக்கிக் கொண்டேன்.

இப்போதுதான் குழப்பம். நகையைக் கொண்டு வந்தாகிவிட்டது. அம்மாவிடம் கொடுத்து... போட்டுக் கொள்ளச் சொல்லி... நமஸ்காரமும் செய்தாகிவிட்டது.

அம்மாவுக்குப் பெருமை கொள்ளவில்லை.

"நெஜம்மாகவே எனக்குத்தானே!" என்றாள் குழந்தை போல்.

"என்னம்மா இது. இப்படி கேட்கிறே... உனக்குத்தான். உனக்கே தான்."

எதிர்வீடு பக்கத்து வீடுகளுக்குக் கொண்டு போய்க் காட்டியாகி விட்டது.

சக்கு கூட சொல்லி விட்டாள்.

"இது நல்லா இருக்கும்மா.. ம்... பரவாயில்லே.. ஒம் பையன் உன்னை நல்லாத் தான் வச்சிருக்கான்."

மறு நாள் அம்மாவின் கழுத்தில் நகையைக் காணோம்.

"என்னம்மா.. எங்கே அது?"

"கழற்றி வச்சிருக்கேன்..

அப்போதுதான் எனக்குத் தோன்றியது. என்ன இருந்தாலும்... அம்மாவும் பெண்...

ரிஷபன்

முடியாது

தானே.. சக்கு கேட்டுவிட்டால் என்ன செய்வது என்று யோசித்திருப்பாளோ...

ஜானகியிடம் தனிமை கிடைத்த போது சொன்னேன்.

''அம்மாவுக்கும் ஆசைதான் போல்.. நகையைப் பத்திரமாய்ப் பூட்டி வச்சுட்டாளே''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''இல்லே... சக்கு கேட்பாளோன்னு பயப்படறாளா அம்மா..''

ஜானகி அழுத்தமாய்த் தலையசைத்தாள்.

''இல்லீங்க. எனக்கும் அதான் ஆச்சர்யம். சக்கு நல்லா இருக்குன்'னு சொன்னதோட சரி.. அப்புறம் சங்கிலியைப் பத்தி வாயே திறக்கலே. அம்மாதான் திடீர்னு கழற்றி வைச்சுட்டாங்க.''

''ஏனாம்?''

''இத்தனை நாளா எதுவும் போடாமே திடீர்னு போட்டதாலேயோ... என்னவோ தெரியலே.''

''உனக்குக் கொடுத்திருவாங்களா?'' என்றேன் என்னையும் மீறி.

''தெரியலே,'' என்றாள் யதார்த்தமாய். ''அம்மா பார்த்து என்ன செஞ்சாலும் சரி. அது அவங்களோடது.''

''வரட்டுமா?'' என்றாள் சக்கு.

வந்து பத்து நாட்களாகி விட்டன. இன்று ஊருக்குக் கிளம்புகிறாள்.

''பத்திரமா போயிட்டு வா.'' என்றேன்.

''கொஞ்சம் இருடி..'' என்றாள் அம்மா.

உள்ளே போய்த் திரும்பியவள் சட்டென்று சங்கிலியைக் கழுத்தில் மாட்டி விட்டாள்.


''.. ம்.... எதுவும் பேசாதே.. நீ வச்சுக்கோ.'' என்றாள்.

சக்கு ஒப்புக்கு ஏதோ சொல்லி.. மறுக்கப்பட்டு... முகம் முழுதும் மலர்ச்சியாய்க் கிளம்பிப் போனாள்.

''... என்னம்மா.. இப்படிப் பண்ணிட்டே. உனக்காகத்தானே ஆசையா பண்ணிப் போட்டேன்.'' என்றேன் ஆற்றாமையுடன்.

''உன் ஆசைக்கு ஒருநாள் நான் போட்டுக்கிட்டேன். இப்ப என் ஆசைக்கு அவளுக்குப் போட்டுட்டேன்.'' என்றாள் அதே குழந்தைத் தனமாய்.

இந்த அம்மாக்களைத் திருத்தவே முடியாது.



TAKE A SEA SIDE BREAK
TASTE SOMETHING SPECIAL AT

MOTEL
LEEL MAHA

FAST FOOD AND DRIVE-IN A/C RESTAURANT
Neelankarai, Madras 600 041.
Phone : 410906/416820.



A place where you can enjoy with your family, relatives and friends. Find peace, pleasure and lively fun on the green lawns near the bay; Let your tongue choose the taste from a variety of South Indian, North Indian, Chinese and Continental delicacies with attractive receipes.

The taste of Leel Maha will remind you to make many more visits for new receipes.

We offer an ideal comfort package of FOOD 'N' FUN on the Sun-lit beaches and Moon-lit nights.

Leema Ice creams is our added speciality. Taste the delicious flavours.

Cottages can be arranged & catering also undertaken

Please watchout for our branches shortly in the heart of the city!

BRANCH

LEEL MAHA

A/C RESTAURANT

181, North Usman Road, T. Nagar, Madras 600 017. Phone : 440992 / 443819

MLM/TAC/1010

பாவேந்தர் நூற்றாண்டு:



பாவேந்தரின் பாதையை முக்கியமான மூன்று துறைகளில் பார்க்க வேண்டும். 'கடினமான பாட்டு வேண்டுமா, கனக சுப்புரத்தினத்திடம் போ' என்று சொல்லுமளவுக்குச் சந்த ஒழுங்கு மட்டுமே முக்கியம் என்று பாடல்கள் எழுதிய காலம் ஒன்று! இக்காலத்தில் தான் கடவுளைப் பற்றிய பல பாடல்களை — குறிப்பாக முருகன் மீதான பாடல்களைப் பாவேந்தர் எழுதினார்.

பாவேந்தரின் புலமை நலமும், முருகன் பெருமையும் ஒருங்கிணைந்ததாக 'மயிலம் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது' என்னும் நூல் காணப்படுகிறது. புதுவையிலிருந்து இருபது கல் தொலைவில் உள்ள மயிலம் மலைக்கோவில் முருகன் மீது ஒரு மாசிமக விழாப் பந்தலில் பாடி அரங்கேற்றப்பட்ட நூல் இது.

'மாசி மகோத்சவ மாமிந்த நாள் எங்கள்
மயிலாசன னேவந்தனன்
பாசாதி பந்தம் கடந்தோம், கனிந்தோமவ்
விசன் தரிசனம் பெற்றதினால்..'

ஆரம்பம்: முருக தாசன்; முடிவு: உலக நேசன்!

அன்றைய நாடகக்காரர்களுக்கும் பல பக்திப் பாடல்களைப் பாவேந்தர் எழுதித் தந்துள்ளார்.

இரண்டாவது துறையாகப் பாவேந்தர் மேற்கொண்டது பாரதியின் உறவால் ஏற்பட்ட தேசிய இயக்கம். புதுச்சேரிக்கு பாரதி வந்த பின்னரே பாவேந்தர் தேசியக் கவிஞராக மாறுகிறார். 1930 இல் எழுதிய கதர் ராட்டினப் பாட்டு என்று ஒன்று. 'ஒண்ணரை அணா' விலையில் அப்போது வெளியிடப்பட்டுள்ளது. 'சி. சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த பாரதி தாசன் இயற்றியவை' என்ற குறிப்புடன், பல தேசிய கீதங்கள் வெளிவந்துள்ளன. பாவேந்தரின் தேசிய விடுதலை உணர்வை அவருடைய கடவுள் வணக்கப் பாடல்களிலும் கூட நாம் காண முடிகிறது. நாட்டுக்கு விடுதலை நல்குமாறு முருகப் பெருமானை மனமுருக வேண்டும் பாடல் ஒன்று உண்டு.

"வீழ்தலும் யாம் வாழ்தலுமே வேலவா
உன் கையிலுண்டு...
வீணில் நாங்கள் பட்டதெல்லாம்
சொல்லவோ நின்பால்
வேண்டிநிற்பதெல்லாம்இன்பமல்லவோ..
ஆழ்கடல் புவிமேலெமக் கினிதான
பாரத பூமியை நீ
அட்டதிக்கும் போற்றும் வண்ணம்
ஆக்குவாய் — வானில்
எட்டவே உரிமைக் கொடி தூக்குவாய்"

மகாகவி பாரதிக்குக் கிடைத்திராத வாய்ப்பு ஒன்று பாவேந்தருக்குக் கிடைத்தது. அதுதான் கதர் இயக்கம் பற்றியும், மதுவிலக்குப் பற்றியும் பாடல்கள் எழுதிய வாய்ப்பு.

பின்னர், சமுதாய விடுதலையற்ற அரசியல் விடுதலை பயன்தராது என்ற தந்தை பெரியாரின் கொள்கை பாவேந்தரை ஈர்த்தது. பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு முழுமையான புரட்சிக் கவிஞராக மாறுகிறார் அவர். இது மூன்றாவது கட்டம்.

பொதுவுடைமைக் கொள்கைக்குப் பாவேந்தரை விடச் சிறப்பாகப் பாடியவர்கள் கிடையாது என்றே சொல்லலாம்.

எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும்
உடைமையெலாம்

எல்லார்க்கும் எல்லா உரிமைகளும்
ஆகுகவே...

போன்ற பல பாடல் களைக் குறிப்பிட வேண்டும். இருப்பினும் பல்வேறு வகைப் பட்ட அரசு அமைப்பு முறைகளைப் பற்றி அழுத்தமான ஓர் உருவகப் பாடலைப் பாடியுள்ள வகையில் பாவேந்தர் தனித் தன்மை பெறுகிறார். அந்தப்பாடல் —

இரண்டு கறவைகள் உன்னிடம்
இருந்தால்
அண்டை வீட்டானுக்கு ஒன்று அளித்தல்—
'சோசலிசம்'
கறவைகள் இரண்டில் கடிதொன்றை
விற்றுக்
காளை வாங்குவது 'காப்டலிச' மாம்!
ஆ இரண்டனையும் ஆள்வோர்க்கு
விற்றுத்
தேவைக்குப் பால்பெறச் செப்பல்
'கம்யூனிசம்'
பகர் இரு கறவையைப் பறித்த
ஆள்வோரிடம்
தொகைதந்து பால்பெறச் சொல்வது
'பாசிசம்'
உரியவன் தன்னை ஒழித்தே அவனின்
கறவை இரண்டையும் கைப்பற்றல்
நாசிசம்'
இரண்டு கறவையால் திரண்டபால்
அனைத்தையும்
சாக்கடைக் காக்குவது தான்
'நியூடிலிசம்'!
எதனை இவற்றில் ஏற்பாய்?
அதனை உன் நாட்டுக்கு ஆக்குக தோழனே!

அத்தனை ''இசங்களின்' விளக்கத்தையும் எவ்வளவு அழகாக இந்தக் கவிதை பேசுகிறது பாருங்கள்!

சுயமரியாதை இயக்கக் கவிஞராகக் கடைசி வரை திகழ்ந்த பாவேந்தர் நாட்டு ஒருமைப் பாட்டிலும் அதற்கும் மேலாக ஓர் உலகக் கொள்கையிலும் மிகுந்த நாட்டமுடையவராக இருந்தார்.

"புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு
சாய்ப்போம்"

என்ற பாடலும்,

இருட்டறையில் உள்ளதடா உலகம்—சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே

என்ற பாடலும் அவருடைய உலகளாவிய பொது நோக்குக்குக் கட்டியம் கூறும் பாடல்கள்.

தாயுள்ளம் பற்றிய பாடல் ஒன்று பாவேந்தரின் 'குடும்ப விளக்கு' நூலில் வருகிறது. இவ்வளவு அழுத்தமாகத் தாயன்பை வேறு யாரேனும் கூர்ந்து நோக்கி வெளிப்படுத்தியிருப்பார்களா என்பது ஆய்வுக்குரிய ஒன்று. அக்காட்சியைப் பார்க்கலாம்.

இரவு நேரம். நகை முத்து தன் குழந்தையை அருகே கிடத்தி ஒருக்களித்துப் படுத்தவளாய்த் தன் இடக்கையைக் குழந்தை மீது சின்னக் கூடாரமாக்கித் துயில்கிறாள். கணவன் இதனைப் பார்க்கிறான்.

'ஒரு நூலே புரண்டாளேனும்
தெருவினை ஒக்கச் செய்யும்
உருளையின் கீழ் மலர் போல்
ஒழியுமே என் குழந்தை!
தெரியவே இல்லை இஃது
தெரிவைக்கு...

என நினைத்தான். மங்கையை எழுப்ப நினைக்கிறான். அவள் சூடிக் களைந்து எறிந்திருந்த மலர்க் கண்ணியை எடுத்து அவள் முகத்தில் போடுகிறான். அவள் விழித்தாளில்லை. சரி குழந்தையையாவது எழுப்பலாம் என நினைத்தவனாய், மலர்க் கண்ணியிலிருந்த ஒரு மலரை எடுத்து அதன் ஓர் இதழைக் கிள்ளிக் குழந்தை மீது போடுகிறான். உடனே குழந்தை மீது கூடாரமாக நின்றிருந்த தாயின் கை வருகிறது. மலரிதழைத் துடைக்கிறது. மறுபடியும் பழைய படியே சென்று கூடாரமாக நிற்கிறது.

தலைவனோ இதனைக் கண்டான்
தாய் மையின் ஆற்றல் கண்டான்.

என்று குதிபோடுகிறது கவிமனம்!

கட்டுரைக்கான தகவல்கள் உதவியவர்:
சிலம்பொலி சு. செல்லப்பன்
தொகுப்பு: யெஸ்பால்



அரசியல்வாதி: சினிமாத் துறையிலே கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புக்களை ஏற்றவராக இருக்கலாம். அதற்காக நம் கட்சியில், தலைவர், பொருளாளர், செயலாளர் ஆகிய எல்லாப் பதவிகளும் வேண்டும்னு கேக்கறது நல்லா இல்லைங்க...

— பெ. நம்பியார்.

பொன்னியின் செல்வன்

ஏழாம் அத்தியாயம்
மக்கள் குதூகலம்

ஓடக்கார முருகய்யன் தன் மனைவி போட்ட கூக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திகைத்தான். மறுபடியும் அவளைப் பார்த்துக் கையினால் சமிக்ஞைகள் செய்து கொண்டே, ''பெண்ணே! என்ன உளறுகிறாய்? உனக்குப் பைத்தியமா?'' என்றான்.

''எனக்கு ஒன்றும் பைத்தியமில்லை. உனக்குப் பைத்தியம்; உன் அப்பனுக்குப் பைத்தியம்; உன் பாட்டனுக்குப் பைத்தியம். உனக்கு இவரை அடையாளம் தெரியவில்லையா? ஈழத்தை வெற்றி கொண்டு மன்னன் மகிந்தனை மலை நாட்டுக்குத் துரத்திய வீராதி வீரரை உனக்கு இன்னாரென்று தெரியவில்லையா? சக்கரவர்த்தியின் திருக்குமாரரை, சோழ நாட்டு மக்களின் கண்ணின் மணியானவரை, காவேரித் தாய் காப்பாற்றிக் கொடுத்த தவப் புதல்வரை உன்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையா? அப்படியானால், இவரோடு எதற்காக நீ புறப்பட்டாய்? எங்கே போகப் புறப்பட்டாய்?'' என்றாள் ராக்கம்மாள்.

இளவரசர் இப்போது குறுக்கிட்டு, ''பெண்ணே! நீ என்னை யார் என்றோ தவறாக நினைத்துக் கொண்டாய்! நான் ஈழ நாட்டிலிருந்து வந்த வியாபாரி. நான் தான் இவனை என்னுடன் வழி காட்டுவதற்காக அழைத்துக் கொண்டு புறப்பட்டேன்! இவன் யார்? உன் கணவனா? வேணுமானால் இவனை உன்னோடு அழைத்துக் கொண்டு போ! வீண் கூச்சல் போடாதே!'' என்றார்.

இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்த போதே அவர்களைச் சுற்றிலும் ஜனங்கள் கூடி விட்டார்கள். கூட்டம் நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டிருந்தது. வந்தவர்கள் எல்லாரும் இளவரசரை உற்றுப் பார்க்கலானார்கள்.

அப்போது ராக்கம்மாள் இன்னும் உரத்த குரலில், ''ஆ! தெய்வமே! இது என்ன? பொன்னியின் செல்வருக்குச் சித்தப் பிரமையா? கடலில் முழுகிய போது நினைவை இழந்து விட்டீர்களா? அல்லது அந்தப் பாவி புத்த பிக்ஷுக்கள் இப்படித் தங்களை மந்திரம் போட்டு மயக்கி வேறொருவர் என்று எண்ணச் செய்து விட்டார்களா? அல்லது, — ஐயையோ! — அப்படியும் இருக்குமா? தாங்கள் இறந்து போய், தங்கள் திருமேனியில் வேறு எவனேனும், கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை தெரிந்தவன், வந்து புகுந்திருக்கிறானா? அப்படியெல்லாம் இருக்க முடியாது! கோமகனே! நன்றாக யோசித்துப் பாருங்கள். தாங்கள் வியாபாரி அல்ல. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் திருப் புதல்வர். உலகத்தை ஒரு குடை நிழலில் ஆளப் பிறந்தவர். சந்தேகமிருந்தால் தங்கள் உள்ளங்கைகளைக் கவனமாகப் பாருங்கள். சங்கு சக்கர ரேகைகள் இருக்கும்!'' என்று கத்தினாள்.

உடனே இளவரசர் அருள்மொழிவர்மர் தம் இரு கைகளையும் இறுக மூடிக் கொண்டார்.

அமரர் **கல்கி**

"பெண்ணே! நீ வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்க மாட்டாயா!" என்று சொல்லி விட்டு, முருகய்யனைப் பார்த்து, "இது என்ன தொல்லை? இவளுடைய கூச்சலை நிறுத்த உன்னால் முடியாதா?" என்று கேட்டார்.

முருகய்யன் தன் மனைவியின் அருகில் வந்து காதோடு, "ராக்கம்மா! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும்! பேசாமலிரு! இளவரசர் யாருக்கும் தெரியாமல் வியாபாரி வேஷத்தில் தஞ்சாவூர் போக விரும்புகிறார்!" என்றான்.

"அடபாவி மகனே! இதை முன்னாடியே சொல்லியிருக்கக் கூடாதா? புத்த மடத்தில் இளவரசர் இருக்கவே மாட்டார் என்று சொன்னாயே? அந்தப் புத்தியோடுதான் இப்போதும் இருந்திருக்கிறாய். ஐயையோ! என்ன குற்றம் செய்து விட்டேன்! ஆசை மிகுதியால் உளறி விட்டேனே? பாவிப் பழுவேட்டரையர்கள் தங்களைச் சிறைப் படுத்திப் பழிவாங்கச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே! அது தெரிந்திருந்தும் இப்படித் தங்களைப் பகிரங்கப்படுத்தி விட்டேனே? இளவரசே! ஆனாலும் நீங்கள் அஞ்ச வேண்டாம். பழுவேட்டரையர்கள் தங்கள் திருமேனியில் ஓர் அணுவுக்கும் தீங்கு செய்ய முடியாது. என்னைப் போலும் என் கணவனைப் போலும் லட்ச லட்சம் பேர்கள் தங்கள் கட்சியில் நின்று தங்களைப் பாதுகாக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்!" என்றாள். உடனே தன்னைச் சுற்றிலும் நின்ற பெருங் கூட்டத்தைப் பார்த்து, "நான் சொன்னதை நீங்கள் எல்லாரும் ஆமோதிக்கிறீர்கள் அல்லவா? உங்களில் யாரேனும் பழுவேட்டரையர் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்டா? அப்படியானால், அவர்கள் இப்படி முன்னால் வாருங்கள்! என்னை முதலில் கொன்று விட்டுப் பிறகு இளவரசருக்குத் தீங்கு செய்ய எண்ணுங்கள்!" என்று அலறினாள்.

அது வரையில் அடங்காத வியப்புடன் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள், உடனே, "பொன்னியின் செல்வர் வாழ்க! ஈழங் கொண்ட வீராதி வீரர் வாழ்க!" என்று ஒரு பெரிய கோஷத்தைக் கிளப்பினார்கள். அதைக் கேட்டு விட்டு மேலும் பல மக்கள் திரண்டு வந்து அங்கே கூடினார்கள். அப்படி வந்தவர்களிலே நாகைப்பட்டினம் நகரத்தின் எண்பேராயத் தலைவர் ஒருவரும் இருந்தார். அவர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் வந்து,

"கோமகனே! தாங்கள் இந்த நகரின் சூடாமணி விஹாரத்தில் இருந்து வருவதாகக் கேள்விப்பட்டோம். அந்த வதந்தியை நாங்கள் நம்பவில்லை. இப்போது உண்மை அறிந்தோம். நேற்று அடித்த பெரும் புயல் இந்த நகரத்தில் எத்தனையோ நாசங்களை விளைத்திருக்கிறது. ஆனாலும், தங்களைப் புத்த விஹாரத்திலிருந்து பத்திரமாய் வெளிக் கொணர்ந்ததே. அதை முன்னிட்டுப் புயலின் கொடுமைகளையெல்லாம் மறந்து விடுகிறோம். இந்த நகரில் தங்களுடைய பாதம் பட்டது இந்நகரின் பாக்கியம்!" என்று கூறினார்.

இளவரசர் இனிமேல் தன்னை மறைத்துக் கொள்ளப் பார்ப்பதில் பயனில்லை என்று கண்டு கொண்டார்.

"ஐயா! தங்களுடைய அன்புக்கு மிக்க நன்றி. இந்த நகர மாந்தரின் அன்பு என்னைப் பரவசப் படுத்துகிறது. ஆனால் வெகு முக்கியமான காரியமாக நான் தஞ்சாவூருக்கு அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது. பிரயாணம் தடைப்படக் கூடாது என்பதற்காகத்தான் இப்படி வியாபாரியின் வேடம் பூண்டு புறப்பட்டேன். எனக்கு விடை கொடுங்கள்!" என்றார்.

அப்போது கூட்டத்திலிருந்து ஒரு குரல் கிளம்பியது. "கூடாது கூடாது! இளவரசர் இங்கே ஒரு நாளாவது தங்கி ஏழைகளாகிய எங்களின் உபசாரத்தைப் பெற்றுக் கொண்டு தான் புறப்பட வேண்டும்" என்று உரக்கச் சத்தமிட்டுக் கூறியது அக்குரல்.

அதைப் பின்பற்றி இன்னும் ஆயிரமாயிரம் குரல்கள் "கூடவே கூடாது! இளவரசர் ஒரு நாளாவது இங்கே தங்கி இளைப்பாறி விட்டுத்தான் போக வேண்டும்!" என்று கூச்சலிட்டனர்.

எண் பேராயத்தின் தலைவர் அப்போது "கோமகனே! என் நகர மக்களின் அன்பையும் உற்சாகத்தையும் பார்த்தீர்களா? எங்கள் உபசாரத்தைத் தாங்கள் ஏற்றுக் கொண்டு ஒருவேளையாவது எங்கள் விருந்தாளியாக இருந்து விட்டுத்தான் போக வேண்டும். புத்த பிக்ஷுக்கள் செய்த பாக்கியம் நாங்கள் செய்யவில்லையா? நேற்று இந் நகர மாந்தர் தங்களைப் புத்த பிக்ஷுக்கள் மறைத்து வைத்திருக்கிறார்கள் என்று சந்தேகப்பட்டுச் சூடாமணி விஹாரத்தையே தகர்த்து மண்ணோடு மண்ணாக்கி விடப் பார்த்தார்கள். அந்தச் சமயத்தில் புயல் வந்து விட்டது! நாங்கள் செய்யத் தவறியதைப் புயல் செய்து விட்டது. விஹாரம் இடிந்து மண்ணோடு மண்ணாகி விட்டது!" என்று

சொன்னார்.

அதைக் கேட்ட இளவரசர் "ஐயா! தாங்கள் புத்த பிக்ஷுக்கள் மீது குற்றம் சுமத்தியது சரியல்ல. என்னுடைய வேண்டுகோளுக்காகவே பிக்ஷுக்கள் புத்த விஹாரத்தில் என்னை வைத்திருந்தார்கள். நோய்வாய்ப்பட்டு உயிருக்கு மன்றாடிய என்னை யமனுடைய பாசக்கயிற்றிலிருந்து காப்பாற்றினார்கள். சூடாமணி விஹாரம் விழுந்து விட்டது என்று கேட்டு என் மனம் வேதனைப்படுகிறது. அதைத் திருப்பிக் கட்டிக்கொடுப்பது என்னுடைய கடமை!" என்றார்.

"ஆகா! இதெல்லாம் முன்னரே எங்களுக்குத் தெரியாமல் போயிற்றே! இப்போது தெரிவித்து விட்டபடியால் சூடாமணி விஹாரத்தை நாங்களே புதுப்பித்துக் கட்டிக் கொடுத்து விடுவோம். இளவரசே! தாங்கள் ஒருவேளை எங்கள் விருந்தாளியாக மட்டும் இருந்து விட்டுப் போக வேண்டும்!" என்றார் எண் பேராயத்தின் தலைவர்.

"ஆமாம், ஆமாம்!" என்று பதினாயிரக் கணக்கான மக்களின் குரல்கள் எதிரொலி செய்தன.

"இளவரசே! இங்கே தங்குவதினால் ஏற்படும் தாமதத்தைச் சரிப்படுத்திக் கொள்ளலாம். தாங்களோ கால் நடையாகப் புறப்பட்டிருக்கிறீர்கள். புயல் மழை காரணமாகச் சோழ நாட்டுச் சாலைகள் எல்லாம் தடைப்பட்டுக் கிடக்கின்றன. நதிகளிலெல்லாம் பூரண வெள்ளம் போகிறது. கால் நடையாகச் சென்று எப்போது போய்ச் சேர்வீர்கள்? தங்களை யானை மீது வைத்து ஊர்வலமாக அனுப்புகிறோம். தங்களுடன் நாங்கள் அனைவரும் வந்து தஞ்சாவூருக்கே கொண்டு விட்டு வருகிறோம்" என்றார் எண் பேராயத்தின் தலைவர்.

அவர் பேசிக் கொண்டிருக்கையில், ஜனங்களின் கூட்டம் மேலும் அதிகமாகிக் கொண்டிருந்தது.

இளவரசர் யோசித்தார். காரியம் என்னவோ கெட்டுப் போய் விட்டது. இரகசியம் வெளியாகிவிட்டது. ராக்கம்மாள் மூடத்தனமாகக் கூச்சலிட்டு வெளிப்படுத்தி விட்டாள். மூடத்தனத்தினால் தான் வெளிப்படுத்தினாளா?..... அல்லது வேறு ஏதேனும் நோக்கம் இருக்குமா?..... எப்படியிருந்தாலும் இந்த நகர மக்களின் அன்பை மீறிக் கொண்டு உடனே புறப்படுவது இயலாத காரியம். அதனால் இவர்கள் மனக்கஷ்டம் அடைவார்கள். அதோடு, உத்தேசத்திலுள்ள நோக்கம் மேலும் தவறினாலும் தவறிவிடும். மத்தியானம் வரையிலேனும் இருந்து இவர்களைச் சமாதானப் படுத்தி விட்டுத்தான் போக வேண்டும். புயலினால் கஷ்ட நஷ்டங்களை அடைந்தவர்களுக்குச் சிறிது ஆறுதல் கூறிவிட்டுப் போக வசதியாகவும் இருக்கும். ஆகா! நான் இச்சமயம் என்னை வெளிப்படுத்திக் கொள்வதால் நாட்டில் குழப்பம் விளையும் என்று இளைய பிராட்டி குந்தவை கூறினாரே? அது எவ்வளவு உண்மையான வார்த்தை? — என் தமக்கையைப் போன்ற அறிவாளி இந்த உலகிலேயே யாரும் இல்லைதான்! — தஞ்சைச் சிங்காதன உரிமையைப் பற்றிப் பேசுகிறார்களே? உண்மையில், குந்தவை தேவியை அல்லவா சிம்மாதனத்தில் அமர்த்த வேண்டும்?.....

இவ்வாறு பொன்னியின் செல்வர் சிந்தித்துக் கொண்டிருந்தபோது ஜனக் கூட்டம் மேலும் அதிகமாகி வருவதைக் கண்டார். அவர்களுடைய குதூகலமும் வளர்ந்து வருவதை அறிந்தார். புயலின் கொடுமைகளையும் மக்கள் அடியோடு மறந்து விட்டதாகத் தோன்றியது. எங்கிருந்தோ, யானைகள், குதிரைகள், சிவிகைகள், திருச்சின்னங்கள், கொடிகள், பேரிகை, எக்காளம் முதலிய வாத்தியங்கள், — எல்லாம் வந்து சேர்ந்து விட்டன.

அரைப் பகல் நேரமாவது இங்கே தங்கிவிட்டுத் தான் புறப்பட வேண்டும் என்று இளவரசர் முடிவு செய்தார்.

எண் பேராயத்தின் தலைவரைப் பார்த்து, "ஐயா! இவ்வளவு மக்களின் அன்பையும் புறக்கணித்து விட்டு நான் போக விரும்பவில்லை. பிற்பகல் வரையில் இங்கே இருந்துவிட்டு மாலையில் புறப்படுகிறேன். அதற்காவது அனுமதி கொடுப்பீர்கள் அல்லவா?" என்றார்.

இளவரசர் தங்கிச் செல்லச் சம்மதித்து விட்டார் என்ற செய்தி பரவியதும் ஜனக் கூட்டத்தின் உற்சாகம் எல்லை கடந்து விட்டது. குதூகலத்தை வெளிப்படுத்தும் வழிகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். வாத்தியங்கள் முழங்கத் தொடங்கின. ஆங்காங்கே வீதிகளில் கத்தி விளையாட்டு, கழி விளையாட்டு, குரவைக் கூத்து முதலியவை ஆரம்பமாயின. ஜனங்களையும் அவர்களுடைய குதூகல விளையாட்டுகளையும் கடந்து கொண்டு நாகைப் பட்டினத்துச் சோழ மாளிகைக்குச் செல்வது பெரிதும் கஷ்டமாயிற்று. எப்படியோ கடைசியில் போய்ச் சேர்ந்தார்கள்.

மாளிகைக்குள் இளவரசர் சிறிது நேரம் கூடத் தங்கி இளைப்பாற முடியவில்லை. ஏனெனில், அவர் வெளிப்பட்ட செய்தி அக்கம் பக்கத்துக் கிராமங்களுக்கெல்லாம் பரவி விட்டது. ஜனங்கள் திரள் திரளாக வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். இளவரசரைப் பார்க்க வேண்டும் என்ற தங்கள் ஆவலைத் தெரியப்படுத்திக் கொண்டார்கள்.

இளவரசரும் அடிக்கடி வெளியில் வந்து ஜனக் கூட்டத்தினிடையே சென்று அவர்களுடைய க்ஷேம லாபங்களைப் பற்றிக் கேட்டார். புயலினால் விளைந்த கஷ்ட நஷ்டங்களைப் பற்றி அநுதாபத்துடன் விசாரித்தார். தாம் தஞ்சாவூருக்குப் போனவுடனே ஜனங்கள் அடைந்த கஷ்டங்களுக்குப் பரிகாரம் கிடைக்க ஏற்பாடு செய்வதாகக் கூறினார். அதைப்பற்றி ஜனங்கள் அவ்வளவு உற்சாகமடையவில்லை என்பதையும் கண்டு கொண்டார். ஜனங்கள் ஒருவரோடொருவர் "பழுவேட்டரையர்களின் அதிகாரத்துக்கு முடிவு ஏற்படுமா?" என்று பேசிக் கொண்டதும் அவர் காதில் விழுந்தது. சக்கரவர்த்தியின் உடல் நிலையைப் பற்றியும் அடுத்தபடி சிம்மாதனத்துக்கு வரக் கூடியவரைப் பற்றியும் அடக்கமான குரலில், ஆனால் இளவரசர் காதில் விழும்படியாகப் பலரும் பேசினார்கள்!

இதற்கிடையில் நாகைப்பட்டினம் நகரின் ஐம்பெருங் குழுவின் அதிகாரிகளும், எண்பேராயத்தின் தலைவர்கள் அனைவரும் வந்து சேர்ந்துவிட்டார்கள். இளவரசருக்கு விருந்து அளிக்கப் பெருந்தர ஏற்பாடுகள் நடந்தன. இளவரசரைப் பார்க்க வந்த ஜனத்திரளுக்கு உணவளிக்கும் ஏற்பாடுகளும் நடந்தன. புயலினால் நஷ்டமானது போக நகரில் எஞ்சியிருந்த தானியங்கள் எல்லாம் வந்து குவிந்தன. கறிகாய்களைப் பற்றியோ கவலையே இல்லை. விழுந்த வாழை மரங்களின் வாழைக் காய்க் குலைகளையும், விழுந்த தென்னை மரங்களின் தென்னங் குலைகளையும் கொண்டு ஒரு லட்சம் பேருக்கு விருந்து தயாரித்து விடலாமே!

விருந்துகள் முடிந்து, புறப்பட வேண்டிய சமயம் நெருங்கிற்று. இளவரசர் சோழ மாளிகையின் மேன்மாடத்து முகப்பில் வந்து கைகூப்பிக் கொண்டு நின்றார். வீதியில் ஒரு பெரிய கோலாகலமான ஊர்வலம் புறப்படுவதற்கு எல்லாம் ஆயத்தமாயிருந்தன. இளவரசர் ஏறிச் செல்வதற்கு அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்று வந்து நின்றது. முன்னாலும் பின்னாலும் குதிரைகள், ரிஷபங்கள் முதலியவை நின்றன. திருச்சின்னங்களும் கொடிகளும் ஏந்தியவர்களும் பலவித வாத்தியக்காரர்களும் அணிவகுத்து நின்றார்கள். மக்களோ நேற்று மாலை பொங்கி எழுந்த கடலைப் போல ஆரவாரித்துக் கொண்டு கண்ணுக்கெட்டிய தூரம் நின்றார்கள்.

இளவரசர் வெளித்தோற்றத்துக்குப் புன்னகை பூத்த முகத்துடன் பொலிந்தார். அவர் உள்ளத்திலோ பெருங்கவலை குடி கொண்டிருந்தது: பெற்ற தாயைக் காட்டிலும் பதின்மடங்கு அவருடைய அன்பைக் கவர்ந்திருந்த ஈழத்து ராணியின் கதியைப் பற்றி அறிந்து கொள்ள அவர் உள்ளம் துடி துடித்தது. முருகய்யன் மனைவியிடம் இன்னும் சிறிது விவரம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணியிருந்தார். அவளோ ஜனக் கூட்டத்தில் மறைந்து விட்டாள். முருகய்யன் மட்டும் முண்டியடித்துக் கொண்டு இளவரசரைத் தொடர்ந்து சோழ மாளிகைக்கு வந்து சேர்ந்தான். அவன் மனைவி ராக்கம்மாள் என்ன ஆனாள் என்பது அவனுக்கும் தெரியவில்லை.

மற்றொரு பக்கத்தில் இளவரசரை வேறொரு கவலை பற்றிக் கொண்டிருந்தது. சக்கரவர்த்தியின் விருப்பத்துக்கு விரோதமாகத் தான் இராஜ்யத்தைக் கைப்பற்ற விரும்புவதாய் முன்னமேயே பழுவேட்டரையர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்த ஜனங்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக அவர்கள் கூற்று உண்மை என்று ஏற்பட்டு விடலாம் அல்லவா?

எப்படியாவது இந்த நகர மாந்தர்களின் அன்புச் சுழலிலிருந்து தப்பித்துப் போனால் போதும் என்று இளவரசருக்குத் தோன்றி விட்டது.

இந்த நிலைமையில் அவர் சற்றும் எதிர்பாராத இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது.

ஜனங்களிடம் விடை பெற்றுக் கொள்ளும் பாவனையில் இளவரசர் கும்பிட்டுக் கொண்டு நின்றபோது, ஜனக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஐம்பெருங்குழுவின் அதிகாரிகளும் எண்பேராயத்தின் தலைவர்களும் மாளிகையின் வாசலில் வந்து நின்றார்கள்.

முன்னேற்பாட்டின்படி நிகழ்ந்தது போல், சில நிமிட நேரம் பேரிகை, முரசு, எக்காளம் முதலிய நூறு நூறு வாத்தியங்கள் கடலொலியையும் அடக்கிக் கொண்டு ஒலித்தன. சட்டென்று அவ்வளவு வாத்தியங்களும் நின்றபோது அப்பெருங் கூட்டத்தில் நிச்சப்தம் நிலவியது. அச்சமயத்தில் நகரத் தலைவர்களில் முதியவராகக் காணப்பட்ட ஒருவர் மாளிகை முன் வாசலில் இருந்த நிலா மேடை மீது ஏறி நின்றுகொண்டு கம்



பீரமான குரலில் கூறினார்:—

''பொன்னியின் செல்வ! ஒரு விண்ணப்பம். நாகை நகரையும் அக்கம் பக்கத்துக் கிராமங்களையும் சேர்ந்த ஜனங்களின் சார்பாக ஒரு கோரிக்கை. சக்கரவர்த்தியின் உடல் நிலையைப்பற்றி நாங்கள் அளைவரும் கவலை கொண்டிருக்கிறோம். அதைப் போலவே நாங்கள் கேள்விப்படும் இன்னொரு செய்தியும் எங்களுக்குக் கவலை தருகிறது. பழுவேட்டரையர்களும் பல சிற்றரசர்களும் சேர்ந்து சக்கரவர்த்திக்குப் பிறகு மதுராந்தகத் தேவருக்கு முடிசூட்டத் தீர்மானித்திருப்பதாக அறிகிறோம். மதுராந்தகத் தேவர் இன்று வரையில் போர்க்களம் சென்று அறியாதவர். அவர் பட்டத்துக்கு வந்தால் உண்மையில் பழுவேட்டரையர்கள் தான் இராஜ்யம் ஆளுவார்கள். சிற்றரசர்கள் வைத்ததே சட்டமாயிருக்கும். இளவரசர் ஆதித்த கரிகாலர் மூன்று ஆண்டு காலமாகச் சோழ நாட்டுக்கு வரவேயில்லை. அதற்கு ஏதேதோ காரணங்கள் சொல்கிறார்கள். அவருக்கு மகுடம் சூட்டிக் கொள்ள விருப்பமில்லை என்றும் கூறுகிறார்கள். அப்படியானால் அடுத்தபடி நியாயமாகப் பட்டத்துக்கு வர வேண்டியவர் யார்? சோழ நாடு தவம் செய்து பெற்ற புதல்வரும், காவேரித் தாய் காப்பாற்றிக் கொடுத்த செல்வரும், ஈழம் வென்ற வீராதி வீரருமான தாங்கள்தான்.... மக்களே! நான் கூறியது உங்களுக்கெல்லாம் சம்மதமான காரியமா?'' என்று அந்த முதியவர் சுற்றிலும் நின்ற ஜனத்திரளைப் பார்த்துக் கேட்கவும், எட்டுத் திசையும் நடுங்கும்படியான பேரொலி அக் கூட்டத்திலிருந்து எழுந்தது.

'ஆம், ஆம்; எங்கள் கருத்தும் அதுவே!'' என்று பதினாயிரம் குரல்கள் கூறின. அதைத் தொடர்ந்து ''பொன்னியின் செல்வர் வாழ்க!'' என்று ஒரு லட்சம் குரல்கள் கோஷித்தன. இவ்வளவு கோஷங்களும் சேர்ந்து உருத்தெரியாத ஒரு பெரும் இரைச்சலாகக் கேட்டது.

மறுமொழி சொல்வதற்காக இளவரசரின் உதடுகள் அசையத் தொடங்கியதும், ஏதோ மந்திர சக்தியினால் கட்டுண்டு அடங்கியது போல் அந்தப் பேரிரைச்சல் அடங்கியது.

''ஐயா! நீங்கள் எல்லாரும் என்னிடம் கொண்டிருக்கும் அன்பைக் கண்டு ஆனந்தப்படுகிறேன். ஆனால் அந்த அன்பை நீங்கள் காட்டும் விதம் முறையாக இல்லையே? என் அருமைத் தந்தை — சுந்தரசோழ சக்கரவர்த்தி — இன்னும் ஜீவிய வந்தராக இருக்கிறார் என்பதை நீங்கள் மறந்து விட்டதாகத் தோன்றுகிறது. சக்கரவர்த்தி நீடுழி வாழ வேண்டும் என்று என்னுடன் சேர்ந்து நீங்களும் பிரார்த்திக்க வேண்டும். சக்கரவர்த்தி ஜீவியவந்தராக இருக்கும் போது அவருக்குப் பிறகு பட்டத்துக்கு யார் என்பதைப் பற்றி யோசிப்பது ஏன்?''

நகரத் தலைவர்களிலே முதல் தலைவரான முதியவர் இளவரசரின் இக் கேள்விக்குச் சரியான விடை வைத்திருந்தார்.

''பொன்னியின் செல்வ! சோழ நாட்டில் ஒரு மன்னர் உயிரோடிருக்கும் போதே அடுத்தபடி பட்டத்துக்குரியவர் யார் என்பதை நிர்ண

யித்து விடுவது தொன்று தொட்டு வந்திருக்கும் வழக்கம். மதுரை கொண்ட வீரரும் தில்லையம்பலத்துக் கோயிலுக்குப் பொற்கூரை வேய்ந்தவருமான மகா பராந்தக சக்கரவர்த்தி, தம் காலத்திலேயே தமக்குப் பின் பட்டத்துக்கு வரவேண்டியவர்களை முறைப்படுத்தி விடவில்லையா? அதன் படி தானே தங்கள் தந்தை சிம்மாசனம் ஏறினார்?'' என்றார்.

''ஆம், ஆம்! ஆகையால் இப்போதும் அடுத்த பட்டத்துக்கு உரியவரைப் பற்றிச் சக்கரவர்த்தி தானே தீர்மானிக்க வேண்டும்? நீங்களும் நானும் அதைப் பற்றி யோசிப்பதும் பேசுவதும் முறை அல்லவே?'' என்றார் இளவரசர்.

''பொன்னியின் செல்வ! சக்கரவர்த்திக்குத்தான் அந்த உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறோம். சக்கரவர்த்தி சுயேச்சையாக முடிவு செய்யக் கூடியவராயிருந்தால் அது சரியாகும். தற்போது சக்கரவர்த்தியைப் பழுவேட்டரையர்கள் தஞ்சைக் கோட்டைக்குள் சிறைப்படுத்தி அல்லவோ வைத்திருக்கிறார்கள்? இளவரசே! இன்னும் சொல்லப்போனால், சக்கரவர்த்தி உயிரோடு இருக்கிறாரா என்பதைப் பற்றியே எங்களில் பலருக்குச் சந்தேகமாயிருக்கிறது. தங்களுடன் தொடர்ந்து தஞ்சைக்கு வந்து அந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள விரும்புகிறோம். அதிர்ஷ்டவசமாகச் சக்கரவர்த்தி நல்லபடியாக இருந்தால், அவரிடம் எங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்வோம். அவருக்குப் பிற்பாடு தாங்கள்தான் சிங்காதனம் ஏறவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்வோம். பிறகு, சக்கரவர்த்தி முடிவு செய்கிறபடி செய்யட்டும்!''

பெரியவர் சக்கரவர்த்தி உயிரோடிருக்கிறாரா என்பதைப் பற்றிச் சந்தேகப்பட்டுக் கூறிய வார்த்தைகள் இளவரசரின் உள்ளத்தில் ஒரு பெரும் திகிலை உண்டாக்கின. இத்தனை நாளும் அவர் அறிந்திராத வேதனையும் பீதியும் ஏற்பட்டன. சக்கரவர்த்தியின் உயிருக்கு ஏதோ ஆபத்து நெருங்கி விட்டது போலவும், அதைத் தடுக்க முடியாத தூரத்தில் தாம் இருப்பது போலவும் ஒரு பிரமை உண்டாயிற்று. ஈழத்து ராணியை யாரோ மூர்க்கர்கள் பலவந்தமாகப் பிடித்துக் கொண்டு போன விவரமும் நினைவுக்கு வந்தது. இனி ஒரு கணமும் தாமதியாமல் தஞ்சை போய்ச் சேர வேண்டும் என்ற பரபரப்பு ஏற்பட்டது. ஒரு சில வினாடி நேரத்தில் இளவரசர் தாம் செய்யவேண்டியது இன்னதென்று தீர்மானித்துக் கொண்டார். இவர்களுடன் வாதமிட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லை. பிரயாணப் படுவதுதான் தாமதமாகும். இப்போது இவர்கள் பேச்சை ஒப்புக் கொண்டதாகச் சொல்லிப் பிரயாணப் பட்டுவிட்டால், வழியில் போகப் போக வேறு உபாயங்களைக் கண்டு பிடித்துக் கொள்ளலாம்.

''ஐயா! உங்களுடைய விருப்பத்துக்கு நான் குறுக்கே நிற்கவில்லை. சக்கரவர்த்தியைப் பற்றித் தாங்கள் கூறியது அவரைத் தரிசிக்க வேண்டுமென்ற என் கவலையை அதிகரித்து விட்டது. நான் உடனே புறப்பட வேண்டும். நீங்களும் சக்கரவர்த்தியைத் தரிசிக்க விரும்பினால் தாராளமாக என்னுடன் வாருங்கள். பட்டத்து உரிமையைப் பற்றிச் சக்கரவர்த்தி என்ன சொல்லுகிறாரோ, அதைக் கேட்டு நாம் அனைவரும் நடந்து கொள்வோம்!'' என்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் இளவரசர் யானை மீது ஏறிக் கொண்டு பிரயாணப் பட்டார். ஆயிரக் கணக்கான மக்கள் அடங்கிய ஒரு மாபெரும் ஊர்வலம் தஞ்சையை நோக்கிப் புறப்பட்டது. போகப் போக இளவரசருடன் தொடர்ந்த ஊர்வலம் பெரிதாகிக் கொண்டிருந்தது.

எட்டாம் அத்தியாயம்
படகில் பழுவேட்டரையர்

புயல் அடித்த காலையிலேதான் பெரிய பழுவேட்டரையர் கடம்பூரிலிருந்து தஞ்சைக்குப் புறப்பட்டார் என்பது நேயர்களுக்கு நினைவிருக்கும். கொள்ளிட நதி வரையில் அவர் வழக்கமான பாதையிலே சென்று, பின்னர் கொள்ளிடக் கரைச் சாலை வழியாக மேற்கு நோக்கித் திரும்பினார். சோழ நாட்டுக் கிராமங்களின் வழியாக அவர் நீண்ட பிரயாணம் செய்ய விரும்பவில்லை. மேற்கே சென்று திருவையாறுக்கு நேராகக் கொள்ளிடத்தைக் கடக்க விரும்பிச் சென்றார்.

வழக்கம்போல் நூற்றுக் கணக்கான பரிவாரங்களுடன் இச்சமயம் பெரிய பழுவேட்டரையர் புறப்படவில்லை. தாம் போவதும் வருவதும் கூடிய வரையில் எவருடைய கவனத்தையும் கவராமலிருக்க வேண்டுமென்று நினைத்தார். ஆகையால் பத்துப் பேரைத்தான் தம்முடன் அழைத்துப் போனார்.



திருவையாற்றுக்கு நேரே கொள்ளிடத்துக்கு வட கரையில் பழுவேட்டரையர் வந்த போது அந்தப் பெரிய நதியில் வெள்ளம் இரு கரையும் தொட்டுக் கொண்டு பிரவாக மாகப் போய்க் கொண்டிருந்தது. அங்கிருந்த சிறிய படகில் குதிரைகளைக் கொண்டு போவது இயலாத காரியம். பெருங்காற்றுக்கு அறிகுறிகள் காணப்பட்டுக் கொண்டிருந்தன. ஆகையால், திரும்பிப் போவதற்குச் சௌகரியமாக இருக்கட்டும் என்று குதிரைகளை வடகரையில் விட்டுவிட்டுப் பழுவேட்டரையர் தம்முடன் வந்த பத்து வீரர்களுடன் படகில் ஏறினார். படகு நடு நதியில் சென்று கொண்டிருந்த போது புயல் வலுத்து விட்டது. படகோட்டிகள் இருவரும் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் படகைச் செலுத்தினார்கள். நதி வெள்ளத்தின் வேகம் படகைக் கிழக்கு நோக்கி இழுத்தது. புயல் அதை மேற்கு நோக்கித் தள்ளப் பார்த்தது. படகோட்டிகள் படகைத் தெற்கு நோக்கிச் செலுத்த முயன்றார்கள். இந்த மூன்று வித சக்திகளுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்ட படகு திரும்பித் திரும்பிச் சக்கராகாரமாகச் சுழன்றது.

பழுவேட்டரையரின் உள்ளத்திலும் அப்பொழுது ஒரு பெரும் புயல் அடித்துச் சுழன்று கொண்டிருந்தது. நந்தினியின் எதிரில் இருக்கும்போது அவருடைய அறிவு மயங்கிப் போவது சாதாரண வழக்கம். அவள் கூறுவதெல்லாம் சரியாகவே அவருக்குத் தோன்றும். வாழ்நாளெல்லாம் தமக்குப் பிடிக்காமலிருந்த ஒரு காரியத்தை நந்தினி சொல்லும் போது அது செய்வதற்குரியதாகவே அவருக்குத் தோன்றிவிடும். ஏதேனும் மனத்தில் சிறிது சந்தேகமிருந்தாலும் அவருடைய வாய் "சரி சரி! அப்படியே செய்வோம்" என்று கூறிவிடும். சொல்லிய பிறகு, வாக்குத் தவறி எதுவும் செய்வதற்கு அவர் விரும்புவதில்லை.

இப்போதும் அவரைத் தஞ்சைக்குப் போய் மதுராந்தகரை அழைத்து வரும்படி நந்தினி சொன்னபோது, சரி என்று ஒத்துக் கொண்டு விட்டார். பிரயாணம் கிளம்பிய பிறகு அது சம்பந்தமாகப் பற்பல ஐயங்கள் எழுந்து அவர் உள்ளத்தை வதைத்தன. நந்தினியின் நடத்தையில் அணுவளவும் களங்கம் ஏற்படக் கூடும் என்று அவர் எண்ணவில்லை. ஆயினும் நந்தினியையொத்த பிராயமுடைய மூன்று வாலிபர்களுக்கு மத்தியில் அவளைத் தனியே விட்டு விட்டு வந்திருக்கிறோம் என்ற எண்ணம் அடிக்கடி அவர் மனத்தில் தோன்றி வேதனை தந்தது.

கந்தமாறன், வந்தியத்தேவன், ஆதித்த கரிகாலன் ஆகிய மூவர் மீதும் அவர் குரோதம் கொள்வதற்குக் காரணங்கள் இருந்தன. பொக்கிஷ நிலவறையில் நள்ளிரவில் தாமும் நந்தினியும் போய்க் கொண்டிருந்தபோது கந்தமாறன் எதிர்ப்பட்டு, நந்தினியை, "தங்கள் மகள்" என்று குறிப்பிட்டது அவர் நெஞ்சத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சூடு போட்டது போல் பதிந்திருந்தது. அப்போது உண்டான குரோதத்தில் அவனைக் கொன்று விடும்படியாகவே காவலனுக்கு இரகசியக் கட்டளையிட்டு விட்டார். பின்னால் அதைப் பற்றி வருந்தினார். எப்படியோ கந்தமாறன் பிழைத்து விட்டான். அவன் எப்படிப் பிழைத்தான், நிலவறைக் காவலன் எப்படி மாண்டான் என்னும் விவரத்தை இன்னமும் அவரால் அறிய முடியவில்லை. அதற்குப் பிறகு கந்தமாறன் தன் அரண்மனையிலேயே சில நாள் இருந்ததும், நந்தினி அவனுக்குச் சிரத்தையுடன் பணிவிடை செய்ததையும் அவரால் மறக்க முடியவில்லை.

பிறகு, வந்தியத் தேவனும் கடம்பூரில் இருக்கிறான். முதன் முதலில் அந்த அதிகப்பிரசங்கி வாலிபனைப் பார்த்ததுமே அவருக்கு அவனைப் பிடிக்கவில்லை. பிறகு அவன் தஞ்சாவூரில் சக்கரவர்த்தியிடம் தனியாக ஏதோ எச்சரிக்கை செய்ய விரும்பியதையும், தஞ்சைக் கோட்டையிலிருந்து ஒருவரும் அறியாமல் தப்பி ஓடியதையும் அறிந்த போது அவருடைய வெறுப்பு அதிகமாயிற்று.





அச்சமயம் சின்னப் பழுவேட்டரையர் அவன் தப்பிச் சென்றதற்கு நந்தினி உதவி செய்திருக்கலாம் என்று குறிப்பாகச் சொன்னதையும் அவர் மறக்கவில்லை. அது ஒரு நாளும் உண்மையாக இருக்க முடியாது. ஏனெனில் அவன் குந்தவைப் பிராட்டிக்கும் இளவரசர் அருள்மொழிக்கும் அந்தரங்கத் தூதன் என்று தெரிய வந்திருக்கின்றன. ஆகையால், அவனுக்கும் நந்தினிக்கும் தொடர்பு எதுவும் இருக்க முடியாது. ஆனாலும், அவனையும் நந்தினியையும் சேர்த்து எண்ணிப் பார்த்த போதெல்லாம் பெரிய பழுவேட்டரையர் இரும்பு இதயத்தில் அனல் வீசிற்று.



பிறகு, ஆதித்த கரிகாலர் இருக்கவே இருக்கிறார். அவர் முன் ஒரு சமயம் ஒரு கோவில் பட்டரின் மகளைக் கலியாணம் செய்து கொள்ள விரும்பினார் என்பதும், அவள்தான் நந்தினி என்பதும் அவர் காதுக்கு எட்டியிருந்தது. அவர்கள் இப்போது சந்தித்திருக்கிறார்கள். அதற்கு நந்தினி மிக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறாள். எதற்காக? ஒன்று நிச்சயம். ஆதித்த கரிகாலன் பெரிய முரடனாயிருக்கலாம். பெரியோர்களிடம் மரியாதை இல்லாதவனாயிருக்கலாம். ஆனால் அவன் சோழ குலத்தில் உதித்தவன். அந்தக் குலத்திலே யாரும் பிறனில் விழையும் துரோகத்தைச் செய்ததில்லை. கரிகாலனும் அப்படிப்பட்டவன் அல்ல. பெண்கள் விஷயமான நடத்தையில் மாசு மறுவற்றவன். ஆனால் நந்தினி? அவளைத் தாம் இவ்வளவு தூரம் நம்பி அவள் விருப்பப்படியெல்லாம் நடந்து வந்திருப்பது சரிதானா? அவளுடைய நடத்தையில் மாசு ஒன்றும் இல்லையென்பது நிச்சயமா? அவளுடைய பூர்வோத்தரமே இன்னும் அவருக்குச் சரிவரத் தெரியாது. அவருடைய சகோதரன் காலாந்தக கண்டன் அவளைப் பற்றிச் சொல்லாமற் சொல்லிப் பலமுறை எச்சரித்திருக்கிறான். தம்பி கூறியதே சரியாகப் போய் விடுமோ? நந்தினி தம்மை வஞ்சித்து விடுவாளா? — ஆகா! கதைகளிலே சொல்லுகிறார்களே! அது போன்ற வஞ்சக நெஞ்சமுள்ள ஸ்திரீகள் உண்மையிலேயே உலகத்தில் உண்டா? அவர்களில் ஒருத்தி நந்தினியா?... இப்படி எண்ணியபோது பெரிய பழுவேட்டரையரின் உள்ளத்தில் குரோதக் கனல் கொழுந்து விட்டது என்றால், அதே சமயத்தில் நந்தினியின் மீது அவர் கொண்டிருந்த மோகத் தீயும் ஜ்வாலை வீசியது. இவற்றினால் உண்டான வேதனையை மறப்பதற்காகப் பழுவேட்டரையர் தம் தலையை ஆட்டிக் கொண்டு, தொண்டையையும் கனைத்துக் கொண்டார். பத்துப் பேருக்கு மத்தியில் இருக்கிறோம் என்ற நினைவுதான் அவர் தமது பெரிய தடக் கைகளினால் நெற்றியில் அடித்துக் கொள்ளாமல் தடை செய்தது. அவரை அறியாமல் பெரிய நெடுமூச்சுகள் வந்து கொண்டிருந்தன. படகின் விளிம்புகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, பற்களைக் கடித்துக் கொண்டு, "எல்லா உண்மைகளையும் இன்னும் இரண்டு தினங்களில் தெரிந்து கொண்டு விடுகிறேன். இது வரை செய்த தவறுபோல் இனிமேல் ஒரு நாளும் செய்வதில்லை!" என்று சங்கல்பம் செய்து கொண்டார்.

(தொடரும்)

சோலை குயில்

அத்தனை நடிக நடிகைகளையும் 'துணை' சேர்த்து அள்ளிப் போட்டுக் கொண்டு காமெரா வகையறா யூனிட்டுகளுடன் ஊட்டி ஏறியவர்கள், படத்தை ஒரு வழியாய் முடித்து விட்டுத்தான் இறங்குவது என்று சங்கல்பம் செய்து கொண்டு செயல்பட்ட மாதிரி இருக்கிறது.

சும்மா சொல்லக் கூடாது. ஊட்டியை அப்படியே காமெராவுக்குள் பிடித்துப் போட்டுப் பசுமைப் புரட்சி செய்திருக்கிறார்கள். அகலத் திரைக்கு வாகாய்க் காமெராவின் அற்புத ஒத்துழைப்பு.

போலீஸ் துரத்த ஓட்ட ஓட்டமாய்க் காடு மலை வன வனாந்தரங்களில் எல்லாம் சளைக்காமல் ஒளிந்து ஒளிந்து ஓடும் கார்த்திக் எதற்காக அப்படி ஓட வேண்டும்? முள்ளிக்காட்டின் நிலச் சுவான்தார் மூக்கையாத் தேவரின் சட்டப்படியான வாரிசு — சொந்தப் பேரன் என்பதற்கு அவரிடம் போதுமான ஆதாரம் இருக்கிறது. அவருக்கு உரிமையான இடத்துக்கு அவர் போகிறார். அதற்கு இப்படித் திருட்டுத்தனமாய்த் தப்பியோடுவது போல் ஓடுவானேன்? மூச்! அதுதான் மர்மம்.

மோத வருகிறவர்களை எதிர்க்கும் போது கார்த்திக்கின் பார்வையில் தெறிக்கும் அபார தன்னம்பிக்கை; புதுமுகம் சோக ராகினியிடம் அவர் சொட்டும் அனுதாபப் பரிவு; ஒவ்வொருவரிடமும் விசாரணை நடத்தும்போது அவர்களது நெஞ்சுக்குள் புகும் பார்வையின் கூர்மை — தோற்றத்தில் மைனர் தனத்தைக் காட்டியிருந்தாலும், நடிப்பில் மேஜராகி விட்டதை நன்றாகவே உணர்த்தியிருக்கிறார்.

என்னதான் பட்டுக் கூந்தலானாலும், ராகினி ஷாம்பூ விளம்பரப் போஸில் படம் முழுக்கக் கேசத்தை வீசி விசிறிப் போட்டுக் கொண்டே திரிய வேண்டுமா என்ன?

அடுத்த வீட்டுக் காந்திமதியம்மாள் வந்து, 'கண்ட நாய்களெல்லாம் கூட்டி வச்சுச் சோறு போட்டா இப்படித்தான்,' என்று தலையாரி ராதாரவியைப் பற்றிச் சொல்லும் போது பதறித் துடித்துக் கண் கலங்கும் பாவத்தில் தனக்குள் ஒரு நடிகையும் ஒளிந்திருப்பதை வெளிப்படுத்தியிருக்கிறார் ராகினி.

காந்திமதிக்கு யோகம்தான். வயணமாய்த் தமிழ் பேச வருகிறது என்பதால் தானோ என்னவோ, மானாவாரித் தத்துவங்களை மைல் கணக்காய்ப் பேசவிட்டிருக்கிறார்கள். கார்த்திக்குக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு வாதாடும் காட்சியில் சற்று அதிகமாக எடுபடுகிறார்.

ராதாரவியைச் சூதுவாதிலேயே பார்த்துச் சலித்துப் போன கண்களுக்கு, நீது செய்யாத குணச்சித்திரத்தில் பார்க்கும் போது விழிகள் விரிகின்றன.

குயிலி கூவியதோ கொஞ்ச நஞ்சம் கிளுகிளுத்தோமோ!

பாவம் பாண்டியன்! நிரபராதியான அவர் மேல் கொலைப் பழி விழுந்ததும் ஊர்க் கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் கால்களையெல்லாம், விட்டு விட்டுப் பிடித்துக் கொண்டு அவர் எத்தனை எத்தனை பரிதாபத்தைப் பெற்றுக் கொள்கிறார்ரோ, கடைசியில் அத்தனைக்கும் அர்த்தமில்லாமல் பண்ணிவிடுகிறாரே! ஜெயிலிலிருந்து தப்பி வந்து ஊர் ஜனங்களையெல்லாம் கொல்வதற்குக் குடிநீர் டாங்க்கிலே விஷத்தைக் கலக்கிப் பழிவாங்கப் போகிறாராம். அபத்தம்!

'என் வள்ளியை நீதானே கொன்னே?' என்று வருகிறவர்களையெல்லாம் உலுக்கியெடுக்கும் அந்தப் பைத்தியம், உண்மையில் பைத்தியமில்லையாம்! அதை எதிர்பாராமல் நிரூபித்திருந்தால் நல்ல திருப்பமாய் இருந்திருக்கும். அது தன் வாயாலேயே, 'நான் ஊருக்குத்தான் பைத்தியம். உனக்கு இல்லே,' என்று கதாநாயகியிடமே சொல்வது அரைவேக்காடு.

பாடலைக் காட்டிலும் நிகழ்ச்சிக் கோப்பில் உதிரும் பின்னணி இசையில் புது இசையமைப்பாளர் முராரி சுறுசுறுவென்று தெரிகிறார்.

துப்பறியும் மர்மக் கதைக்கு மேலே ஒரு துயரக் காதல் பூச்சுக் கொடுத்து இறுதி வரை விறுவிறுப்பூட்டும் கதையமைப்பு, ஆர்ப்பாட்டமில்லாத அர்த்தமுள்ள வசனங்கள் — இவற்றுக்குப் பொறுப்பானவர்களைப் பாராட்டலாம்.

— பி. எஸ். எஸ்.



டாக்டர் சொல்கிறார்:



* டாக்டர்
வேல் முருகேந்திரன்

“வலிப்பு நோய் உள்ளவரை ஒதுக்கி

இடுப்பில் தண்ணீர்த் தவலையுடன் தெருவில் போய்க் கொண்டிருந்த ஓர் ஏழைப் பெண்ணுக்குத் திடீரென்று கை கால் இழுத்துக் கொண்டு வலிப்பு வந்து விடுகிறது. இதைப் பார்த்த ஒரு கல்லூரி மாணவி, அவளுக்கு உதவுவதற்காக, அந்தத் தெருவிலிருந்த முன்பின் தெரியாதவர்கள் வீட்டுக் கதவையெல்லாம் தட்டி, சாவிக் கொத்து கேட்கிறாள். காரணம் தெரிந்தும் அவளை நம்பி யாரும் சாவிக் கொத்தைத் தரத் தயாராயில்லை. கல்லூரி மாணவி தன் முயற்சியில் தோல்வி அடைகிறாள். ஏழைப் பெண் வலிப்பால் துடித்தே இறந்து போகிறாள். — கல்கி அலுவலகத்துக்கு வந்த ஒரு சிறுகதையின் சுருக்கம்தான் இது. கதையை எழுதியவர், முன்னுக்குவரத் துடித்துக் கொண்டிருக்கும் ஒரு படித்த இளைஞர்!

இதைப் படித்த போது, வலிப்பு நோய் பற்றிய பலவிதமான தவறான நம்பிக்கைகள் இன்னமும் நிலவி வருகின்றன என்பது புரிந்தது. இரும்புத் துண்டு அல்லது சாவியைக் கொடுத்தால் எல்லா வலிப்பும் நின்று விடும் என்ற கருத்தே தவறானது. வலிப்பு வந்து யாரும் சட்டென்று இறந்து போவதும் இல்லை. எனவே, நரம்பியல் நிபுணர் டாக்டர் வேல்முருகேந்திரனை அணுகி, தெளிவான விளக்கங்கள் கேட்டோம்.

“அதை ஏன் கேட்கிறீர்கள் சார்!” என்று ஆரம்பித்தார் வேல்முருகேந்திரன். “வலிப்பு நோய் என்றால் ஏதோ அதிபயங்கரமான விஷயம் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். ஆனால் சரியான சிகிச்சை மூலம் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து, சகஜமான வாழ்க்கை நடத்த முடியும். ஒரு கல்யாணத்தில், தாலி கட்டிய முப்பதாவது நிமிடமே மணப் பெண்ணுக்கு வலிப்பு வந்தது. அந்தக் கணமே பிள்ளை வீட்டார் விவாகரத்து வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். மாப்பிள்ளையின் அப்பாவிடம் பேச முயன்றேன். முதலில் அவர் விஷயத்தை விவாதிக்கக் கூடத் தயாராயில்லை. ஒருவாறு அவரைச் சமாதானம் செய்து, தகுந்த மருந்துகளைத்

விடாதீர்கள்!”

தவறாது உட்கொண்டால் வலிப்பு வராமல் தடுக்க முடியும் என்று அவருக்கு நம்பிக்கை யூட்டினேன். இப்போது அந்தப் பெண்ணின் வாழ்க்கை எந்தக் குறையும் இல்லாமல் இருக்கிறது!”

வலிப்பு நோய் மருத்துவர் சங்கத்தின் தமிழ் நாட்டுப் பிரிவுச் செயலரான டாக்டர். வேல்முருகேந்திரன், தொடர்ந்து, நமது கேள்விகளுக்குப் பதிலளித்தார்:

- வலிப்பு நோய் எதனால் வருகிறது?

பிரசவத்தின் போது குழந்தைக்கு உண் டாகும் காயம்; கருவுற்றிருக்கும்போதே சிசுவுக்கு ஏற்படும் காயம்; சிறு வயதில் உண்டாகும் கிருமித் தொற்று காரணமாக மூளை பாதிக்கப்படும் நிலை; விபத்தினால் மூளை பாதிக்கப்படும் நிலை; என்று பல காரணங்கள் உள்ளன.


- இதன் அறிகுறிகள் என்னென்ன?

பெருவலிப்பு (கிராண்ட் மால்) வந்தால் கத்திக் கூப்பாடு போட்டுக் கொண்டே கீழே விழுவார்கள். கால், கை எல்லாம் இறுக்கிக் கொள்ளும்; வெட்டி வெட்டி உதறும். வாயில் நுரை தள்ளும். நாக்கைக் கடித்துக் கொண்டதால் ரத்தம் வரும். நினைவு தவறிப் போகும். வலிப்பு வந்தவர்கள் அந்தச் சமயத்தில் தம்மையறியாது மல – மூத்திரம் கழிப்பதும் உண்டு.

சிறுவலிப்பு (பெட்டிட்மால்), பதினான்கு வயதுக்குக் கீழே உள்ளவர்களுக்கு மட்டுமே வரும். குழந்தை பேசிக் கொண்டே இருக் கும். ஒரு நிமிஷம் நினைவின்றி விழிப்பது போல் இருக்கும். பிறகு நினைவு வரும்.

ஃபோகல் ஃபிட் எனப்படும் வலிப்பில், உடலின் ஒரு பாதி மட்டுமே பாதிக்கப்படும். முகத்தின் வலது பாகம் கோணக் கோண இழுக்கும். அது போல வலது கை, வலது கால் என்று ஒரு பகுதி மட்டுமே பாதிக்கப் படும்.

சைக்கோ மோட்டர் ஸீஷர் என் பது இன்னொரு வகை. நோயாளி சூழ் நிலைக்குச் சம்பந்தமில்லாமல் நடந்து கொள்ளுவதும், பழக்கமான சூழ்நிலை இவர்களுக்கு ஒரு புது இட மாகக் காட்சியளிப்பதும் இந்த வகைத் தாக்குதலுக்கு உட்பட்டோருக்கு சகஜம். இந்த நோயின் தன்மையைச் சாதகமாக்கிக் கொண்டு, சில குற்றவாளிகள் தங்களுக்கு



இந்த நோய் இருப்பதாகக் கூறித் தப்பிக்க முயற்சி செய்வதும் உண்டு. 'என்னை அறியாமல் செய்து விட்டேன். என் காதில் யாரோ, அவனைக் கொல் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருப்பது மாதிரி இருந்தது' என்று மருத்துவக் காரணம் கூறி, தப்பிக்கப் பார்ப்பார்கள்.

'படுக்கை பூரா ஒரே கரப்பான் பூச்சி. என்னால் படுக்கவே முடியவில்லை' என்பார். படுக்கையில் ஒரு பூச்சி கூட இருக்காது. உடுக்கை அடி கேட்டால் சிலருக்கு வலிப்பு வந்து விடும். ஆகாய விமானச் சத்தம் சிலருக்கு வலிப்பு உண்டாக்கும். முல்லிகைப் பூவின் மணத்தால் வலிப்பு வந்துவிடும் சில பெண்களுக்கு. வெளிச்சமும் நிழலும் மாறி மாறிப் படுகிற போது கூட, சிலருக்கு வலிப்பு வருவதுண்டு!

ஜூலியஸ் சீசருக்கு இந் நோய் இருந்தது. கையைப் போட்டு முறுக்கி, அடக்கி, அதைக் கட்டுப்படுத்தி விடுவார் என்கிறது சரித்திரம். 'ஸீஷர்' என்ற பதமே அவர் பெயரிலிருந்துதான் உருவாயிற்று!

● வலிப்பு பரம்பரை நோயா?

● அல்ல. ஆனாலும் வெகு அபூர்வமாகச் சில குடும்பங்களில் பரம்பரையாக வருவதும் உண்டு.

● வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

தகுந்த மருந்துகளைத் தவறாது சாப்பிட்டு வருவதன் மூலம் தடுத்து விடலாம்.

● எப்போது டாக்டரை அணுக வேண்டும்?

முதல் முறை வலிப்பு வந்த உடனேயே டாக்டரை அணுக வேண்டும். இது மிக அவசியம். இப்போதெல்லாம் நவீன சோதனைக் கருவிகள் உள்ளன. இவற்றின் உதவியால் நோயின் காரணியைக் கண்டு பிடித்துச் சிகிச்சை அளிக்க முடியும்.

● சாவிக் கொத்து அல்லது இரும்பு கொடுக்கிறார்களே?

இது ரிஃப்ளெக்ஸ் எபிலெப்ஸி என்ற ஒரு சில வகை வலிப்புகளில் உதவக்கூடும். ஆனால், எல்லா வகை வலிப்பு நோயிலும் உதவாது.

● என்ன வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்?

குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் தொடர்ந்து மருந்து கொடுத்து வர வேண்டும். ஒருமுறை கூட நிறுத்தக் கூடாது. இருபத்து நாலு மணி நேரமும் அதை அடக்கியே வைத்திருக்க வேண்டும். பல கேசுகளில் இந்த ஐந்து வருடச் சிகிச்சையே நல்ல பலன் அளிக்கும். சில கேசுகளில் பத்து வருடங்களுக்குத் தொடர்ந்து மருந்துகள் சாப்பிட வேண்டியிருக்கும். இன்னும் மிகச் சில கேசுகளில் ஆயுள் முழுக்க மருந்து உட்கொள்ள வேண்டி வரும். ஆகையால் சரியான மருந்துகள் உட்கொள்ளுவதன் மூலம் நிவாரணம் அடைய முடியும்.

வலிப்பு வரும் காரணம் அறிந்து அதனைத் தவிர்ப்பதும் முக்கியம். பசியோடு வயிற்றைக் காயப் போட்டுக் கொண்டிருந்தால் வலிப்பு வரும் என்று தெரிந்திருக்கும் போது, பட்டினி கிடக்காமல் இருந்து அதைத் தடுக்கலாம்.

● வலிப்பு நோய் உள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளலாமா? சாதாரணமாக நம் சமூகம் அவர்களை ஒதுக்கவே நினைக்கிறது. இது அவசியமா...? இந் நோயாளிகள் சமூகத்துக்கு உதவியாய், சகஜ வாழ்க்கை நடத்த முடியாதா...?

● இருநூறு பேரில் ஒருவருக்கு வலிப்பு நோய் உள்ளது. இவர்களை ஒதுக்க ஆரம்பித்தால் என்னத்திற்காகும்! மேலும்,

வலிப்பு நோய் உள்ளவர்களை ஐயோ பாவம்! என்று ஒதுக்குவதோ அருவருப்புடன் வெறுப்பதோ மனோதத்துவ ரீதியான சிக்கல்களை உண்டாக்கும்.

இவர்கள் மற்ற மனிதர்களுக்குத் துளியும் குறைந்தவர்கள் அல்ல. வலிப்பு வந்த சிறுவனைப் பள்ளிக் கூடத்திலிருந்து வீட்டுக்கு அனுப்பி விடுவதையும் இந் நோய் கண்ட தொழிலாளர்களை வேலை நீக்கி வீட்டுக்கனுப்பி விடுவதையும் தவிர்க்க வேண்டும். தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வேண்டும். நெருப்பு, நீர் இவற்றின் அருகே செல்லாமல், பஸ், கார் ஓட்டாமல், ஏணி ஏறாமல் செய்யக்கூடிய பணிகளைத் தரலாம்.

விவாகரத்துச் சட்டத்தில் இப்போது, வலிப்பு நோயை மனநோயுடன் இணைத்து வைத்திருக்கிறார்கள். இதை மாற்ற வேண்டும்.

● இதற்கு ஏன் காக்காய் வலிப்பு என்கிறார்கள்?

கால்—கை வலிப்பு என்பதுதான் மருவி, காக்காய் வலிப்பு என்றாகி இருக்கிறது. இந் நோய்க்கும் காக்காய்க்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது!


— சாருகேசி

புகைப்படம்: யோகா

முகப் பரு வராமல் தடுக்க வழியென்ன?

○○ முகப் பரு வராமல் தடுக்க வழியென்ன? 1. மிருதுவான சோப் போட்டு முகம் கழுவி வைத்திருப்பது. 2. சூரிய ஒளி படுகிற மாதிரி முகத்தைச் சற்று நேரம் காட்டுவது. 3. எண்ணெய்ப்பசை மிக்க மேக்கப் சாதனங்களை உபயோகிக்காமல் இருப்பது. 4. இனிப்பு மற்றும் கொழுப்புச் சத்து கொண்ட பண்டங்களை உண்ணாமல் இருப்பது. 5. முகப்பருவை நீக்கி விடுவதாகக் கூறும் களிம்புகளைப் பயன்படுத்தாமல் இருப்பது!

— விக்கி.



பரிபாஷை

ராமசாமி வீட்டில் விடிந்தால் கல்யாணம். கேட்ட இடத்தில் சரியானபடி பணம் எளிதில் கிடைக்கவில்லை. எப்படியோ கஷ்டப்பட்டு முதல் நாள் காலை தான் பணம் கைக்கு வந்தது. உப்பிலிருந்து காய்கறி வரை வாங்க வேண்டும். ஜவுளி வாங்க வேண்டும். அலைவதற்கு நேரமில்லாததால் ஆளுக்கு ஒரு வேலையாகப் பிரித்துச் செய்தனர்.

வைத்தாவும் தண்டபாணியும் காய்கறிப் பொறுப்பு.

நேராக ஆனாமானா கடைக்குச் சென்றனர். எல்லாக் காய்கறியும் இருந்தன. ஐயர் போட்ட லிஸ்ட் படி வாங்கிக் கொண்டனர். கடைசியில் இலைக்கட்டு இரண்டு.

ஆனாமானா விழித்தார்.

காரணம். அவர் கடையில் இலைக் கட்டு ஸ்டாக்கில்லை!

''அண்ணே... நம்ம கோடி கடை குமரப்பாக்கிட்டே இலைக் கட்டு இருக்கு... போய் வாங்கியாந்துடுங்க... அப்புறம் காய்கறியையும்சேர்த்து வண்டியிலே ஏத்திக்கலாம்....'' என்றார் ஆனாமானா.

''சரி'' என்று புறப்பட்டனர் தண்டபாணியும் வைத்தாவும்.

கோடிக்கடை குமரப்பா கல்லாவில் உட்கார்ந்திருந்தார்.

''வாங்க தம்பி.... கல்யாணமா...? காய்கறி போடவா?'' என்று அன்புடன் வரவேற்றார் குமரப்பா.

''..காய்கறி எல்லாம் வாங்கியாச்சு அண்ணே இலைக்கட்டு மட்டும் இல்லே... ரெண்டு கட்டு இலை வேணும்...

''காய்கறி வாங்கிட்டீங்களா? எங்கே வாங்கினீங்க?''

''நம்ம... ஆனாமானா கடையிலேதான்.''

குமரப்பாவின் முகம் சுருங்கியது.

''இலைக்கட்டு இல்லீங்க...'' குத்தலாகச் சொன்னார் குமரப்பா.

''என்னங்க... இவ்வளவு கட்டு இருக்கு... வச்சுக்கிட்டே இல்லேங்கறீங்களே...'' பரிதாபமாகக் கேட்டார் தண்டபாணி.

''இல்லீங்க... எல்லாத்துக்கும் அட்வான்ஸ் வாங்கியாச்சு.. போயி... காய்கறி வாங்கின கடையிலேயே கேளுங்க... ஏற்பாடு பண்ணுவாங்க...'' என்றார் குமரப்பா.

வைத்தா, தண்டபாணியின் கண்கள் கலங்கின.

''எம்புட்டு விலை வேணாலும் வச்சுக்கங்க.'' கெஞ்சலாகக் கேட்டனர்.

''இல்லே தம்பி... போன்னா போங்க...''

இருவரும் புறப் பட்டனர்.

''என்னங்க... இலை வாங்கலையா?'' என்று கேட்டார் ஆனாமானா.


அழாத குறையாக நடந்ததைச் சொன்னார் வைத்தா.

''ஓ....ஹோ....'' கொஞ்சம் யோசித்தார் ஆனாமானா.

''இப்ப என்னங்க பண்றது?'' தவிப்புடன் கேட்டார் தண்டபாணி.

''கவலைப்படாதீங்க... இதோ ஏற்பாடு

மழபாடி ராஜாராம்



பண்ணறேன்...'' என்றவர் 'எலே கிட்டான்' என்று கூப்பிட்டார். வேலைக்காரப் பையன் கிட்டான் ஓடிவந்தான்.

''என்னங்க?''

''குமரப்பா அண்ணன் கடைக்குப் போயி நான் ரெண்டு கட்டு இலை கேட்டேன்னு கேட்டுட்டு விலை என்னான்னு தெரிஞ்சுக்கிட்டுவா...'' என்றார்.

கிட்டான் சிட்டாகப் பறந்து உடனேயே திரும்பிவிட்டான். அவனுக்கு மூச்சு இறைத்தது.

''என்னடா எலே? குமரப்பா என்ன சொன்னாரு?''

''ரெண்டு கட்டு லூனா பாவட்டாவாம்... ஆளை விட்டுத் தூக்கிக்கச் சொன்னாரு...'' என்றான் கிட்டான்.

''அடப்பாவி... லூனா பாவட்டாவா...! அவசரம் ஆத்திரம். வேறே எங்கேயும் போக முடியாதுன்னு நல்லாத் தெரிஞ்சுக்கிட்டு இல்லே மனுஷன் விலை சொல்றான்... ம்.. காலம்...'' என்று அலுத்தாற் போலச் சொன்னார் ஆனாமானா.

''அண்ணே.. எம்புட்டுன்னாலும் சரி... எடுத்துக்கிட்டு வரச் சொல்லுங்க...'' பரபரத்தான் வைத்தா.

''ஆமாண்ணே... இனிமே எங்கே போயி அலையறது?'' என்றான் தண்டபாணி.

''ம்... சரிதான். உங்க அவசரத்தைப் புரிஞ்சுக்கிட்டுத்தான் முப்பது ரூபா கட்டை நூறு ரூபாங்கறான்...ம்...''

''பரவாயில்லேங்க... ரெண்டு கட்டு தூக்கியாந்து வண்டியிலே ஏத்தச் சொல்லுங்க'' என்றபடி இரண்டு நூறு ரூபாய்த் தாளை நீட்டினான் வைத்தா.

ஆனாமானா அதை வாங்கிக் கொண்டார். ''ம்... உடனே பணம் கொடுத்தா ரொம்ப திமிரு ஏறிப் போயிடும்...ம்.. எலே கிட்டான்....'' என்றார்.

''என்னங்க..?''

''போயி ரெண்டு கட்டு தூக்கியாரச் சொல்லு... தூக்குக் கூலி எல்லாம் குடுக்க மாட்டேன்னு சொன்னேன்னு சொல்லு...'' என்றார்.

சில நிமிஷங்களில் இரண்டு இலைக் கட்டுகள் வந்தன. காய்கறி மூட்டைகள், இலைக்கட்டுகள் எல்லாம் டயர் வண்டியில் ஏறின.

''ரொம்ப நன்றிங்க... நாங்க வறோம்... மறந்துடாமே கல்யாணத்துக்கு வந்திடுங்க'' என்றபடி வண்டியில் ஏறினான் வைத்தா. தண்டபாணி வண்டியை ஓட்டினான்.

''...ம்... தன் கடையிலே காய்கறி வாங்கலேங்கறதுக்காக இலைக்கட்டு இல்லேன்னுட்டாரே இந்த குமரப்பா... சுத்தப் பொறாமை புடிச்ச ஆளு...'' என்றான் வைத்தா.

''ஆனாமானான்னா ஆனாமானா தான்! பாறேன்... ஆளை விட்டு... அட்வான்ஸ் குடுத்துவச்ச இலையை வாங்கிட்டாரே....'' என்று ஆனாமானாவைப் புகழ்ந்தான் தண்டபாணி.

..ம்... நல்ல வேளை. நம்ம கடையிலே இலைக்கட்டு இல்லே... முப்பது ரூபா கட்டை லாபம் வச்சு... அம்பதுன்னான் குமரப்பா.... நான்... வாய் ஜாலக்கா... லூனா பாவட்டாவை நூறுன்னேன்.... அவங்களும் நம்பிட்டாங்க... இன்னைக்கு நல்ல வேட்டை... அரைமணி நேரத்திலே நூறு ரூபா லாபம்...' என்று தம் மனத்துக்குள் எண்ணிச் சிரித்தார் ஆனாமானா.

''ஏங்க... லூனா பாவட்டான்னா அம்பது தானுங்களே?'' என்றான் கிட்டான்.

''உனக்கெல்லாம் புரியாதுடா பயலே!'' என்று அடக்கினார்.




ஒரு சமயம் முல்லாவின் நண்பர் ஒருவர் முல்லாவைப் பார்த்து, ''முல்லா! உங்களுடைய வயது என்ன?'' என்று கேட்டார்.

''நான் என் தம்பியை விட மூன்று ஆண்டுகள்பெரியவன்'' என்றார்முல்லா.

''போன வருடம் கேட்டபோது, அவரை விட நீங்கள் இரண்டு வருடங்கள் பெரியவர் என்று கூறினீரே?'' என்று வியப்புடன் கேட்டார் நண்பர்.

''போன வருடம் நான் இரண்டு வருடங்கள் மூத்தவன், ஒரு வருடத்துக்குப் பின்னரும் அப்படியே இருக்க முடியுமா? இப்போது நான் மூன்று வருடங்கள் பெரியவன்!'' என்றார் முல்லா!

— எஸ். முகம்மது யூசுப்.


தாக பாரம்
எடை தூக்குபவருக்கும் லிம்கா
எடை மிகுந்தவருக்கும் லிம்கா
நீங்கள், எடை தூக்கி தூக்கி, அல்லது உங்கள் எடையை சுமந்து சுமந்து களைத்து தாகத்தால் தவிக்கும் பொழுது... ஐஸோடானிக் ஸால்ட் அடங்கிய கிருமிகள் அற்ற லிம்கா அருந்தி தாகத்தை தணிப்பீர்.
Limca®
RADEUS/PE/L/2-89-TAM
ARTIFICIALLY FLAVOURED. CONTAINS NO FRUIT JUICE OR FRUIT PULP
® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD., BOMBAY.

ஏக போகத் தீவுகள்

24

விநோதினி எழுந்து வெளியேறும் போது, முதல்வர் அவனைப் பார்த்துச் சிரித்தார். பல் தெரியாத சிரிப்பு. எதிரி 'நான் தோற்றேன். என்னை விடு' என் கையில், ஜெயித்தவன் சிரிக்கிற பெருந் தன்மைச் சிரிப்பு. 'என்னமோ அடக்க முடி யாது என்றாயே. அந்த மாட்டையும் அடக்கி, மூக்கணாங்கயிறையும் போட்டு விட்டேனே பார்' என்கிற வீரச் சிரிப்பு. இன்று போய் நாளை வாராய் என்ற கருணைச் சிரிப்பு.

கிருஷ்ணமூர்த்தி சுருங்கிப் போனான். ஏதோ பேசிக் கொண்டிருந்து விட்டு வெளியே வந்தான். அந்த அதிகாலை நேரத் தில் முதல்வர் அழைத்து எதுவும் முக்கிய மாகப் பேசிவிடவில்லை என்பதை அவன் நினைவு கூர்ந்தான். விநோதினி கட்சியில் பொறுப்பேற்பதைத் தான் பார்க்க வேண்டும் என்று அவர் நினைத்திருக்கக் கூடும் என்றே அவனுக்குத் தோன்றியது.

வாயிலில் வந்து நின்றான். கட்சி முக்கி யஸ்தர்கள், அமைச்சர்கள், விண்ணப்பத் துடன் வந்தவர்கள், எந்தக் காரியமும் இல்லா மல் வெறுமே வேடிக்கை பார்க்க வந்த வர்கள் என்று ஒரு பெரும் கூட்டமே அங்கு இருந்தது. கூட்டத்தில் பலரும் அவனை வணங்கினார்கள். வேடிக்கை பார்க்கும் கூட்டத்திலிருந்து ஒற்றைக் குரலொன்று "இளந்தலைமுறைத் தலைவர் கிருஷ்ண மூர்த்தி" என்றது. ஒரு கும்பல் "வாழ்க" என்றது. உள்ளத்தில் எவ்வளவு கொந் தளிப்புகள் இருந்தாலும் இந்த மாதிரி ரசிகர் கள் வாழ்த்துரையில் புன்னகை சிந்தி அதை அங்கீகரிப்பதே நல்ல அரசியல்வாதிகளின் இலட்சணம். கிருஷ்ணமூர்த்தியால் அதைச் செய்ய முடியவில்லை.

அவ்வளவு பெரிய கூட்டத்தில், ஜனசந் தடியில் தான் மட்டும் தனி என்பது போல் அவன் நின்றான். மனித முகங்களும், அவர்களது பேரோசைகளும் எதிர்விளைவு ஏற்படுத்த முடியாத தூரத்தில் அவன் நிற்பது போல் அவனுக்குத் தோன்றியது. ஆக மொத்தத்தில் தான் ஏமாற்றப்பட்டு விட்டது போல் அவன் உணர்ந்தான். நிறைய கார்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் எது தன்னுடையது என்று அவன் குழம்பினான். நல்ல வேளையாக டிரைவரே அவன் முன்வந்து நிற்கவும், அவனைப் பின் பற்றி அவனுடன் நடந்தான்.

"எங்கே போகணும் சார்?" என்றார் டிரைவர்.

"வீட்டுக்கு. இல்லை. வேண்டாம். காந்தி சிலைக்குப் போங்க."

"பீச்சுக்கா!"

டிரைவருக்கு எழுந்தது நியாயமான சந் தேகமே! காலை எட்டு மணி போல், வழக் கம் இல்லாத வழக்கமாக அவன் பீச்சுக்குப் போவது செயற்கையாகத் தோன்றி இருக்க வேண்டும். அவர்கள் பீச்சுக்குத்தான் போனார்கள். காந்தி சிலையை ஒட்டி, நிழல் தரும் மரத்தடியில் அமர்ந்து கொண்டான் கிருஷ்ணமூர்த்தி. தூரத்தில் பெண்கள் ஊற்று தோண்டி மண் பானைகளிலும் பிளாஸ்டிக் பானைகளிலும் தண்ணீர் எடுத் துப் போய்க் கொண்டிருந்தார்கள். யார் ஆட்சி செய்தாலும் இந்தப் பெண்கள் வெகு தூரத்திலிருந்து வந்து இப்படி, ஊற்றுத் தண்ணீர் எடுக்கும்படிதான் நேர்கிறது. கிருஷ்ணமூர்த்தி பல முறை அமைச்சர் களிடம் இதுகுறித்து, எல்லாக் காலங் களிலும் தண்ணீர் கிடைக்கும் நிரந்தர ஏற் பாட்டுக்கு ஒரு வழி சிந்திக்கக் கூடாதா என்று கேட்டிருக்கிறான். துரதிருஷ்டவச மாக அவர்கள் யாருக்கும் அதுபற்றிச் சிந் திக்க நேரம் இல்லாமல் ஆகிவிட்டிருந்தது. 'வெம்பாலைவனங்களில் வாழ்கிற மக்க ளுக்குக் கூட அந்த நாட்டு அரசாங்கங்கள், எப்படியோ நீரைக் கொண்டு போய்க் கொடுக்கையில், இத்தனை ஆறுகள் மலிந்த, கடலிலேயே சென்று கலந்து வீணா கிற வற்றாத ஜீவநதிகள் கொண்ட இந்தத் தேச மக்கள் மட்டும் ஏன் கஷ்டப்பட வேண்டும்,' என்று கூட அரசின் மேல்மட்ட மனிதர்களோடு, அவன் சண்டை போட்டி ருக்கிறான். குடிசை வாழ் பெண்களுக்கு, இருபது வயதுக்குக் குறைந்தவர்களுக்கு, பவுடர் வழங்கும் திட்டம் ஒன்று கொண்டு வரவேண்டும் என்று பேசிய அமைச்சரிடம், இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று அவன் கேட்டிருக்கிறான். 'இளம் பெண் களின் ஓட்டுகளைத் தக்க வைத்துக் கொள்ள' என்றார் அவர்.

அவன் மனம் சலித்தது. எல்லா முனை களிலும் அவனுக்கு ஏன் இந்த ஏமாற்றம் வர வேண்டும்? அரசியலையும், இந்த அரசை யும் மிகக் கடுமையாக விமர்சித்த விநோ தினி, அதற்குள் மனம் மாறி, அதில் பங் கேற்க வந்தது எப்படி என்று குழம்பினான்.

பிரபஞ்சன்

அரசியலில் பங்கேற்கலாம் என்று முடிவு செய்தபின், அதைத் தன்னிடம் அல்லவா அவள் கலந்தாலோசித்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் அவளாக நேராக யாரையோ பிடித்து முதல்வரை அணுகிப் பதவி பெறுவது தன்னைப் புறக்கணிப்பது ஆகாதா? புறக்கணிப்பது என்று அவள் முடிவு செய்து விட்டாள் எனில், அப்புறக்கணிப்பின் எல்லை எது? அவன் காதலையும் கூடவா?

அவன் அமர்ந்த இடத்தில் வெயில் கவிந்தது. தவிரவும், அன்று காலை தொடங்கி அவன் எதுவும் சாப்பிடாமல் இருந்ததை அவன் வயிறு அவனுக்கு அறிவித்தது. எழுந்தான். வீடு வந்து சேர்ந்தான். வீட்டுக்கு முன் கார் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். யாராக இருக்கும் என்ற யோசனையுடன் உள்ளே நுழைந்தான்.

அங்கே அவனுக்காக விநோதினி காத்திருந்தாள்!

அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். மரியாதைக்குரிய சிரிப்பு. ஏமாற்றி விட்டேன் பார் என்பது போன்ற பாவமற்ற சிரிப்பு.

அடுப்படி வரை சென்று அவள் சமையல்காரன் செய்து வைத்திருந்த உணவு வகைகளைக் கொண்டு உணவு மேஜையின் மேல் வைத்தாள்.

''சரி எழுந்திருங்கள். சாப்பிட்டவாறு பேசலாம்.''

அவன் எழுந்து உணவு மேஜையின் முன் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினான்.

''அப்புறம்... தலைவியாகி விட்டீர்கள்'' என்றான் கிருஷ்ணமூர்த்தி, அவள் முகம் பார்க்காமல்.

''ஹூம்'' என்று ஒப்புக் கொள்வது போல் தலையை அசைத்தாள் அவள்.

''எத்தனை நாளாய் இந்த அரசியல் ஆர்வம்?''

''சமீப காலமாகத்தான்.''

''என்னிடம் அதை வெறுப்பதாகச் சொன்னீர்களே...''

''நேற்றிருக்கிற மனோபாவம் இன்றைக்கும் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறதா, என்ன?''

''பெரியவர்கள் சொன்னது இதைத்தான் போலும். கணத்துக்குக் கணம் மனம் மாறும் சுபாவம் கொண்டவள் பெண்.''

''பெண்ணைப் பற்றி இன்னும் எவ்வளவோ இருக்கே. எழுதியது ஆண்கள் அல்லவா? அப்படித்தான் இருக்கும்.''

''நானும் அவற்றைப் பொய் என்றுதான் நேற்று வரை நினைத்திருந்தேன்.''

''சாப்பிடுங்கள். ஏன்? இன்றைக்கு



என்ன நேர்ந்தது?''

''தெரியாதது மாதிரி பேசாதீர்கள். ஏன், விநோதினி? என்னை ஏன் இப்படிக் கேவலப்படுத்துகிறீர்கள்? நான் ஏதோ பெரிய அரசியல் புள்ளி என்று நடமாடிக் கொண்டிருக்கிறேன். என்னைப் புறக்கணித்து என்னிடம் கூட ஒரு வார்த்தை சொல்லாமல், இந்த முடிவை எடுத்திருக்கிறீர்கள் என்றால், என்னைப் பற்றி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

விநோதினிக்கு மனத்துக்குள் மகிழ்ச்சி அரும்பியது. அவள் எதிர்பார்த்தவற்றில் முதல் கட்டம் நிகழ்ந்திருக்கிறது. அதாவது, அவனையும் அறியாமல் அந்தக் கட்சிக்குள் அவள் அங்கம் வகிக்க முடியும் என்பது அவனது 'ஈகோ'வுக்கு அவள் தரும் சாட்டை அடி. அது அவனுக்கு வலித்திருக்கிறது. அந்த வகையில் சந்தோஷம்தான்.

கிருஷ்ணமூர்த்தி சொன்னான்.

''விநோதினி.. மேலிடம் உன் மீது ஒரு வகையான பார்வையைக் கொண்டிருக்கிறது என்பதை நீங்களே அறிவீர்கள். உங்கள் அம்மா செல்வாக்கில் இருக்கும் போதே உங்களை அரசியலில் நுழைத்து விட விரும்பினார். நீங்கள் ஏன் அதை அப்போது விரும்பவில்லை? என்னிடம் நீங்கள் சொன்ன சமாதானம் எனக்கு நினைவுக்கு வருகிறது. அரசியல் மனிதர்களின் கண்களில் எந்நேரமும் பசி ஒன்று கனன்று கொண்டிருக்கிறது. அந்தப் பசிக்கு என்னால் ஈடுகொடுக்க முடியாது. ஆகையால் நான் அரசியலை எடுத்துக் கொள்ள முடியாது என்றீர்கள். இப்போது அரசியல் தலைவி ஆகியிருக்கிறீர்கள். அப்படியானால், அரசியல்வாதிகளின் கண்களில் உள்ள பசி நீங்கி விட்டது என்று அர்த்தமா? அல்லது, அந்தப் பசியை உங்களால் சமாளிக்க முடியும் என்பது அர்த்தமா?''

''பசி போய் விட்டது என்றும் நினைக்கவில்லை. என்னால் அவர்களைச் சமாளிக்க முடியும் என்றும் நான் நினைக்கவில்லை. மனிதர்களைப் பற்றிய வேறு முடிவுக்கே நான் வந்திருக்கிறேன். என் பார்வையில் சுத்த யோக்யர் என்றோ, சுத்த அயோக்கியன் என்றோ யாரும் உலகில் இல்லை என்கிற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன்."

''ரொம்ப சௌகர்யமான வாதம். அரசியல்வாதியாகி விட்டீர்கள். என் வாழ்த்துக்கள்.''

அவன் கையைக் கழுவிக் கொண்டு எழுந்தான்.

உணவு முடித்த பின் மனிதர்க்கு மனம் ஆசுவாசப்படும். சிந்திக்க நேரம் கிடைக்கும். மனம், சிந்திக்க அவகாசம் ஏற்படுத்தித் தரும். கிருஷ்ணமூர்த்திக்கும் அந்த அமைதியான மனநிலை வாய்த்தது.

''மேலிடத்தில் உங்களைப் பற்றி என்ன பேச்சு இருக்கிறது என்று உங்களுக்குத், தெரியுமா?'' சிகரெட்டைக் கொளுத்தியவாறு அவன் கேட்டான்.

''தெரியாது.''

''உங்களை வெறும் பெண்ணாக, அழ

கான பெண்ணாக மட்டுமே பார்க்கிறார்கள்.''

''ஆண்கள் உலகில் அது தவிர்க்க முடியாததுதானே?''

''தெரிந்தும் நீங்கள் அவர்களுடன் பழங்க நினைப்பது உங்களுக்கு அழகா? அது உங்களுக்கு அவமானமாக இல்லையா?''

அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''மானம், அவமானம் என்பதெல்லாம் என் மனசைப் பொறுத்த விஷயம் அல்லவா, கிருஷ்ணமூர்த்தி. என் மனம் குறுகுறுக்காத விஷயம் எனக்கு மானம்தானே. தெரிந்தே தப்பு செய்தால் அது அவமானம். நான் ஒருகாலும் அதைச் செய்ய மாட்டேன்.

''எனக்கு ஒரு பெண்ணைத் தெரியும். ஒரு பெரிய நட்சத்திர ஓட்டலில் ஏராளமான சம்பளத்துடன் அவளுக்கு ரிஸப்ஷன் வேலை கிடைத்தது. அவள் அந்த வேலையை ஏற்கவில்லை. மாறாக, அரசாங்கத்தில் குமாஸ்தா வேல்லையை ஏற்றுக் கொண்டாள்.''

''அதனால் எனக்குக் கிடைக்கும் நீதி?''

''இதுதான். தன் உடல் அழகு காட்டிச் சம்பாதிக்கும் பணத்தை அவள் விரும்பவில்லை.''

''அது மாதிரி?''

''உங்கள் அழகை, இளமையைக் கட்சி பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது. இதை நீங்கள் அனுமதிக்கலாமா?''

அவள் மனம் உண்மையில் மகிழ்ந்தது. இந்த உணர்வு, அவள் காதலனுக்கும், கணவனுக்கும்தான் வர முடியும். அவன் அவளை இன்னமும் நேசிக்கிறான் என்பதே அவன் கோபத்தின் பொருள், என்பது அவளுக்குப் புரிந்தது. ஆனாலும் அப்போதைக்கு அவன் கோபத்தைக் கிளறுவதே நல்லது என்று முடிவு செய்தாள்.

''சரி. அப்படியே இருக்கட்டும். அதனால் என்ன தப்பு?''

''என்ன தப்பா? இனி உங்களிடம் பேசிப் பயனில்லை.''

''எனக்கு ஒரு உதவி செய்யுங்கள்.''

''என்ன?''

''கட்சியின் மூத்த தலைவர்கள், மற்றும் அமைச்சர்களிடம் என்னை அழைத்துப் போய் அறிமுகம் செய்து வையுங்கள்.''

''அது எதற்கு?''

''என்னை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?''

''சரி. செய்கிறேன்'' என்றான் கிருஷ்ணமூர்த்தி அரை மனத்துடன்.

''நான் புறப்படுகிறேன்.''

''எங்கே?''

''தலைமை அலுவலகத்துக்கு. என்னை வரவேற்க அங்கே ஒரு கும்பல் காத்திருக்கும்.''

''கும்பல் என்று சொல்லாதீர்கள். தொண்டர்கள் என்று சொல்லுங்கள்.''

இருவரும் தலைமை அலுவலகம் வந்து சேர்ந்தார்கள்.

தொண்டர்கள் கூட்டம் முண்டி அடித்து அவளுக்கு மாலைகளையும், பொன்னாடைகள் என்று கைத்தறித் துண்டுகளையும் போர்த்தினார்கள். கூட்டம், அவனைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுக்கித் தள்ளியது. விநோதினி தன் அறைக்குச் சென்றாள்.

கிருஷ்ணமூர்த்தி அலுவலகத்தின் வாயிலில் நின்று, இனி என்ன செய்வது என்று யோசித்தான்.

(தொடரும்)



ஒருவர்: கல்யாண அழைப்பிதழுக்குக் கிழே ஏதோ இருக்கே, என்னது?

நண்பர்: கல்யாணத்துக்கு நேரில் வர முடியாதவர்கள் மணியார்டர் மூலமோ, டிராப்டு மூலமோ மொய் அனுப்பலாம்னு இருக்கு!

— எஸ். முகம்மது யூசுப்.


''ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க? என்ன ஆச்சு?''

''அந்த ஆளு என்னைச் சுத்த அல்பம்னு திட்டிட்டுப் போறாரு. அதான்!''


''அடடா! எதுக்காக அப்படித் திட்டினாரு?''

''ஐயோ பாவம்னு இரக்கப்பட்டுக் கொஞ்சமா லஞ்சம் கேட்டதுக்குத் தான்!''

— வேங்கடேசன்.



எழுதலாமே எங்களுக்கு!...



★ வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உடையவரா நீங்கள்?

★ ஆங்கில மொழியில் போதிய புலமையின்மையினால் உங்களது முன்னேற்றம் தடைபடுகிறதா?

★ மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதை ஓரளவு புரிந்து கொண்டாலும், அவர்களிடம் ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசிவிடுவோமோ என்று தயக்கமாக இருக்கிறதா?

★ ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற உங்களது விருப்பம் நிறைவேற பல வழிகளில் முயன்றும், பல புத்தகங்களைப் படித்தும் நீங்கள் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படவில்லையா?

★ இக்குறைகளை யாரிடம் கூறுவது, எப்படித் தீர்வு காண்பது என்பது பற்றி சிந்தித்து வருகிறீர்கள் அல்லவா?

கவலையை விடுங்கள்.

தயக்கமின்றி ஆங்கிலத்தில் சரளமாக உரையாட வேண்டும், இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுதும் ஆற்றல் பெற வேண்டும் என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் நிறைவேற ஓர் எளிய பயிற்சி முறையினை தமிழகத்தின் தலைசிறந்த கல்விநிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் அளித்து வருகிறார்கள்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் முறையில் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம். "நேர்முகப் பயிற்சியும் உண்டு".

இன்றே ஒரு போஸ்ட் கார்டில் உங்களது விருப்பத்தை எழுதலாமே எங்களுக்கு.

நீங்கள் எழுத வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்
த. பெ. எண் 4986,
9, மேட்லி ரோடு, தி.நகர்,
சென்னை 600 017.

காதல் நிறைவேறக் காத்திருந்து...

அபர்ணா நாயுடு

டெலிபோனில் வந்த அந்தக் குரல் அவளுடைய உணர்ச்சிகளைக் கிளறி விட்டது.

மகிழ்ச்சி பொங்கியது. கண்கள் நிறைந் தன. இமையோரத்தில் ஒரு கண்ணீர் முத்து கன்னத்தில் வழியத் தயங்கி நின்றது. மார்பின் படபடப்பு காதுகளை நிரப்பியது. விரல்களின் நடுக்கத்தில் டெலிபோன் கையிலிருந்து நழுவி விழுந்து விடும் போலிருந்தது.

மறு முனையில் அவன் பரபரப்போடு திரும்பவும் குரல் கொடுத்தான்.

''ஹலோ... ஹலோ... லோசனி தானே?''

''ஆமாம்'' என்றாள்.

''தெரிகிறதா?''

''ம்.''

''நான்தான்... சேகரன்.''

''பேரைச் சொல்ல வேண்டியதில்லை. குரலே இனம் காண்பிச்சுடுச்சு.''

சில நொடிகள் எதிர் முனையில் மௌனம். பின்னர் பேசிய போது குரல் கரகரத்துக் கேட்டது.

''நாம பேசி ரொம்ப நாளாயிட்டது.''

''ஆமாம்.''

திரும்பவும் தயக்கமான இடைவெளிக் குப் பிறகு மறுமுனையில் அவன் பேசினான்.

''உன் கிட்டே எப்படிக் கேட்கற துன்னே தெரியலை.''

அவள் பேசாமல் இருந்தாள்.

''நான் கேட்கப் போறது உன் மேலே



நம்பிக்கைக் குறைவினால இல்லை லோசனி. எனக்கு நானே உறுதிப் படுத்திக்கத்தான்.''

அவள் அப்போதும் பேசாமல் இருந்தாள்.

தயக்கத்தோடு கேட்டான்.

''நீ எனக்காக இன்னும் காத்துக் கொண்டுதானே இருக்கே?''

அவள் உடைந்து அழுதாள்.

அவன் பதறினான்.

''நான் தப்பாக் கேட்டுட்டேனா? வேறே மாதிரி ஏதாவதுன்னா என்னை மன்னிச்சிடு.''

''இல்லைங்க வேறே மாதிரி எதுவுமே இல்லைங்க. காத்திருக்கேன்னு உங்களுக்கு வாக்குக் கொடுத்தேன். அப்படியே காத்துக்கிட்டுத் தாங்க இருக்கேன்.''

''பின்னே இந்த அழுகை?''

''எதை நீங்க கேட்கணும்னு இத்தனை நாளா காத்துக்கிட்டிருந்தேனோ அதை உங்க குரல் தெரிவிச்சப்போ ஏற்பட்ட சந்தோஷம். அடக்க முடியாத உணர்ச்சிக் கொந்தளிப்பு.''

சில நொடிகள் இருவருமே மௌனமாக இருந்தார்கள். அவள்தான் அதைக் கலைத்தாள்.

''நீங்க சொன்னபடி பொறுமையைக் கடைப்பிடிச்சுக் காத்துக்கிட்டுத் தாங்க இருக்கேன்.''

''ரொம்ப மகிழ்ச்சி லோசனி.''

''உங்க பொறுப்புகளைத் தீர்க்கணும் னீங்க. மூன்று தங்கைகளையும் படிக்க வச்சுக் கல்யாணம் செய்து கொடுக்கணும் னீங்க.''

''உண்மைதான்.''

''தம்பியைப் படிக்க வச்சு ஆளாக்கணும், கான்சரோட போராடின உங்க அம்மாவைக் கரையேத்தணும் னீங்க.''

''ஆமாம்!''

''இத்தனை பொறுப்புகளுக்கும் கடமைகளுக்கும் நம்ம கல்யாணம் இடையூறா இருக்குமோன்னு பயந்தீங்க.''

''உண்மைதான்.''

''இதெல்லாம் தீர்ந்து பணவசதியைப் பெருக்கிக்கிட்டாத்தான் நாம கல்யாணம் செஞ்சுக்கிட்டு சுகப்பட முடியும்னு நம்பறதா சொன்னீங்க.''

''உண்மைதான். உனக்கும் இதே மாதிரி பிரச்னைகள் இருக்கிறதா நீ சொன்னே.''

''ஆமாங்க.''

''இந்தப் பிரச்னைகளையெல்லாம் தீர்க்காம நாம ரெண்டுபேரும் கல்யாணம் செஞ்சுக்கிட்டா நம்ம ரெண்டுபேருடைய குடும்பங்களும் தத்தளிச்சுப் போயிடும்னு சொன்னே.''

''வாஸ்தவம்.''

''இந்தப் பிரச்னைகளைத் தீர்த்துட்டு, கொஞ்சம் வசதிகளையும் பெருக்கிக்கிட்டு அதுக்கப்புறம் கல்யாணம் செஞ்சுக்கிட்டு நிம்மதியா, மகிழ்ச்சியா வாழ்க்கை நடத்தறது; அது வரைக்கும் நாம சந்திச்சுப் பேசக் கூடக் கூடாதுன்னு முடிவு செஞ்சோம்.''

''நேருக்கு நேர் சந்திச்சு, ஒருத்தரோட ஒருத்தர் பேசினா, எங்கே நம்ம மனசு மாறிப் போயிடுமோன்னு பயம்தான் அந்த முடிவுக்குக் காரணம்.''

''அப்படி மனசு மாறிக் கல்யாணம் செஞ்சுக்கிட்டு நம்ம பொறுப்புகளைக் கைவிட்டுடுவோமோன்னு பயம்.''

''இப்போ எல்லாப் பொறுப்புகளுமே ரெண்டு பேருக்கும் தீர்ந்து போயிடுச்சு. வசதிகளும் ஓரளவுக்கு வந்தாச்சு.''

''அதனாலதான் இப்போ போன் செஞ்சேன், நாம சந்திச்சுப் பேசணும். நம்ம கல்யாணத்தை எப்போ, எங்கே, எப்படி வச்சுக்கலாம்னு முடிவு செய்யணும்.''

''செய்யலாங்க. அதுக்குத்தானே காத்திருக்கேன்.''

சந்தித்தார்கள்.

உணர்ச்சிக் கொந்தளிப்பான சந்திப்பு.

கடந்து விட்ட காலத்தை, இழந்து விட்ட நாட்களைக் கண்ணீரில் கரைத்துப் போக்கிய சந்திப்பு.

இனி ஏற்கப் போகும் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிடுவதற்கான சந்திப்பு.

பதிவுத்திருமணம், சாட்சிக்கு இரண்டு பேர் என்று எளிய திருமண முடிவுக்கு வழிகோலிய சந்திப்பு.

திருமணப்பதிவாளர் நிமிர்ந்து பார்த்தார். கேட்டார்.

''நீங்கதான் மணமகனா?''

''ஆமாம்.''

''பேரு?''

''சேகரன்.''

''வயசு?''


''ஐம்பத்தஞ்சு.''

''மணமகள் பேரு?''

''லோசனி.''

''வயசு?''

''ஐம்பது.''



''என்னடி! ஆபீசுக்கு அரைநாள் லீவு போட்டுட்டுக் கிளம்பிட்டே...?''

''இன்றைக்கு எனக்கும் என் மாமியாருக்கும் சண்டை இருக்கு; சீக்கிரம் வரச் சொன்னாங்க!''

— மகேந்தி.

ஆயுர்வேத முறையில் புற்று நோய்க்கு சிகிச்சை



லக்கப்பா அனுமந்தப்பா பூஜாரியாகிய எனக்கு வயது 39. எனது இடது காலில் சர்கோமா மிருதுவான தசையில் (Sarcoma Soft Tissue) புற்று நோயினால் அல்லல்பட்டுக் கொண்டிருந்தேன். இரண்டு முறை ச ஸ்திர சிகிச்சை செய்து கொண்டும் கெமோ தெரபி மற்றும் ரேடியம் சிகிச்சை செய்து கொண்டும் (Chemotherapy and Radiation) எந்த குணமும் தெரியவில்லை.

நான் நம்பிக்கை தளர்ந்த நேரத்தில் கன்னட பத்திரிகை ஒன்றில் ஹைதராபாத் சிக்கட்பள்ளியைச் சேர்ந்த ஆயுர்வேத டாக்டர் எம். பாபுராவ் அவர்களைப் பற்றி அறிந்தேன். நான் டாக்டர் பாபுராவ் அவர்களிடம் கடந்த ஒன்பது மாதங்களாக மருந்து சாப்பிட்டு வந்தேன். இப்பொழுது நான் பூரண குணம் அடைந்திருக்கிறேன்.

நான் இந்த விளம்பரம் செய்வதன் நோக்கம் என்னவென்றால் இதே வியாதியினால் கஷ்டப்படும் நோயாளிகள் டாக்டர் பாபுராவை அணுகி சிகிச்சை பெற்று குணம் பெறலாம்.


லக்கப்பா அனுமந்தப்பா பூஜாரி

ஜவுளி வியாபாரி,
முடல்கி போஸ்ட், கோகக் தாலுக்கா,
பெல்காம் ஜில்லா, கர்னாடகா.


கால அட்டவணை

விலாசம்	போன் நம்பர்	பார்க்கும் கிழமைகள்
டாக்டர் எம். பாபுராவ் வீடு கேன்ஸர் இன்பர்மரி 2-1610, செடம்ரோடு மொமுலா கூடம் குல்பார்கா (கர்னாடகா)	21452	பிரதி திங்கள், செவ்வாய்
கேன்ஸர் இன்பர்மரி 1-1-271/3, சிக்கட் பள்ளி பஸ் ஸ்டாண்டு அருகில் ஹைதராபாத் 20	64735	பிரதி வெள்ளி
C/o ஹோட்டல் ராம் இண்டர்நேஷனல் 114 கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சென்னை 34	473350 473422	பிரதி சனி
C/o ஹோட்டல் பிருந்தாவன் மகாத்மா காந்தி ரோடு பெங்களூர்	573271	பிரதி ஞாயிறு
C/o ஹோட்டல் மிட்டவுன் அன்டேரி (மேற்கு ரயில்வே ஸ்டேஷன் எதிரில்) பம்பாய்	6286635 6203476 6288882	பிரதி புதன்

நீங்கள் கேட்டவை — தராசு



* வானளாவிய அதிகாரம்



* மறைவு குறித்து...

* வி. செல்வராஜ், வலங்கைமான். *

? ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு அதிகமாகவே அரசு அலுவலருக்கு ஊதிய உயர்வு அளித்துள்ள கலைஞரைப் பற்றி...?

! அவருடைய தாராள உள்ளத்தைக் குறை கூறினால் 'அல்பம்' என்ற பெயர்தான் எனக்கு மிஞ்சும். ஆனால் பின்வரும் மூன்று விஷயங்களைக் கூறலாம். 1. சம்பளம் கணிசமாக அதிகரித்திருப்பதால் இனி இம் ஊழலுக்கு இடமில்லை. இதில் முதல்வர் தீவிரமான கண்டிப்பு காட்ட வேண்டும். 2. கூடுதல் சம்பளத்தைப் பெறுகிறவர்கள் உழைப்பிலும் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும். மனச்சாட்சிக்கு விரோதமின்றி வேலைகளைக் கவனித்துத் 'தாமதங்களைத் தவிர்க்கும் அரசு' என்ற நற்பெயரைப் பெற வேண்டும். 3. புதிதாக யாரையும் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு வேலைக்கு நியமிப்பதில்லை என்று முதல்வர் தீர்மானித்து, இதில் உறுதியாக இருக்க வேண்டும். இம் மூன்றையும் கவனித்தால் ஊதிய உயர்வு காரணமான அதிகப்படி செலவு சுமையாகவே தெரியாது!

* ஆர். சந்திரன், சென்னை.

? இனி சால்மன் ருஷ்டிக்குச் சுதந்திரம் தானே?

! ஊகும்! இனிமேல்தான் அவர் இன்னும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்! கொமேனியிடம் பக்தி வெறி கொண்டவர்கள் மிகுதி என்பதைத்தான் அவர் சவ அடக்க ஊர்வலத்தின் போது பலர் மரணம் அடைந்ததிலும் சடலமே உருண்டு விழுந்ததிலும் கண்டோமே? புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள காமேனி, மரண தண்டனையை ரத்து செய்தால் ருஷ்டி சற்றே நிர்ப்பயமாக இருக்கலாம்!

* ஆர். ரத்தினசாமி, புளியம்பட்டி.

? அமைதிப் படையை வாபஸ் வாங்கப் பிரேமதாசா கெடு வைத்துள்ளது எப்படி இருக்கிறது?

! இந்தியா — இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானதுமே, 'இந்த ஒப்பந்தம் வெற்றி பெறுமா?' என்று சந்தேகப்பட்டு கல்கி உள்பட பல ஏடுகள் எழுதிய தலையங்கங்களை மெய்ப்பிப்பதாக உள்ளது. இன்று பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கும் பேச்சு வார்த்தைகளின் முடிவில் ஏற்படக் கூடிய ஒப்பந்தம் பற்றியும் அதே போன்ற ஒரு கேள்வியைத்தான் எழுப்ப வேண்டியிருக்குமோ என்ற ஐயப்பாட்டினையும் தோற்றுவிக்கிறது!

* கே. ரமேஷ், சென்னை.

? 'இன்றைக்கு யாராவது ஒரு தொண்டர் கட்சித் தேர்தலில் வெற்றி பெற்று வந்து, 'நான் இருக்கிறேன், நீ விலகிக் கொள்' என்று கூறினால் அவர் காலைத் தொட்டுப் பதவியில் உட்கார வைக்கிறேன்' என்ற கலைஞரின் பேச்சு குறித்து?

! உளவாக்கட்டிக்காகத்தான் இதெல்லாம். அடக்கமாக இருப்பதாகக் காட்டிக் கொள்ள வேண்டாமா? கலைஞர் இருக்கும் வரை வேறு ஒரு தொண்டன் எப்படி கட்சித் தேர்தலில் வெற்றி பெற்றுத் தலைமைப் பதவிக்கு வர முடியும்? 'நான் ஆண்டது போதும்; இனி விலகிக் கொள்கிறேன்; புதிய தலைமை உருவாகட்டும்' என்று கலைஞர் கூறுகிற நாள் வரும் போதுதான் அது நடக்கும்.

* இடலை சுதா, குளத்தூர்.

? 'செங்கை — அண்ணா மாவட்டம் என்பதை ஒப்புக் கொள்ள மாட்டோம்; மீண்டும் ஆட்சிக்கு வந்து பெயரை மாற்றுவோம்' என்று திருநாவுக்கரசு கூறியிருக்கிறாரே?

'ஜெ' 60 நாட்களுக்கு ஒரு முறை கையெழுத்திட்டால் போதுமா?



* தாராள உள்ளம்

! அவர் கூறியிருப்பது ரொம்ப சரி; பதவிக்கு வந்தால் உருப்படியான காரியமாக எதையும் செய்ய மாட்டார்கள்.

* வெ. சங்கரநாராயணன், திருவண்ணாமலை.

? 'தீவிரமாக அரசியலில் ஈடுபடுவேன், ராஜீவைப் பிரதமராக மீண்டும் அமர்த்து

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

வி. செல்வராசு,
18 — சி, மரம்வெட்டி தெரு,
வலங்கைமான் — 612 804.

வேன்' என்று பண்ருட்டி ராமச்சந்திரன் கூறி யிருப்பது எதைக் காட்டுகிறது...?

! ராஜீவ் பதவியில் அமருகிறாரோ இல்லையோ, நாமாவது ஒரு எம்.பி. ஸீட்டில் அமர்ந்து விடலாம் என்ற ஆசையைத்தான்!

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'ஆங்கிலப் பள்ளிகளில் தமிழுக்கு முதன்மை தராவிட்டால் எனது வானளாவிய அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றைக் கூண்டோடு அழித்து விடுவேன்' என்று சபாநாயகர் எச்சரித்திருக்கிறாரே?

! குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் தமது வானளாவிய அதிகாரம் செல்லுபடியாகும் என்று பி.எச். பாண்டியன் புரிந்து கொண்டு பேசினார், முன்பு.

* எஸ். பி. சண்முகம், கட்டனாச்சம்பட்டி.

? கோமேனி மறைவு குறித்து?

! அவரை ஓர் அரசியல் தலைவர் என்பதை விட மதத் தலைவர் என்பதே சரி. அதிலும் ஒரு தீவிரவாதி. அப்படி ஒரு தீவிரவாதியாக மாற அவர் வாழ்க்கையே துணை செய்தது. இவர் ஐந்து மாதக் குழந்தையாக இருந்தபோதே ஈரானில் ராஜ வம்சத்தை எதிர்த்த இவர் தகப்பனார் சுட்டுக் கொல்லப்பட்டார். எனவே பழிவாங்கும் உணர்வு சிறு வயதிலேயே ஆழ வேரூன்றியது. குரான் பள்ளியில் சேர்ந்து படித்த பிறகு மதத்தையும், அரசியலையும் பிரிக்கவே முடியாது என்ற முடிவுக்கு வந்து விட்டார். இளைஞராக இருபது ஆண்டுகள் ஈரானிய ராஜ பரம்பரையை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். வேலை நிறுத்தங்கள், கிளர்ச்சிகளை ஊக்குவித்தார். நாடு கடத்தப்பட்டார். பதினாலு ஆண்டுகள் அனைவராலும் மறக்கப்பட்டு ஈராக் நாட்டில் வாழ்ந்தார். பதுங்கிக் கிடந்த அவர் பாயக் கூடிய தருணம் மீண்டும் வந்தது. பாய்ந்தார். ஈரானிய அரசர், மேல் நாட்டு வல்லரசுகளின் கைப்பாவையாக மாறி விட்டதை எதிர்த்து நடந்த கிளர்ச்சியில் டாலிகானி தலைமை வகித்தார். டாலிகானி காலமானதும் மக்கள் தங்களுக்கு வழிகாட்ட கோமேனி பக்கமே திரும்பினர். பாரிஸிலிருந்தபடியே ஈரானில் கிளர்ச்சியை ஊக்குவித்து டேப்களில் தமது சொற்பொழிவுகளை அனுப்பி வைத்தார். ஈரானிய மன்னர் உயிருக்கு அஞ்சி ஓடிப் போனார். இரண்டு வாரம் சென்று கோமேனி ஈரான் திரும்பிய போது பத்து லட்சம் மக்கள் அவருக்கு வரவேற்பளித்தனர்! கடைசி காலம் வரை ஈரான் மன்னருக்கு அடைக்கலம் தந்த அமெரிக்காவின் விரோதியாகவே வாழ்ந்தார். போதாக்குறைக்கு ஈராக்கின் படையெடுப்பு வேறு. கோமேனி திருப்பித் தாக்கினார். இந்த யுத்தத்தையும் மதச் சார்புள்ளதாக்கி 'ஒரு புனித யுத்தம்' என்றார். எட்டு ஆண்டு யுத்தம், பத்து லட்சம் மக்களைப் பலி வாங்கியிருக்கிறது. ரசாயனப் போர்க் கருவிகள் பயன்படுத்தப்பட்டு, ராணுவத்தினருக்கும் மக்களுக்கும் சொல்லொணாத் துன்பம் ஏற்பட்டது!

* ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? 'அறுபது நாட்களுக்கு ஒரு முறை பதிவேட்டில் கையெழுத்துப் போட்டு விட்டால் போதும், ஜெயலலிதா, எம். எல். ஏ. பதவியைப் பறி கொடுக்க வேண்டாம்' என்று குமரி அனந்தன் கூறுகிறாரே?

* சேடு



* எம். பி. ஸீட்



! பதவியைப் பறி கொடுக்காமல் இருக்கலாம்; ஆனால் கடமையைப் பறி கொடுத்தவராகி விட்டார்!



* 60 நாட்களுக்கு ஒரு முறை......

என் உயிர்த் தோழன்

அத்தியாயம் 10
சந்தைக் கடையில் காந்தக் குரல்

மனம். விவகாரமான மனம். எதை யாவது வாங்கிப் போட்டுக் கொள்கிறது. தானே வளர்த்துக் கொள்கிறது. பின் தவிக்கிறது. ஆளை ஒரு நிலை இல்லாமல் ஆக்கி விடுகிறது.

சிட்டுவுக்கு அவள் மனம் கட்டுப்படவில்லை. மூர்க்கமாகவே இருந்தது. தென்னவன் தன் மனத்தில் இறைத்து விட்டுப் போன கனவுகளை எண்ணங்களில் கோத்துக் கோத்துச் சிதறவிட்டு அலை பாய்ந்து கொண்டிருந்தாள்.

'அய்யா... கிருஷ்ணரே! நீ எங்கய்யா இருக்கே! ஒரிஜினல் கிருஷ்ணன் இப்படிப் பண்ணினா அது லீலை... நீ பண்ணினா அது விளையாட்டு... இல்லே!'

சிட்டுவுக்குள் சிக்கிக் கிடந்தான் தென்னவன். தனக்குள் புதைந்து போயிருந்த எண்ணங்களிலிருந்து தானே தப்பிவர முடியாதது போல் இருந்தாள். இது அவஸ்தைதான். தேவையுள்ள அவஸ்தைபோல் இருந்தது.

தன்னிடம், 'நாடகமாடி விட்டுப் போய் விட்டானே!' எங்கும் எதிலும் அவனாகவே தெரிந்தான்.

சிட்டுவின் மாற்றத்தைப் பார்த்த அப்பாவுக்குக் கூட அவள் மனநிலை புரியவில்லை.

பத்து தடவை சொன்னால் ஒரு தடவை சரியாகச் செய்வாள். குழம்பு கேட்டால் ரசம். மோர் கேட்டால் குழம்பு. பரிமாறுவதில் கூடக் கவனம் பிசகி இருந்தாள்.

நாடகக்காரர்கள் போய் நான்கு வாரம் ஆகி இருந்தது. அத்தனை நாளும் சிட்டு வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள்.

வீரப்ப அய்யனார் கோவிலில் வந்து நின்றாள். 'இதுதான் அவருக்குத் திருஷ்டி சுற்றிப் போட்ட இடம்! யாருமில்லாதப்ப இந்த எடத்துலதான எங்கிட்டத் தனியாப் பேசினாரு!'

''சிட்டு:.. மத்த எதுவுமே பிடிக்கலே, எனக்கு உன்னைத் தவிர!''

''எனக்கு எல்லாம் புடிக்குது உன்னையும் சேர்த்து!'

'விளையாட்டுக்குத்தானே சொன்னே அப்படி?'

'இல்லெ, நெசமாத்தான்!'

'அப்ப இந்த மரம் செடி கொடி, உங்க வீடு மாடு மாதிரிதான் நானும்!'

'புரியாத ஆளய்யா நீ... யோசிக்க மாட்டே...! உனக்கு அதுங்க அப்படித்தான் தெரியும். எனக்கு எல்லாமே நீயாத் தெரியுது. அதான் அப்படிச் சொன்னேன்!'

'— விவரமாத்தான் பேசறே!'

'— மனசுல உள்ளதைத்தான் சொல்றேன். கூட்டிக் குறைச்சுப் பேச நான் என்ன நாடகக்காரியா என்ன...!'

'—ஏன், நாங்க பொய்யா சொல்லுவோம்...?'

'— இல்ல... பல பொம்பளைங்க கூட பழகுற ஆளுங்க... நிமிஷத்துக்கு ஒண்ணுன்னு நிறம் மாறலாமில்லே...!'

'—மாறுகிறவனுக்குப் பேரு மனுஷன் இல்லபுள்ளே! தென்னவன் அப்படிப்பட்ட ஆளுமில்லே!'

— கொஞ்சம் சத்தமாகவே அவன் பேசியது போல் இருந்தது.

அந்த இடம் இப்போது அவளுக்கு வெற்றிடமாய்க் காட்சி அளித்தது. நதி ஓரத்தில் நடக்க ஆரம்பித்தாள்.

'சிட்டு... நீ பயப்படுவியா?'

'மாட்டேன்!'

'எதுக்குமே பயந்ததில்லே?'

'இல்லே! சின்ன வயசுல என்னை அழ வைக்கப் பூச்சாண்டி எல்லாம் காட்டுவாங்களாம்... நான் சிரிச்சுக்கிட்டே இருப்பேனாம்!'

— 'சரிசரி கண்ணை மூடிக்க!'

'ஏன்?'

'மூடிக்கயேன் சொல்றேன்!

'மனசுக்குள்ளேயே இருவது வரைக்கும் எண்ணிட்டு அப்புறமா கண்ணைத் தொறந்து பாரு!'

எண்ணிக் கொண்டாள். கண்ணைத் திறந்தாள். தென்னவனைக் காணவில்லை. தேடினாள்.

'— யோவ்... எங்கய்யா போனே!'

அவளுக்கு நீண்ட நேர தண்டனை. மனம் அடித்துக் கொண்டது.

இப்ப நீ பயந்துட்டே இல்லே...!' கடவுள் அவதாரம் போலப் பிரசன்னமானான் தென்னவன்.

'இப்ப நீ பயந்துட்டே இல்லே...சொல்லு!'

'நீ ஒளிஞ்சதுக்குப் பயப்படலய்யா... பாம்பு பொழங்குற எடம்... நீ பாட்டுக்கு என்னைப் பயமுறுத்தறேன்னு பதுங்கி, உனக்கு ஒண்ணு ஆயிடுச்சின்னா...?'

பாரதிராஜா

அந்தப் பயம்தான் எனக்கு!'
கட்டிப் பிடித்துக் கொண்டான்.


சிட்டுவுக்குத் தென்னவன் பேசியது—நாடகம் நடத்தியது—கற்பனையாய் வந்தது—நிஜமாய்த் தெரிந்தது. அவளுக்குள் ஒரு ரசவாதமே நிகழ்ந்தது.

அவள் தனக்குத் தானே பேசிக் கொண்டாள். அது கொஞ்சம் சத்தமாகி விட்டது போலிருந்தது. பார்த்தாள். யாராவது எதையாவது நினைத்துக் கொள்ளப் போகிறார்கள். தாமரையாக இருந்தால் கேட்கவே வேண்டாம். துளைத்து விடுவாள். பீடாவில் நூலெடுத்து வலை தயாரித்து வீழ்த்தி விடுவாள்.

'ஊரு வாயுஞ் சரி... அவ ஒருத்தி வாயும் சரி...!'

சிட்டு தன்னை அமைதிக்குக் கொண்டு வர முயற்சி செய்தாள். ஆனாலும் யோசனையின் கொக்கிகள் அவளைக் கவ்விப் பிடிக்கத்தான் செய்தன.

'சிட்டு... நிசமாச் சொல்லு... நீ குடுத்த பீடாவை நான் போட்டதுக்கு அப்புறம் என்னை நீ பாத்தே இல்லே...!'



'போய்யா... பீடாவுக்கு அப்புறந்தான் என்னைய உனக்குத் தெரிஞ்சது இல்லே!'

'ம்... ஏரியண்டயே கண்டுபிடிச்சிட்டேன்! சும்மா விட்டுப் பாத்தேன்... நிலவு தானா வருதா... நாமதான் தேடிப் போவணுமான்னு! அதான் பேசாம இருந்தேன்!'

'பரவாயில்லியே...! நாடகக்காரருன்றது சரியாத்தானே இருக்கு... நல்லா பேசறியே!'

'பேசறதுக்கு என்ன புள்ளே...! நம்ம நாட்லபேசினாப் போதும்... எதையும் சாதிச்சிடலாம்... தெரியுமில்லே...!'

'அப்ப நீயும் பேசித்தான் சாதிக்கப் போறே... அதானே!'

'நம்ம மூலதனம் நாக்கு... அத சொழட்டி விட்டு சோம்பேறித்தனமாக்க முடியாத அளவுக்கு சுடுகொடுக்கற மூளை... அப்புறம் துணைக்கு நீ... உலகத்தையே வளைச்சிப் போட்டுட மாட்டேன்!'

'பெரிய ஆளுதான்யா நீ!'

'நான் சின்னதா இம்புட்டுண்டுதான். சிட்டு! நீ கூட சேர்ந்தேன்னு வச்சுக்க... கோபுரமாயிடுவேன்!'

'உன்னையவே நெனைக்க வச்சுட்டே... இனிமே உன்னை விட்டுப் போயிடவா முடியும்...? ஏய்யா... கண்ணு கலங்காம என்னைய வச்சிக் காப்பாத்துவே இல்லே!'

'இல்ல... கண்ணு கலங்கும்... அப்படித்தான் உன்னை வச்சிருப்பேன்!'

'என்னய்யாச் சொல்றே?'

'பின்ன... உன்னை அன்பால சொக்க வச்சி, ஒரு வேலை செய்ய வைக்காம ஒரு கஷ்டத்தை நெருங்க விடாம என் ராசாத்தி மாதிரி பாத்துக்கப் போறேன்! அப்ப ஒரு வாட்டியாவது கண்ணு கலங்கி அய்யாவ பாராட்ட மாட்டே!'

சிட்டு உண்மையிலேயே கலங்கி விட்டாள். அவனைக் கட்டிப்பிடித்துத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

'ஏய் சிட்டு... என்னடி தனியா உட்கார்ந்து அழுதுக்கிட்டிருக்கே! கிறுக்கச்சியாடி நீ...?'

தாமரை கூப்பிட்ட போதுதான் சிட்டு சராசரிக்கு வந்தாள்.

'ச்சே! இதெல்லாம் கனவா...! எவ்வளவு அற்புதமாக இருந்தது!'

இன்னும் அந்த அதிர்வுகள் அவளுக்குள் நீடித்தன.

"சிட்டு...! சிட்டக்கா...! நான்தாண்டி உன் சிநேகிதி வந்திருக்கேன்!"

"தாமரை... எப்ப வந்தே?"

"உச்சி சூரியன் உன் வீட்டுக்குள்ளே இருந்தப்பவே வந்தாச்சு... பாரு... இந்த எடம் எம்மாம் நிழலாயிடுச்சி... சூரியன் தான் ரொம்ப தூரம் போயிடுச்சி... சரி... நீயாவது நிதானத்துக்கு வருவே, பேச

லாம்னு பாத்தா சட்டு புட்டுன்னு எறங்க மாட்டேங்கிறியே! அப்படி எங்கடி இம்புட்டு தூரம் போனே?!!'

சிட்டு வெட்கப்பட்டாள்

''ம்... நானும்தான் எனக்கும் ஏதாவது கனவு வரும்... ஏதாச்சும்சிக்குமான்னு பாக்கு றேன்... வர்றது எருமைமாடும், கழுதையும் தான்! கோட்டு சூட்டு போட்டவன் எவன் வரான்...! தம்மாத்தோண்டு கோவணத் தோடதான் எல்லாப் பயலும் தெரியறா னுங்க!''

தன் 'பலவீனமான கனவுகளை'ச் சொல்லி வருத்தப்பட்டாள் தாமரை.

''தாமரை... நீ எனக்குச் சிநேகிதி மட்டு மில்லே... அக்கா மாதிரி... பேசாம இரு... உன்னையக் கரையேத்தறது எம் பொறுப்பு.''

''முதல்ல நீயேறு... அப்புறம் எனக்குக் கைகொடுப்பே!'' — தாமரை கிண்டல் செய் தாள்.

''தா... சொல்ல வந்ததை மறந்துட்டேன்! எதுக்க உன் அய்யாவ பாத்தேன். அதான் பொதுத் திண்ணையாண்ட உட்கார்ந்து ஏதோ பாடம் நடத்திக்கிட்டிருக்காரு... 'ஸ்கோலு'க்குதாம் புள்ளைங்க போவலைன் னாலும் வயசானதுங்க அவருகிட்ட வந்திடு துங்க! அவரு பேசறது நம்ம 'அதுகளுக்கு' எங்க புரியப் போவுது!'' தாமரை அவர்களை அஃறிணையாக்கிக் கொண்டிருந்தாள்.

''சிட்டு என்னமோ விசனமா உட்கார்ந் திருக்கா... சந்தைக்குக் கிந்தைக்குப் போனீன்னா கூட்டிக்கிட்டுப் போன்னு சொன் னாரு! வர்றியா சிட்டு?''

சிட்டுவுக்குப் போக வேண்டும் போல் இருந்தது.

''இரு... தாமரை... வர்றேன்... ஆமா... போவும் போது உன்கிட்ட ஒண்ணு கேக்க ணும்!''

''பேச்சுல எம்புட்டு வேணாலும் கேளு... ஒண்ணு, ரெண்டுன்னு துட்டுலகேட்றாதே...! முடிஞ்சி வச்சிருக்கிறதே மூணோ என்ன மோத்தான்! அங்க போயி யாரையாவது புடிச்சி, மோரை வித்துத்தான் மத்ததைப் பாக்கணும்!''

சிட்டு சிரித்து விட்டாள்.

'மடைதிறந்த வெள்ளம் போல எப்படித் தாமரை பேசிக் கொண்டே இருக்கிறாள்!' யோசித்தபடியே தயாரானாள்.

சந்தனத்தேவன்பட்டிக்கு எட்டு கல் தொலைவில் சந்தை கூடுகிறது.

நகரத்தின் நாகரிகப் பொருட்களில் ஏறக் குறைய பாதி அங்கே அரங்கேறிவிடும். மாட்டுச் சந்தையும் உண்டு! 'மைக்கு' அலறும். வாய்களும் கூட.

கிராம மக்களுக்குச் சந்தைக்கு வருவது பெரிய விசேஷத்துக்குப் போய் வருவது மாதிரி. பலாச்சுளை வாங்கிச் சாப்பிடுவது. பெரிய பொருட்களை வாங்குவது மாதிரி.

நிறையக் குழந்தைகள் அப்பாவின் தோளில் அமர்ந்து கொண்டு ஐஸ் குச்சி யுடன் இருக்கும்.

எண்ணெய் தலை வடியப் பெண்கள் பரபரப்புடன் சுற்றிக் கொண்டிருப்பார்கள். மாட்டு வண்டிகளில் வரும் ஜனம் வேறு.

புதிய சீட்டிப் பாவாடை சப்தமிட ஒற்றை, இரட்டை, ஜடைப் பின்னல்களும் உண்டு.

சில 'ஊமை காகங்கள்' மௌனக் காதல் செய்யும் இடமாகவும் அது அமையும்.

அந்த இடத்தில் 'பொருள் விற்பனை' மட்டுமல்ல. 'மணபரிவர்த்தனை'யும் உண்டு.


தன் ஊர் ஆளுக்குத் தெரிந்து விடக் கூடாது என்பதில் கவனத்துடன் இருப்பார் கள்.

பட்டை ஜரிகைத் துண்டுகளோடு சுற்றும் மைனர்களும் உண்டு. செயின். (அதில் புலி நகம்!) சிகரெட் கட்டு. பளபளக்கும் செருப்பு. ஆடி அசைந்து நகர்ந்து எதையாவது விலைபேசி யாரையாவது (!) பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

இந்த வாரச் சந்தைக்கு வருபவர்கள் 'ஐந்தாண்டுத் திட்டம் போல' சினிமா புரோ கிராம் போட்டுக் கொண்டும் வந்து விடுவ துண்டு.

ஒரு காட்சி பார்த்து விட்டால் போதும். ஊர் போய்ச் சேரும் வரை கொரிக்கத் தீனி வேண்டியதில்லை.

சிட்டுவும் தாமரையும் நடந்தனர்.



— எஸ். கந்தசாமி



"மாப்பிள்ளைக்கு 'விரல் சுத்தின்'னு லெட்டர் வந்திருக்கு....!"

"சந்தோஷ சமாசாரம்தான். இன்னும் கொஞ்ச நாள் மோதிர விஷயத்தைத் தள்ளிப் போடலாம்...!!!"

வாளாடி பிச்சை.

தாமரையின் கையில் கூடை இருந்தது. தலையில் மோர் பானை. மோரை விற்பாள். சில சமயம் போய்ச் சேர்வதற்குள் அவளே ஒரு வெறியுடன் குடித்துத் தீர்த்தும் விடுவாள்!

சிட்டு மறுபடியும் மயக்கத் தவமானாள். யோசனைகள். எங்கே போய்விட்டான் அவன்...?

சுமந்து சென்ற தாமரையைவிட வெறும் கைவீசிச் சென்ற சிட்டுவுக்குப் பாரமாக இருந்தது. அது தென்னவனின் பாரம்தான். இல்லை, அவன் காற்றுப் போலத்தான். அவன் ஊதிவிட்டுப் போனவைதான் கனக்கின்றன.

அடிக்கடி தாமரை கூப்பிட்டு அவளை இயல்புக்குக் கொண்டுவர முயற்சி செய்தாள். சிட்டு மெல்லப் பேச்சை ஆரம்பித்தாள்.

"சந்தை மட்டுமில்லேன்னா நம்ம சனங்களுக்கு அங்கே இங்கே போக எடமே இருக்காது. இல்லே, தாமரை!"

"ஏன் வசதி உள்ளவங்க டவுனுக்குப் போயில்ல ரெண்டு காட்சி மூணு காட்சின்னு சினிமா பாத்துட்டு வர்றாங்க...? உன்னையும் என்னையும் போலவா...? உன்னைய உன் அப்பன் அனுப்பாது... என்னைய என் வறுமை விடாது!"

"தாமரை... ஒரு நாளு நீயும் நானும் யாருக்கும் தெரியாம டவுனுக்குப் போயி ஜாலியாச் சுத்திட்டு வருவமா?"

"போவலாம்... வர முடியாது! ஊரு எல்லையிலயே நம்மள நிக்கவச்சி பஞ்சாயத்துல கண்டதைப் பேசித் தந்தி அடிச்சிடுவாங்க..."

"போயி பாத்துட்டுத்தான் வருவமே?"

"சிட்டு... பொம்பளைக்குத் துணிச்சல் இருக்க வேண்டியதுதான். ஆனா அது அளவுக்கு மீறி இருக்கக் கூடாது. வயசு நெனைக்கிறது எல்லாம் மனசுக்குப் பொருந்தாது புள்ளே! நாளைக்குத் தாலின்னு ஒண்ணு கழுத்துல விழுந்திடுச்சின்னா அவனைக் 'கூட்டிக்கிட்டுப் போயா'ன்னு சொல்லு. கூட்டிக்கிட்டுப் போறான். புரியுதா?"

தாமரையின் வார்த்தைகள் சிட்டுவுக்குத் தென்னவனை ஞாபகப்படுத்தின.

"பரவாயில்லே... நீ விவரமான ஆளுதான் தாமரை...!"

"பொட்டச்சி விவரமா இருந்தா மட்டும் போதாது சிட்டு... கவனமாவும் இருக்கணும்! அது உன் மேலே அடிக்கிற காத்தானாலும் சரி.... உன் மேல ஆசை வைக்கிற ஆளா இருந்தாலும் சரி...!"

"பத்து புள்ளையப் பெத்தவ மாதிரி இல்ல பேசறே! ஆனா... இவ்வளவு பேச உனக்கு எப்படி வருது?"

— அவளைக் கேட்ட சிட்டுவுக்குச் சட்டென முகம் மாறியது. தாமரை சொன்ன பதில் அவளுக்கு ஏறவே இல்லை.

அவள் வார்த்தைகளைச் சக்தி இழக்கச் செய்வது போல் இருந்தது தூரத்திலிருந்து வந்த அந்தக் குரல்.

அது தென்னவனின் குரல்தான்!!

அதே தொனி — சப்தம் — வார்த்தைப் பிரவாகம் — நயம். நிச்சயம் தென்னவனின் குரல்தான்.

காணாமல் போய் விட்டானே என நினைத்தவளுக்கு அவன் குரல் காற்றில் தூது அனுப்புவது போல் இருந்தது.

அவன் பேச்சு ஏதோ விளம்பர விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருந்தது.

சிட்டுவின் கண்கள் பிரகாசமாயின. அவள் தாமரையின் கையை இறுக்கிப் பிடித்தாள்.

"தாமரை... இந்தக் குரலைக் கேளு! உனக்கு யாருன்னு தெரியுதா?"

அவளுக்கு எல்லாச் சப்தங்களும் ஒன்றாகவே கேட்டன. சிட்டுவைப் பார்த்துச் சிரித்தாள்.

"சந்தைக் கடையில் வந்து இந்தக் குரல் கேக்குதான்னா நான் எந்தக் குரலைச் சொல்லுவேன்? ஆயிரம் சப்தம் வர்ற எடத்துல உனக்கு மட்டும் அப்படி என்னடி தனியாக் கேக்குது?"

அது தென்னவனின் குரலேதான்.

அவள் கால்கள் வேகமாயின. மனம் அதை முந்திக் கொண்டிருந்தது.


"ஏய் சிட்டு, இருடி... என்னைய விட்டுட்டு எங்கேடி வேகமாப் போறே?"

தாமரையின் பானையிலிருந்து மோர் தளும்பியது. அவள் குரல் சிட்டுவுக்குக் கேட்கவில்லை.

குரல் வந்த திசையை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருந்தாள் சிட்டு...!

(தொடரும்)

டி.வி.யில் 21ஆ… நூற்றாண்டுத் திரைப்படம்!



ஒட்ட மறுத்த குரல்!

○○ தொலைக் காட்சிக்காகப் பாரதியாரைப் பற்றிய செய்திப் படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தோம். 'டப்பிங்' குரல் கொடுத்த நபர் ஒரு காட்சியில் 'வந்தே மாதரம்' என்று கூற வேண்டியிருந்தது. ஆனால் அவரால் படக் காட்சியோடு பொருந்தும்படி சரியான நேரத்தில் அதைக் கூற முடியவில்லை. காட்சிக்கு முன்பாகவோ அல்லது பின் தள்ளியோ கூறி வந்தார். அதனால் ஒன்று, இரண்டு, மூன்று என்று நாங்கள் எண்ணிக் கொண்டே வருகையில், ஆறு, ஏழு வரும் போது 'வந்தே மாதரம்' சொல்லுங்கள் என்று அவரிடம் கூறினோம். டேக்கின் போது கண்ணாடி அறையிலிருந்து நாங்கள் கை விரலில் ஆறு ஏழு என்று சைகை காட்ட, அவரும் சப்தமாக ஆறு, ஏழு என்று குரல் கொடுத்தாரே பாருங்கள். எங்கள் அனைவரின் சிரிப்பலையும் அன்று ஓயவேயில்லை.

— மூர்த்தி ரமேஷ், சென்னை — 30.

இது கூடத் தெரியாதா…?

○○ சமீபத்தில் என் அண்ணா பெண்ணுக்குக் கல்யாணம் நடந்தது. முகூர்த்தம் முடிந்து, பிற்பகல், எங்கள் உறவினர் வீட்டுக் குழந்தைகள் இருவர், எனக்கும் உனக்கும் கல்யாணம் என்று மணமக்கள் கழற்றிய வாடிய மாலைகளை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த அவர்களுடைய பெற்றோர்கள், ''உங்களுக்கு இப்பவே கல்யாணம் செய்து விடுகிறோம். எங்களுக்குச் செலவு மிச்சமாகும். கல்யாணம் செய்து கொள்கிறீர்களா?'' என்று விளையாட்டாகக் கேட்டதற்கு, அந்தச் சிறு பெண், ''அட இது கூட உங்களுக்குத் தெரியாதா? 'பெண்ணுக்குப் பதினெட்டு வயது, ஆணுக்கு இருபத்தோரு வயது. வேண்டாம் திருமணம் அதுவரை எங்களுக்கு'' என்று சொன்னவுடன் எனக்குச் சிரிப்புத் தாங்கவில்லை.

— ஆர். பத்மா, சென்னை — 61.

''நல்லாயிருக்கு நியாயம்!''

○○ கிராமத்திலிருந்து எனது பாட்டி வந்திருந்தார். அப்போது ஒருநாள் டெக் வாடகைக்கு எடுத்து, படம் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தோம். அச் சமயம் என் தாயாரின் அண்ணன் வந்து ஏதோ முக்கியமான விஷயம் பேச வேண்டுமென்று கூறவே, டெக்கை அணைத்து விட்டு, அவர் கிளம்பிச் சென்றதும், மீண்டும் படம் பார்த்

தோம்.

சில நாட்கள் கழித்து ஞாயிற்றுக் கிழமை டி.வி.யில் படம் பார்த்துக் கொண்டிருந் தோம். அப்போது என் பாட்டியின் தம்பி அவரைப் பார்த்துப் பேச வந்தார். உடனே நாங்களும் டி.வி.யின் ஒலியை குறைத்து வைத்து விட்டு, தொடர்ந்து படம் பார்க்க ஆரம்பித்தோம். வந்ததே என் பாட்டிக்குக் கோபம், "அந்தப் படத்தை இப்பவே பாத் தாகணுமா! கொஞ்சம் நேரம் அணைச்சு வச்சுட்டு, அப்புறம் பார்க்கறதுதானே?" என்றார். உடனே என் அம்மா, "இல்ல அத்தை! அதுக்குள்ள பாதிப் படம் முடிஞ்சு போயிடும்" என்றார். அப்போது பாட்டி, "நல்லாயிருக்குதே உன் நியாயம். உங்கண் ணன் வந்தப்ப மட்டும் படம் முடிஞ்சு போகாம நின்னுகிட்டிருக்கும். இப்ப மட்டும் நிக்காம முடிஞ்சு போயிடுமாக் கும்?" என்றாரே பார்க்கலாம்.

— எஸ். சங்கீதா, மதுரை — 20.

ருகாவட் கேலியே கேத் ஹை!

00 தோழியைப் பெண் பார்க்க டில்லி யிலிருந்து மாப்பிள்ளை வந்திருந்தார். மாப் பிள்ளை வீட்டாருக்கு எதிரில் நாங்களனை வரும் ('பெண்' உள்பட) அமர்ந்திருந்தோம். என் தோழிகளில் ஒருத்தி 'பெண்'ணைச் சற்று மறைத்தவாறு அமர்ந்திருந்ததால் மாப் பிள்ளையால் சரியாகப் பெண்ணைப் பார்க்க இயலவில்லை. அவர் சற்றுச் சங்கட மாக நெளிந்ததிலிருந்து இது தெரிந்தது. இதைக் கவனித்த நான், தோழியிடம் நகர்ந்து உட்காரும்படி காதோடு சொன் னேன். அவள் சட்டென்று 'ருகாவட் கேலியே கேத் ஹை' என்று ஹிந்தியில் சப்தமாக மாப்பிள்ளையிடம் கூறியபடி நகர்ந்து உட்கார்ந்தாள். மாப்பிள்ளை முகத் தில் வெட்கம் கலந்த புன்னகை!

மாப்பிள்ளை வீட்டார் பாக்கு, வெற் றிலை மாற்றிக் கொண்டு போனபின், அந்த 'மறைத்த' பெண்ணைச் சூழ்ந்து கொண்டு அவள் ஹிந்தியில் கூறியதற்கு அர்த்தம் கேட்டோம். "டில்லி டி.வி.யில் 'தடங்க லுக்கு வருந்துகிறோம்' என்பதற்கு 'ருகாவட் கேலியே கேத் ஹை' என்று கார்டு போடு வார்கள். மாப்பிள்ளைக்கு ஹிந்தி தெரியுங் கிறதால் யாருக்கும் தெரியாமல் தடங்க லுக்கு வருந்தினேன்" என்றாள் அவள்!

— பத்மா ராகவன், மேல்மங்கலம்.

இன்ப அதிர்ச்சியும் இன்னொரு அதிர்ச்சியும்

00 (எதிரொலி நிகழ்ச்சியில்)

உதவியாளர்: கோவை பாமா, மதுரை மங்கை, திருநெல்வேலி தீபா ஆகியோர் எழுதியிருக்கிறார்கள். சென்ற ஞாயிறு திடீ ரென கமலின் 'அபூர்வ சகோதரர்கள்' திரைப்படத்தை ஒளிபரப்பி எங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி விட்டீர்கள். இது போன்ற இன்ப அதிர்ச்சிகளைத் தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

இயக்குநர்: நாங்களும் அதிர்ச்சியில்தான் இருக்கிறோம். நிலையத்தில் இமாலயத் தவறு நடந்து விட்டது. ஜெமினியின் 'அபூர்வ சகோதரர்கள்' திரைப் படத்திற் குப் பதிலாக கமலின் 'அபூர்வ சகோதரர் கள் தவறுதலாக ஒளிபரப்பாகி விட்டது. 21—ஆம் நூற்றாண்டில் ஒளிபரப்பாக வேண்டிய படத்ினை இப்போதே ஒளி பரப்பக் காரணமாக இருந்த நிலைய ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது போன்ற தவறுகள் இனி நேராது என்று உறுதி கூறுகிறேன்.

— எஸ். பிரியதர்சினி, பாளையங் கோட்டை.

கையில் வெண்ணெய் இருக்க....

நம்ம சோனியா காந்தி டி.வி.யே பார்க்க மாட்டாங்க! ஏன் தெரியுமா?

அவங்கதான் ராஜீவ் காந்தியை நேரி லேயே பார்த்துடறாங்களே!

— எஸ். தீபா, பாளையங்கோட்டை.

அதெல்லாம் அந்தக் காலம்!

00 கடந்த 4.6.1989 அன்று 'அந்தமான் காதலி' திரைப் படத்தை டி.வி.யில் பார்த் துக் கொண்டிருந்தோம். அதில் சுகுமாரி ஓர் இடத்தில் 'பணத்தால் கேவலம் தலை யிலிருந்து உதிர்ந்து போன ஒரு முடியைக் கூட ஒட்ட வைக்க முடியாது!' என்று உணர்ச்சி பொங்க வசனம் பேசினார்.

எங்களோடு படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த என் நண்பன் உடனே, 'அதெல்லாம் அந்தக் காலத்தோட போச்சு. இப்பல்லாம் பணத்துக்காக, 'உதிர்ந்த ரோமங்கள்' ஒண்ணொண்ணா தானா வந்து ஒட்டிக்குது தெரியுமில்லே?' என்று தற்கால அரசியலை மனத்தில் வைத்துச் சட்டென்று ஒரு 'கமெண்ட்' அடித்தான். சிரிப்புக்குக் கேட்பானேன்!"

— இரா. இராகவன், மேல்மங்கலம்.



வட்டமேஜை

பாவம் சார், பிரதமர்!



* 'கடலுக்குள் எண்ணெய் கண்டெடுக்கும் வித்தை!' செய்தியை ஏற்கனவே படித்திருந்தோம் என்றாலும், இவ்வளவு தூரம் விரிவாகத் தெரிந்து கொள்ளவில்லை என்பது உண்மை. சிறப்புமிகு கட்டுரை தந்த 'கல்கி'க்கு என் பாராட்டுக்கள்.

மதுரை — 9. பிரபாகர் ப்ரியன்.

* புனிதன் எழுதிய ''அது வேறு ஜாதி'' என்ற கதை சிறியதாய்த்தான் இருந்தது என்றாலும் இதில் சொன்ன கருத்துக்கள் பெரியவை. மீனா, ராஜி இவர்



களின் கதாபாத்திரங்கள் என்னால் மறக்க முடியாதவை. பாராட்டுக்கள் பல.

சென்னை — 23. சிவாஜிபாபு.

* இங்கிலீஷ் மீடியமா? தமிழ் மீடியமா? என்ற சர்ச்சை மிகவும் நன்றாக இருந்தது. 'டாக்டர் மா. நன்னன் அவர்களின் பல கேள்விகளுக்குச் சரியான, நேரடியான பதிலை திருமதி மோகனா சொல்லவில்லை; அப்பொழுது தமிழ் தலையை நிமிர்த்திக் கொண்டது. ஆனால் திருமதி மோகனா அவர்கள் கேட்ட ஒரே ஒரு கேள்வியால் தமிழ் தலை தாழ்ந்தது. கவிழ்ந்தே விட்டது!

விழுப்புரம். கோ. பாலசுப்ரமணியன்.

* தேர்வு முடிவுகள் வெளிவந்து மாணவமணிகள் மேற்கொண்டு எந்த மீடியத்தில் பயில்வது எனத் திணறிக் கொண்டிருக்கும் வேளையில் தங்களது அட்டைப் படக் கட்டுரை மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் மகிழ்ச்சி.... இருப்பினும் மாணவச் செல்வங்கள் ஆங்கில மீடியத்திலேயே படிப்படியாகப் படித்து முன்னேறுவதே உசிதம். ஏனெனில் தமிழுக்குத் தமிழகத்தில் சரியான மதிப்புத்தரப் படுவதில்லை. (உ-ம்) எனது தோழி பி.ஏ. முதல் வகுப்புத் தமிழில் தேர்ச்சி பெற்று எம்.ஏ. சேர சென்னையில் 12 கல்லூரிகளில் மனு செய்தும் இடம் கிட்டவில்லை. ஆனால் அவளே ஆங்கில மீடியத்தில் அதைப் பயின்றிருந்தால் இந்தியா முழுவதிலுமுள்ள எந்தக் கல்லூரிகளிலாவது சேர்ந்து படிக்கும் வாய்ப்பு உள்ளதல்லவா...

மேல்பட்டி. விழியரசி.

* இந்த வார அட்டைப்படம் படுஜோர்! அசத்தி விட்டார் யோகா. பேராசிரியர் நன்னன், திருமதி மோகனா சந்திரசேகர் விவாதமும் சூடாக இருக்கிறது. இருப்பினும் முடிவில்லாத விவாதம்தான்.

சென்னை — 45. பா. சித்தார்த்தன்.

* பெரிய அரசியல்வாதிகளை டைரி எழுதச் சொல்வது நல்ல ஐடியாதான்... ஆனால் டைரியில் உண்மை யைத்தான் எழுதி வைப்பார்களென்பது என்ன நிச்சயம்?

சென்னை — 23. த. சத்திய நாராயணன்.

* மாமியார் — மருமகள் உறவென்பதே, எலியும், பூனையும் போன்ற பகையாளி உறவாகக் கருதப்படும் போது மகளாக நினைத்து அவளுக்கு மறுமணம் செய்து வைத்த அந்த மூதாட்டியை மையமாக வைத்து விமலா ரமணி அவர்கள் எழுதியிருந்த, 'தப்பிய தலைமுறைகள்' என்ற சிறுகதை மிகவும் நன்றாக இருந்தது.

சிறுமுகை. ஜி. கதிரேசன்.

* பாவம் சார் நமது பிரதமர்! கல்கியின் தலையங்கத்தில், கார்ட்டூனில் மட்டுமல்ல; டீ.வி விடியோ பக்கங்களிலும் அடிக்கடி மாட்டிக் கொண்டு விழிக்கிறாரே!

'அடுத்த இதழில்'.... என்ற பகுதி ஆவலை அதிகரிக்கச் செய்கிறது. அதில் இன்னும் கொஞ்சம் கூடுதலான தகவல்களைத் தரக் கூடாதா!

முடிகண்டநல்லூர். க. ராஜேந்திரன்.

* பஞ்சாயத்து ராஜ் விவகாரத்திற்கு டீ.வி.யின் ஒத்து ஊதலையும் — பிரதமர் டீ.வி.யை அரசு இலாகாவாக இயக்குவதையும் வெளிப்படையாக, மிக தைரியமாகத் தலையங்கம் எழுதிய பெருமை கல்கியையே சாரும்.

திருச்சி — 2. ஆற்காடு எழிலன்.

* 11.6.89 இதழ் தலையங்கம் ராஜீவுக்கு ஒரு சவுக்கடி! மக்கள் மனத்தில் உள்ளவற்றை அப்படியே பளிச்சென விளக்கி விட்டீர்கள்!

மங்கநல்லூர்பஜார். எஸ். பாலமுருகன்.

* 'சம்பந்தி விடு' நாயகி லதா இந்நேரம் தனிக்குடித்தனமே போயிருந்தாலும் போயிருப்பாரே! என்ன ஷண்முகன் சார் நான் சொல்வது சரிதானே?

'கடலுக்குள் எப்படி எண்ணெய் எடுக்கிறார்கள்?' என்று எத்தனையோ தடவை நான் புரியாமல் யோசித்ததுண்டு. கல்கியின் வண்ணப்படக் கட்டுரை சுவாரஸ்யமாக நல்லதொரு நியூஸ்ரீல் போல அவற்றையெல்லாம் விளக்கி, வியக்க வைத்துவிட்டது.

மங்கைநல்லூர். ஆர். செல்வராணி.

விவாதத்துக்கு ஒரு முடிவுரை:

தாய்ப்பால் வேண்டாம் என்பதா? புட்டிப்பாலே சிறந்ததென நம்புவதா?

தமிழா, ஆங்கிலமா? எந்த மொழியில் பள்ளிக் குழந்தைகளுக்குப் பாடம் போதிப்பது?

சந்தேகமில்லாமல் தாய் மொழியில்தான் குழந்தைகள் கல்வி கற்க வேண்டும். அந்நிய மொழியில் குழந்தைகள் பாடம் படிக்க வேண்டும் என்பதை உலகில் எந்த ஒரு கல்வியாளனும் ஒப்புக் கொள்ளவே மாட்டான். குழந்தைக்குத் தாய்ப்பால் வேண்டாம்; புட்டிப் பால்தான் சிறந்தது என்று யாரேனும் கூறலாமா?

நன்னனுடைய பேரக் குழந்தைகள் ஆங்கில மீடியம் பள்ளியில் படிப்பதற்கு அவரையும் மீறிய பல காரணங்கள் இருக்கலாம். 'அது விவாதத்துக்கு அப்பாற்பட்ட விஷயம்' என்று நன்னன் தெரிவித்துள்ள கருத்து சரியானது. பொதுவாக, மோகனா, நன்னன் இருவருமே தத்தமது வாதங்களைத் திறம்படச் சமர்ப்பித்துள்ளனர். இருவருமே பள்ளிப் படிப்பு தாய்மொழியில் அமைவதுதான் சரி என்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

ஆனால் தமிழ் மீடியத்தில் படித்தால், எதிர்காலத்தில் அறிவியல் நுணுக்கங்களை அறிந்து கொள்ளத் தேவைப்படும் போது சிரமமாக இருக்கும் என்பதால் பல மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் ஆங்கில மீடியத்தையே தேர்ந்தெடுக்கின்றனர். தமிழில் அறிவியல் நுணுக்கங்களைப் போதிக்கப் போதிய அளவு வசதியில்லை என்ற மோகனா சந்திரசேகரின் கருத்தும் சரியானதே.

இதற்கு என்னதான் முடிவு? இந்நிலை மாற என்ன வழி? தமிழில் பாடப் புத்தகங்களையும் கலைச் சொற்களுக்கு அகராதிகளையும் உருவாக்கிக் கொண்டிருப்பது அல்ல! இந்த வழியில் தமிழை வளர்க்க முடியாது. அகராதியில்தான் சொற்கள் இருக்குமே தவிர வழக்கில் வராது. வேறென்ன செய்வது? ஆங்கிலப் பாட நூல்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு வகுப்புக்களில் உபாத்தியாயர்கள் அறிவியல் விஷயங்களைத் தமிழில் விளக்கிக் கூற வேண்டும். கலைச் சொற்களை மொழி பெயர்க்காமல் அப்படி அப்படியே தமிழில் ஒலிக்கச் செய்ய வேண்டும். நாளடைவில் அந்தக் கலைச் சொற்கள் தமிழாகவே ஆகிவிடும்! அதன் பிறகு பாட நூல்களைத் தமிழில் எழுதுவதும் அவற்றைப் படிப்பதும் பரீட்சை எழுதுவதும் சுலப சாத்தியமாகிவிடும்.

மாணவர்களுக்கும் ஆங்கிலத்தில் உயர் கல்வி மேற்கொள்ளும் போது கலைச் சொற்களைப் புரிந்து கொள்வது இலகுவாக இருக்கும். இதர விஞ்ஞானிகளுடன் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வது சிரமமாகவே இராது. இந்த நிலை உருவாகும் போது, ஒருவர் கூட ஆங்கில மீடியத்துக்கு ஆசைப்பட மாட்டார்கள்.

ஆங்கிலமே இந்த மாதிரி வளர்ந்த ஒன்றுதான். நமக்குக் கிழக்கிலும் மேற்கிலும் பல நாடுகள் இந்த வழியைக் கையாண்டு துரித முன்னேற்றம் கண்டிருக்கின்றன. ஏன் இந்தியைக் கூட இந்த விதமாகத்தான் இப்போது வளர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள்!

பலப்பல ஆண்டுகளுக்கு முன்பாகவே ராஜாஜி சுட்டிக் காட்டிய இந்த வழியை, நாம் உடனே பின்பற்றித் தமிழை வளர்க்காமல் போனோமானால் நஷ்டம் நமக்குத்தான், தமிழுக்குத்தான்.

மொழி என்பது விஷயஞானம் பெறுவதற்கு உரிய ஒரு கருவியேயன்றி அதுவே முடிந்த முடிவல்ல. தமிழின் தூய்மை கெடாமல் காப்பாற்றுகிறேன் என்று கூறி அதனைத் துரிதமாக வளர விடாமல் செய்பவர்களே தமிழின் முதல் எதிரிகள்!

— ஆசிரியர், கல்கி.





இன்னர் ஸ்பேஸ்

விண்வெளி வித்தைகளைத் தொடர்ந்து காட்டி வந்துள்ள ஸ்பீல்பெர்க் அளிக்கும் இன்னுமொரு அதே பாணி விஞ்ஞானப் படமோ என்று யோசிக்க வைக்கிற தலைப்பு.

ஆனால் வித்தியாசமாக, கொஞ்சம் கம்ப்யூட்டர் விஞ்ஞானம் — கொஞ்சம் ஜேம்ஸ் பாண்ட் பாணி நிகழ்ச்சிகள் — கொஞ்சம் உடற்கூறு சாஸ்திரம் — கொஞ்சம் காதல்— கொஞ்சம் ஊடல் — கொஞ்சம் விட்டலாச் சாரியாவின் ஃபார்முலா...! இவற்றின் கலவையாக வாய் விட்டுச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைப் படைப்பு 'இன்னர் ஸ்பேஸ்.'

விஞ்ஞானப் பரிசோதனைக்கு உடன்படும் பெண்டல்டன், தான் அமர்ந்துள்ள உள்வெளிக் கலத்துடன் கடுகைவிடச் சிறியதாகச் சுருக்கப்பட்டு, சோர்வும் விரக்தியும் நிறைந்துவிட்ட ஜாக்கின் உடலுக்குள் ஊசி மூலம் செலுத்தப்படுவதிலிருந்து கடைசியில் அவனுடைய தும்மலின் மூலம் வெளியே வந்து விழும் வரை ஒரே பரபரப்பு என்றால்,

மனவலிமை இல்லாத, அதனால் தோல்வியைத் தவிர வேறெதையும் அடையாதவனாக, விரக்தி நிறைந்துவிட்ட ஜாக், தன் உடலுக்குள் உலா வரும் பெண்டல்டன் தரும் ஊக்கத்தினால் உத்வேகமடைந்து கிளர்ந்தெழுபவனாக மாறும் நிகழ்ச்சிகள் ஒரே சிரிசிரிப்பு.

நிர்ணயிக்கப்பட்டபடி முயலின் உடலினுள் செலுத்தப்பட்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் பெண்டல்டன் முதல்முறையாக மனித உடலினுள் இருப்பதை உணரும் போது அதிர்ச்சியடைந்து, தன்னை வெளிப்படுத்தும் முயற்சியில் அந்த மனிதனுடன் உள்ளிருந்தபடியே பேசத் தொடங்க —

அருகில் இருப்பவர்களிடம் எல்லாம், "நீங்கள் பேசினீர்களா?" "பேசியது நீங்களா?" என்று ஜாக் கேட்கும் போதும், பின்னர் தன் காதினுள்தான் யாரோ பேசுகிறார்கள் என்பதை உணர்ந்து, தன்னுள் ஏதோ ஆவி வந்து குடியேறி விட்டதாக எண்ணி நடுங்கும்போதும் ஒரே கலகலப்பு.

ஜாக்கின் உடலுக்குள் உள்வெளிக்கலம் பளிச்சென்று முன் விளக்குகள் ஒளி வீசப் பயணிப்பதும் —

ஜாக் கதாநாயகி லிடியாவை முத்தமிட, அதனால் அவன் இதயம் படபடக்க, உடலினுள் ரத்தம் உஷ்ணமடைந்து அலை புரண்டு ஓட, அதன் காரணமாக உள்வெளிக் கலம் தத்தளிப்பதும் —

உடலினுள் சிக்கிக் கிடக்கும் பெண்டல்டனுக்கு மது தேவைப்படுகிறது என்பதற்காக ஜாக் பாட்டிலுடன் விஸ்கியை வாயினுள் கவிழ்த்துக் கொள்ள, உணவுக் குழாயின் அடிப் பகுதியிலிருந்து மேல் நோக்கிய காட்சியாக அது தொண்டையினுள் தெறித்துக் கொட்டுவதும் —

'அய்!' என்று சின்னக் குழந்தையைப் போல வியக்க வைக்கும் படப்பிடிப்பு.

கட்டுக்கோப்பான கதையமைப்பு.

கலகலப்பான வசனங்கள்.

புரிந்தவர்களுக்கு நகைச்சுவை விருந்து.

புரியாதவர்களுக்கு விஞ்ஞான விருந்து.

தொழில்நுட்ப மசாலா.

— சி. ஆர். கே.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: டி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



Enterprise/GS/153Tm

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

